கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

247

மார்கழி
01.12.2024

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



ஈழக்கவி/ இ.இராஜேஸ்கண்ணன் / கோகிலா மகேந்திரன்/ மலரன்னை/
சியாமிளா யோகேஸ்வரன்/ காரைக்கவி கந்தையா பத்மானந்தன்/ அ.பௌநந்தி/
ஜலீலா முஸம்மில்/ இ.ரவிகாந்தன்/ எம்.கே.முருகானந்தன்/ செண்பகன்/ செல்வகலா/
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்/ வ.ந.கிரிதரன் / தமிழ்க்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2024 - மார்கழி (01.12.2024)

# பொருளடக்கம்

## சிறுகதைகள்

மலரன்னை - 17

சியாமிளா யோகேஸ்வரன் - 21

அகரா - 32



## கவிதைகள்

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் - 16

அ.பௌநந்தி - 20

ஜலீலா முஸம்மில் - 20

இ.ரவிகாந்தன் - 25

எம்.கே.முருகானந்தன் - 44

செண்பகன் - 48

செல்வகலா - 48



## கதையில்லாக் கதைகள்

கொற்றை பி.கிருஷ்ணானந்தன் - 37

## தொடர் நாவல்

வ.ந.கிரிதரன் - 38

தமிழ்க்கவி - 45

## கட்டுரைகள்

**நுஃமானிசம் :**
**முற்றுப் பெறாத விவாதங்கள்**
ஈழக்கவி - 03



**அப்பாவின் வேட்டியும்**
**அம்மாவின் பாவாடையும்**
இ.இராஜேஸ்கண்ணன் - 26



**முடிவைத்தொடுவாய் முயன்று** - 12
கோகிலா மகேந்திரன் - 37

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2024 மார்கழி இதழ் - 247**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசிர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## விருது மழையில் ஜீவநதி வெளியீடுகள்

ஜீவநதியின் வெளியீடாக வெளி வந்த நூல்கள் பல, இந்த ஆண்டு பல விருதுகளைப் பெற்று மகிழ்வை உண்டாக்கி உள்ளன. தேசிய சாகித்திய அரச இலக்கிய விருது விழாவில் தமிழ்க்கவியின் "காடுலாவு காதை" - நாவல், மலரன்னையின் "மூச்சு" - சிறுகதைத்தொகுதி முதலிடம் பெற்றுள்ளன. மேலும் புனிதவதி சண்முகலிங்கத்தின் "ஆனந்தக்கூத்து" - நாடகம், கோகிலா மகேந்திரனின் - "குடும்பம் ஒரு கதம்பம்" - நானாவிதம், தாட்சாயணியின் "மீனவபுரத்து இளவரசி" - சிறுவர் இலக்கியம், புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் "அன்றலர்ந்த மலர்கள்" - சுய திறனாய்வுத்துறை, தெணியானின் "வெளியில் எல்லாம் பேசலாம்" - சிறுகதை , திக்வெலகமாலின் "காகிதக்காடு" - கவிதை ஆகிய நூல்கள் சான்றிதழ்களைப் பெற்றுள்ளன.

வடமாகாண சிறந்த நூல் பரிசுகளை, சிவ ஆரூரனின் "துரியோதனன் துயரம்" - நாவல், மு.அநாதரட்சகனின் "பின் தொடரும் வலி" - சிறுகதை, சந்திரிக்கா தர்மரத்தினத்தின் "கூடி வாழ்வோம்" - நாடகம், கோகிலா மகேந்திரனின் "குடும்பம் ஒரு கதம்பம்" - சமூகவியல், தாட்சாயணியின் "மீனவபுரத்து இளவரசி" - சிறுவர் இலக்கியம் ஆகிய பிரிவுகளுக்காக பெற்றுள்ளன. விருதுகள் படைப்பாளிக்கு மேலும் உந்துதலைக் கொடுக்கின்றன. அனைத்து படைப்பாளிகளுக்கும் ஜீவநதியின் வாழ்த்துக்கள்.

தேசிய சாகித்திய விருது விழா 27.11.2024 அன்று நடைபெற்றது. இந்த விழா முன்னர் ஒரு திகதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போதிலும் தேர்தல் காரணமாக திகதி மாற்றப்பட்டது. கார்த்திகை 27 ஆம் திகதி தமிழர் வாழ்வில் முக்கியமான ஒரு நினைவேந்தல் நாளாக அமைவது அனைவரும் அறிந்ததே. தமிழ் மக்களின் விடியலுக்காக தமது உயிரைத் தியாகம் செய்த உன்னத ஆத்மாக்களை வணங்கி அவர்களுக்கு தமிழ் மக்கள் அஞ்சலி செலுத்தும் நாள். மேலும் தமிழர்கள் வீடுகள் சோகத்தில் ஆழ்ந்து இருக்கும் நாளாக கார்த்திகை 27 அமைந்து தமிழர் முகங்கள் எல்லாம் சோகம் குடி கொண்டிருக்கும் நாள். அந்த நாளை தவிர்த்து இவ்வாறான நிகழ்வுகளை நடாத்துவது சாலச் சிறந்தது. மக்களுக்காக தமது உயிரைத் தியாகம் செய்தவர்களை என்றும் நாம் மறக்க இயலாது. மேலும் நாவலுக்கான விருதைப் பெற்ற தமிழ்க்கவியும், சிறுகதைக்கான விருதைப் பெற்ற மலரன்னையும் தமது பிள்ளைகளை தமிழர் விடுதலைக்காக பலி கொடுத்தவர்கள். அன்றைய தினம் அவர்களது உள்ளம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்குமா? அல்லது தமது பிள்ளைகளின் நினைவில் தோய்ந்து அழுமா? என்பது கேள்வியே. இனிவரும் காலங்களில் குறித்த நாளில் இவ்வாறான நிகழ்வுகளை தவிர்த்து கொள்ள வேண்டும் என அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- க. பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுஃமானிசம் : முற்றுப்பெறாத விவாதங்கள்

2024 - பேராசிரியர் எம். ஏ. நுஃமானுக்கு வயது 80 அதன் நிமித்தம் எழுதப்பட்ட ஈழக்கவியின் சிறப்புக் கட்டுரை

நுஃமான் என்ற பெயர் நான் ஏழாம் எட்டாம் வகுப்புகளில் கற்கின்ற காலத்தில் எனக்குள் பதியமாயிற்று. எழுபதுகளின் நடுப்பகுதியில் என்னிரு சகோதரிகளும் கொழும்பு, யாழ் பல்கலைக்கழகங்களில் பயின்றுக் கொண்டிருந்தனர். பல்கலைக்கழக விடுமுறையின் போது அவர்கள் வீட்டுக்கு வந்தால் பல்கலைக்கழக சங்கதிகள் பற்றி கதைப்பார்கள். குறிப்பாக குசினியில் வேலை செய்கின்ற பொழுது இலக்கியம் (கவிதை, நாவல்), சினிமா, அரசியல் என்று இன்னோரன்ன விடயங்கள் பற்றி விமர்சனப்பூர்வமாக விவாதிப்பார்கள். நான் "ஒரு கண்விடுக்காத ஒரு பூனைக் குட்டியாய்" (நுஃமான் கவி வரி) ஓர் ஓரமாக நின்று இவற்றினை கேட்டுக்கொண்டிருப்பேன். யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்றுக் கொண்டிருந்த என் இளைய சகோதரி (மும்தாஜ் பேகம்) "நுஃமான்" என்ற பெயரை அடிக்கடி பயன்படுத்துவ தனை அவதானித்திருக்கிறேன். அவரது தமிழ் கற்பிக்கும் நுட்பம் பற்றியும் அவரது கவிதைகள் பற்றியும் அவர் தமிழ்பெயர்த்த பலஸ்தீன கவிதைகள் பற்றியும் சிலாகித்து பேசக்கேட்டிருக்கிறேன். இப்படித்தான் நுஃமான் என்ற பெயரையும் அவரது புலமைத்துவத்தையும் அறியமுடிந்தது. அக்காலம் தொட்டு இன்று வரை ஒரு தவிர்க்க இயலாமை யுடன் நுஃமான் அவர்களது எழுத்துக்களை வாசித்து வருகின்றேன். அவரது பிரதிகளை படிப்பது, அவை பற்றி எழுதுவது, அவற்றினை அடுத்தவர்களுக்கு அறிமுகம் செய்வது என் விருப்புக்குரியதாயிற்று. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக என்னிடம் தமிழ் கற்கின்ற மாணாக்கருக்கு (உயர்தரம், பட்டப் படிப்பு) பேராசிரியர் நுஃமான் அவர்களது "அடிப்படைத் தமிழ் இலக்கணம்" என்ற நூலை வாங்கி வைத்திருக்கிறேன். நுஃமான் அவர்களது எழுத்துக்களை தொடர்ச்சியாக படிக்கையில் அவை எனக்குள் ஒரு இசமாக/இயமாக பரிமாணமடைந்து, நுஃமானிசமாக பரிணமித்துநிற்கின்றது. "முற்றுப்பெறாத விவாதங்கள்"(2023) என்ற நேர்காணல் தொகுப்பில் "நுஃமானிசத்தை" அவரது வாக்குமூலமாக நோக்க முடிகின்றது.

ism என்ற ஆங்கிலப் பதம் இயல் அல்லது வாதம் என தமிழ் பெயர்க்கப்படுகிறது. இசம் படைப்பின் மூன்று அம்சங்களான காலம், வெளி, பாத்திரங்கள் (மேற்கத்திய இலக்கியத்தின் இலக்கிய வரையறைகளைப் பேசும் அரிஸ்டோடிலின் (Aristotle; 384-322 BC) கவிதையியல் (Poetics) காலம், வெளி, பாத்திரங்கள் என்ற மூன்றும் முக்கியமானவை என்கிறது) என்பன ஒரு படைப்பிற்குள் எவ்வாறு இருக்க வேண்டும் எனப் பேசுகின்றது. மனிதனை அல்லது மனிதனின் சாராம்சத்தை எவ்வாறு படைத்துக் காட்ட வேண்டும் என்று பேசுவதில் தான் இசங்கள் வேறுபடுகின்றன. உலகெங்கிலும் படைப்பு ரீதியாகவும் படைப்பு சார்ந்த சித்தாந்தங்கள் ரீதியாகவும் பிரமிக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. மார்க்சிசம், யதார்த்தம், சோஷலிஸ யதார்த்தம், மிகை யதார்த் தம், மாயாஜால யதார்த்தம், இருத்தலியம், ஃபிராய்டியம், அமைப்பியல், பின் அமைப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம் என்று பலவித கருத்தாக்கங்கள்/ இசங்கள் இலக்கிய உலகைப் பெருமளவு மாற்றங்களுக்கு உள்ளாக்கி யப்படி இருக்கின்றன. இலக்கிய ரீதியாக முக்கியமானதாகக் கருதப்படக்கூடிய எல்லா மொழிகளிலும் இந்த மாற்றங்களை உணர்த்தும் பதிவுகள் இருக்கின்றன. தமிழும் இதற்கு விதிவிலக்கு அல்ல. தமிழ்ப் படைப்புலகம் வெளிக்காற்றை சுவாசிக்கவோ மாற்றங்களுக்கு உள்ளாகவோ இல்லை என்று சொல்லிவிட முடியாது என்கிறார் அரவிந்தன். மேலும் அவரது விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. ஆனால் பாதிப்புகள், மாற்றங்கள் எல்லாமே ஒரு சிறிய வட்டத்திற்குள் அல்லது சில சிறிய வட்டங்களுக்குள் அடங்கியிருக்கிறது. இந்த வட்டத்தை (அல்லது வட்டங்களை) சேர்ந்தவர்கள் மண்டையை உடைத்துக் கொண்டு யோசிப்பதும் விவாதிப்பதும் (சில சமயம் இந்த விவாதங்கள் சண்டைகளாக மாறுவதும்) படைப்புகளில் இவை ஏற்படுத்தும் தாக்கங்களும் தமிழ்ச் சமூகத்தின் மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான பகுதிகளைச் சென்று அடையவேயில்லை. பசுவய்யாவின் (சுந்தர ராமசாமி) கொள்கை கவிதை கூறுவது போலத்தான் இருக்கிறது தமிழ்ச் சூழல்.

மேற்கே/ ரொமாண்டிஸம்/நாச்சுரலிசம்/
ரியலிஸம்/ அப்பால்/இம்பிரஷலிஸம்
என் மனைவிக்குத்/ தக்காளி ரஸம்

கவிதையில் வரும் மனைவிக்கும் சராசரி தமிழ் வாசகனுக்கும் அதிக வித்தியாசமில்லை. பார்க்கப்போனால் இது போன்ற இஸங்கள் எல்லாமே இலக்கிய வெளிப்பாட்டையும் புரிதலையும் செழுமைப்படுத்தக் கூடியவை. அந்த வகையில் வாழ்வு பற்றிய புரிதலைக் கூர்மைப் படுத்தக் கூடியவை (பார்க்க, இந்திய டுடே இலக்கிய ஆண்டு மலர் 1996 6, 7).

"எல்லா சித்தாத்தங்களையும்/ இசங்களையும் வழி பாட்டு ரீதியில் அன்றி, விமர்சனக் கண்ணோட்டத்தில் அணுக நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்" என்ற பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்களது கருத்தியலே "நுஃமானிசமாக" வெளிப்பட்டுள்ளது. இலக்கியத்தில் "இசங்களைப்" பற்றிய தன்னுடைய பார்வையை ஒரு நேர்காணலில் பின்வருமாறு உரைத்துள்ளார்: ""இசங்கள்" என்பது அறிவுத் துறைகளை, சமூகக் கோட்பாடுகளைக் குறிக்கின்றது. இவை சமூக இயக்கங்களின் உடன் விளைவுகள். வாழ்க்கையை மட்டு மின்றி, இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கும், இலக்கியம் பற்றிய நமது பார்வையை வளப்படுத்துவதற்கும் இலக்கியப் படைப்பை மேற்படுத்துவதற்கும் இந்த இசங்கள் வெவ்வேறு அளவில் உதவுகின்றன என்றே நான் கருதுகின்றேன்" ("முற்றுப் பெறாத விவாதங்கள்" 2023: 117). இதனைதான் அவரது எழுத்துகள் நிகழ்த்திக்காட்டியிருக்கின்றன. "முற்றுப்பெறாத விவாதங்கள்" என்ற நேர்காணல் தொகுப்பு இதனை துல்லியமாக படம்பிடித்துள்ளது.

பேராசிரியர் நுஃமான் அவர்களது "தனி வழி" பற்றி, பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் எழுதிய வரிகள் இவை: "நண்பர் பேராசிரியர் நுஃமான் அவர்களின் பிறந்த நாள் (10.08.1944 2024 – வயது 80) இந்த நாளில் நிறைய நண்பர்கள் மாணவர்கள் அவரை வாழ்த்தி அவரது சேவைகளையும் நினைவு படுத்திப் பாராட்டி இருந்தார்கள். நானும் அவற்றில் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி. பேராசிரியர்களான க. கைலாசபதி, கா.சிவத்தம்பி பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக தமிழ் இலக்கியக் கல்வி மரபைப் பிரதிநிதிப்படுத்தும் முக்கியமான ஆளுமை என்று பலர் பாராட்டி எழுதி இருந்தனர். இதையெல்லாம் அந்த மனிதன் எவ்வளவு கூச்சத்தோடு பார்ப்பார் என்று எனக்குத் தெரியும். சிறந்த ஆசான்களிடம் கல்வி கற்பதும் பழகக்கிடைப்பதும் எவ்வளவு பெரிய பேறு என்பதை நாம் அறிவோம். அது அவருக்கும் வாய்த்திருந்தது. அதனால் நண்பர்களின் அந்தக் கூற்றுக் களில் தவறுகள் இல்லை. நுஃமானை இனங்காண முற்படு வோர் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய பல பல அளவீடுகளில் அது முக்கியமானது. ஆனால் நுஃமானின் வழி தனி வழி. அவரது ஆக்கங்கள், உரைகள், சிந்தனைகள் மூலம் அது அவரது தனித்துவமான பாதையாகிவிட்டது. அவர் ஒரு கவிஞர், தமிழறிஞர், மொழியியலாளர், ஆய்வறிவாளர், விமர்சகர், இலங்கையின் முக்கியமான அறிவுஜீவி. நவீன யுகத்தை அல்லது நவீன சிந்தனைகளைப் பிரதிபலிப்பவர் பகுத்தறிவுக்கு உரிய இடம் தருபவர் இஸ்லாத்தில் நவீன கருத்துக் களை ஆதரிப்பவர் என்றும் விரிவாகப் பார்க்கலாம். அவரது ஆசான்களின் பாதிப்பு எப்படி இல்லாமல் போகும். மார்க்சிய சிந்தனை, இடதுசாரிப் பார்வை, மறுபுறமாக அடிநிலை மக்கள், அரச ஒடுக்கு முறை, ஒடுக்கப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்ணியம், பற்றிய உறுதியான நிலைப்பாடு என்பவற்றைத் தவிர்த்து நுஃமானை எப்படிப் பார்ப்பது?" (எம்.எஸ்.எம்.அனஸ் முகநூல்: 11.08.2022).

இலக்கியத்தின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி நோக்கும் முழுமையான இலக்கியக் கோட்பாடு கள் என்று எவையும் இல்லை. அவ்வகையில் இலக்கியத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதில் எல்லாக் கோட்பாடுகளும் வெவ்வேறு அளவில் நமக்கு உதவ முடியும். ஒரு இலக்கியக் கோட்பாட்டை மட்டும் உயர்த்திப் பிடிப்பவர்கள் யானை கண்ட குருடர்கள் போல் இலக்கியத்தின் ஒரு அம்சத்தைத்தான் பார்ப்பார்கள். பல இலக்கியக் கோட்பாடுகள் அறிந்திருப்பது இலக்கியத்தின் பன்முகத் தன்மையைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும் என்பதே எனது புரிதல் (2023: 37). பேராசிரியர் நுஃமான் அவர்களது இசங்களைப் பற்றிய இப்புரிதல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை அவதானிப்போம்.

**ஒன்று. மார்க்சிசம்**

ஆய்வறிவுப் பாரம்பரியத்தில் அமைப்பு முறைமை களைக் கட்டியெழுப் (System builders) பியவர்களில் இறுதி யானவர் கார்ல் ஹென்றிச் மார்க்ஸ் (1818 – 1883) ஆவார். பொருளாதாரம், கலாசாரம், மெய்யியல், விஞ்ஞானம், கருத்தியல், சமூகவியல், உளவியல், முறையியல், வாழ்வு நோக்கு, மனித இயல்பு, மனித மையவாதம், இருப்பியல் அனைத்திலும் அவரது சிந்தனைச் செல்வாக்கு காணப்படுகிறது. சமூகக் கோட்பாடு, வரலாற்று மெய்யியல், மெய்யியல், ஒழுக்கவியல், பொருளியல், பொருள் முதல் வாதம். கருத்து முதல் வாதம் போன்ற ஆய்வுகளில் அவரது சிந்தனை பாரிய மாற்றங்களைத் தோற்றுவித்தன. அவரது விமர்சனப் பார்வையும் அவர் அறிமுகப்படுத்திய அல்லது பயன்படுத்திய முறையியலும் யதார்த்தவாதி, நடைமுறைவாதி என்ற அவரது நிலைப்பாடுகளும் இம்மாற்றங்களுக்கு அவரைத் தூண்டினவாயினும் அவரது மனித விடுதலை நோக்கு இவை எல்லாவற்றிற்குமான அடிப்படைப் பொருளாக வும் அவரது சிந்தனையை திசைமுகைப்படுத்தும் ஆற்றலாக வும் இருந்துள்ளது (பார்க்க, எம்எஸ்.எம்.அனஸ் "மெய்யியல் கிரேக்க மெய்யியல் முதல் தற்காலம் வரை" 2006: 157).

மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்றவர்களால் கட்டமைக்கப் பட்ட மார்க்சிய மெய்யியல் பற்றி "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" (1987: 119–171) என்ற நூலில் நுஃமான் விமர்சன நுண்ணாய்வோடு விளக்கியுள்ளார்.

1. மார்க்சியப்பார்வைவட்டம்குறுகியதும்இயந்திரப்பாங்கானதுமா?
2. மார்க்சியம் காலவதியாகிப் போன ஒரு தத்துவமா?
2.1 வாழ்நிலையும் உணர்வும்
2.2 சமூகமாற்றமும் சிந்தனை மாற்றமும்
2.3 உற்பத்தி உறவும் சமூக உறவும்
2.4வர்க்கப்போராட்டமும் சோசலிசமும்
2.5 மார்க்சிமும் விஞ்ஞானமும்
3. மார்க்சியம் மூடுண்ட வளர்ச்சி மறுக்கப்பட்ட தத்துவமா?

போன்ற பொருண்மைகளில் விரிவாக விவாதித்துள்ளார். "மார்க்சிசம் ஒரு புறம் வெறும் சமரசவாதமாகவும், இன்னொரு புறம் வறட்டு விஞ்ஞானவாதமாகவும் வழி தவறிப் போயிருக்கிறது. மார்க்சிச நடைமுறை ஒரு புறம் வஞ்சகமான நிறுவனவாதமாகவும், மறுபுறம் இரத்தம் படிந்த பொய்மை நோக்கி மக்களை அழைத்துச் செல்வதாகவும் மாறியிருக் கிறது. அச்சுறுத்தும் இந்தத் திருப்புமுனையில் வாழும் சுதந்திர ஆய்வாளன் ஒருவனின் முதற்கடமை எல்லாத்துறை களிலும் மார்க்ஸின் அசலான நிலைப்பாடுகளை மறுபடியும் நிறுவுவதும் வளர்ச்சி பெறச் செய்வதுமாகும்" என்று "மார்க்ஸிய அழகியல் : ஒரு முன்னுரை" (தமிழ் பெயர்ப்பு சுகுமாரன் 1985: 7) என்ற நூலில் மலையாளக் கவிஞர் செ.சச்சிதானந்தன் எழுதியுள்ளார். கறாரான பார்வையில் என்னை ஒரு மார்க்சிய விமர்சகன் என்று சொல்ல முடியாது. மார்க்சியக் கோட்பாடு இலக்கியத்தின் சமூக வேர்களை, அதன் வர்க்க அடிப்படைகளை, அதன் சமூகப் பயன் பாட்டைப் புரிந்துகொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும் எனக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் உதவியிருக்கிறது (2023: 36) எனக் குறிப்பிடும் நுஃமான், மார்க்சிசத்துக்கு தரும் விளக்கம் இது: "மார்க்சியம் உலகளாவிய ஓர் சிந்தனை முறையாகும். இனம், மொழி, மதம், தேசம் கடந்த பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் பற்றி அது பேசுகிறது. முழுமையான மனித விடுதலை பற்றிப் பேசுகிறது. அதற்கான வழி முறைகளைப் பற்றிப்பேசுகிறது. அவ்வகையில் இது உலகை முழுமையாகப் புரிந்துகொண்டு அதை மாற்றியமைக்க முனையும் தத்துவமாகும் (2023: 136). மார்க்சிசம் பற்றிய தன்னுடைய கருத்தியலை/ புரிதலை மிகத்தெளிவாக நேர்காணல்களில் தெரியப்படுத்தியுள்ளார்.

(மா) என்னை முற்றிலும் மார்க்சியராக அடையாளப்படுத்த முடியுமா என்று தெரியவில்லை. மார்க்சியக் கோட்பாட்டை – அதன் தத்துவத்தை, அரசியலை, சமூகவியலை – நான் ஓரளவு கற்றிருக்கிறேன். அதன் செல்வாக்கால் இடதுசாரிப் பார்வை உடையவனாக இருக் கிறேன். எனினும், மார்க்சியத்தை ஒரு மத நம்பிக்கைபோல் இறுகப் பற்றுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. எல்லாக் கோட்பாடுகளையும் விமர்சனப்பூர்வமாக நோக்க வேண்டும் என்பதே என் கருத்து. அது மார்க்சியத்துக்கு மட்டும் பொருந்தாதது அல்ல. கார்ல் மார்க்சின் கருத்தும் அதுவாகத் தான் இருக்கும் என்று நினைக்கிறேன். இன்றையச் சூழலில் மார்க்சியத்தின் பொருத்தப்பாடு பற்றிய கேள்வி எத்தகைய பின்னணியில் எழுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சோவியத் யூனியனின் உடைவுக்குப் பிறகு, சீனா முதலாளித்துவப் பாதையைத் தேர்ந்து கொண்டதன் பிறகு, உலகெங்கும் வர்க்கப் போராட்டம் பின்தள்ளப்பட்டு இன, மத, சாதி முரண்பாடுகளும் மோதல்களும் மேற்கிளம்பிய பின்னணியில் உலகமயமாக்கல், புதிய உலக ஒழுங்கு என்பன மும்முரமாக மேற்கொள்ளப்படும் சூழ்நிலையில் இக்கேள்வி எழுகிறது. மார்க்சியம் காலாவதியாகிவிட்டது, வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுவிட்டது என்று வலதுசாரி புத்திசீவிகள் தொடர்ந்தும் குரல் எழுப்பிவருகிறார்கள். மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற இன்றைய சமூக அமைப்பை அவ்வாறே பேண விரும்புபவர்களின் கருத்து அது. மார்க்சியம் சமூக மாற்றம் பற்றிய ஒரு சிந்தனை. எதிர்கால மனித சமூகம் பற்றிய உயர்ந்த இலட்சியங்களை அது முன்வைக்கின்றது. சுரண்டலற்ற, வர்க்க பேதம் அற்ற, சமத்துவமும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்பட்ட சமூகத்தை அது முன்மொழிகிறது. மனிதனின் பூரண விடுதலையே அதன் இலட்சியமாகும். இந்த இலட்சியம் இன்றைய உலகுக்குப் பொருத்த மற்றது என்று யாரால் கூறமுடியும்? இதை அடைவதற்கான வர்க்கப் போராட்டம், சோசலிசப் புரட்சி, பாட்டாளிவர்க்கச் சர்வாதி காரம் என்ற மார்க்சியப் பாதை தோல்வியடைந்து விட்டது என்றே நினைக்கிறேன். இதை அடைவதற்கான மாற்றுவழி என்ன? இந்த இலட்சியங்களை நோக்கி ஆளும் வர்க்கத்தைப் பணியவைப்பதற்கான தொடர்ச்சியான மக்கள் எழுச்சிகள் தேவை. தோல்வியடைந் தாலும் அரபு வசந்தம் அதையே நமக்குக் கோடிகாட்டு கின்றது. ஒரு சர்வாதிகாரிக்குப் பதிலாகப் பிறிதொரு சர்வாதி காரியை ஆட்சியில் அமர்த்து வதற்குத்தான் புரட்சியும் விடு தலைப் போராட்டமும் உதவுமானால் அதனால் மக்களுக்கு என்ன பயன்? இத்தகைய நிலையைப் புரட்சிக்கு முன்னர் கார்ல் மார்க்ஸ் கற்பனை செய்திருக்க மாட்டார் (2023: 56, 57).

(ர்) என்னை மார்க்சிய விமர்சகன் என்பதை விட நடுநிலையான விமர்சகன் என்ற அடையாளத்தையே பெரிதும் விரும்புவேன். மார்க்சிய விமர்சனத்தில் மேலோங்கி இருந்த வறட்டுப் போக்கை நான் தீவிரமாக விமர்சித் திருக்கிறேன் "மார்க்சியமும் இலக்கிய திறனாய்வும் என்ற நூல் அதன் விளைவுதான். இலக்கியம் பற்றிய விமர்சனப் பார்வைகளும் கொள்கைகளும் பல. அதில் ஒன்றுதான் மார்க்சியப் பார்வை. இலக்கியத்தின் சமூக வேர்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்ததில், இலக்கியத்தை உன்னத நிகழ்வாக அன்றிச் சமூக உற்பத்தியாக நிறுவியதில் மார்க்சியத்தின் பங்கு முக்கியமானது. ஆயினும் இலக்கி யத்தில் எல்லா அம்சங்களையும் அதனால் விளக்கி விட முடியும் என்று நான் நம்பவில்லை. பல்வேறு விமர்சனக் கொள்கைகளில் நமக்குப் பயனுள்ளவற்றை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றே கருதுகிறேன் (2023: 107, 108).

(க்) பொதுவாகவே இலக்கியத்தை ஒட்டிய மார்க்சியப் பார்வை ஒரு கட்டமைப்பிற்குள் இருப்பதாகவும் பிரச்சாரங்களை விரும்புவதாகவும் இருக்கிறது. மார்க்சியப் பார்வை கொண்ட நீங்கள் இன்றைய நவீன இலக்கியத்தையும் அதன் வளர்ச்சியையும் எப்படி சுவீகரித்துக் கொள்கிறீர்கள்?

இலக்கியத்தை ஒட்டிய மார்க்சியப் பார்வை ஒரு வட்டமைப்புக்குள் இருப்பதாகவும் பிரச்சாரங்களை விரும்புவ தாகவும் ஒட்டுமொத்தமாகக் கூறமுடியாது என்றுதான் நினைக்கின்றேன். தமிழிலே மேலோங்கியிருந்த வறட்டு மார்க்சியப் பார்வையின் எதிர் வினையாகவே இத்தகைய கருத்துருவாக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறலாம். "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" நூலில் இதுபற்றி விரிவாகவே விளக்கியிருக்கின்றேன். இலக்கியத்தை ஓர் அரசியல் ஆயுதமாக மட்டும். நோக்கியதன் விளைவு இது. மார்க்சியத்துக்கு மட்டுமின்றித் தேசியம், சாதியம் போன்ற எல்லா சித்தாந்தங்களுக்கும் இது பொருந்தும். இன்று தமிழ்த் தேசியப் பார்வை அல்லது தலித்தியப் தேசியம், சாதியம் போன்ற எல்லாப் பார்வையும் இலக்கியத்தை எவ்வாறு நோக்கு கின்றது என்பதை அவதானித்தால், நீங்கள் சொல்லும் மார்க்சியப் பார்வையுடன் ஒத்திருப்பதைக் காணலாம். மார்க்சியத்தை ஓர் அரசியலாக அன்றிச் சமூகக் கோட்பாடாக நோக்கினால் அதன் ஒளியில் இன்றைய சமூகத்தையும் அதன் கலாசார நடவடிக்கைகளையும் நாம் புரிந்துகொள்ள முடியும் என்று நினைக்கின்றேன். இன்றைய சமூகத்தைப் புரிந்து கொள்ளாமல் இலக்கியத்தையும் ஏனைய பண்பாட்டுக் கூறுகளையும் நாம் புரிந்துகொள்ள முடியாது. இன்றைய இலக்கியம் இன்றைய சமூகத்தின் உற்பத்தி தான். இன்றைய சமூகத்தின் பல்வேறு வளர்ச்சி நிலைகள், முரண்பாடுகள், மோதல்கள் எல்லாம் இன்றைய இலக்கியத்தில் வெளிப்பாடு கொள்கின்றன. மேலைச் சமூகங்களுக்கும் நமது சமூகங் களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் மூன்றாம் உலகத்தைச் சேர்ந்தவர் கள். மேலைச் சமூகங்களைப் போல் நவீனத்துவ அல்லது பின் நவீனத்துவச் சமூகங்களாக அன்றிப் பின்காலனித்துவச் சமூகங்களாகவே நாம் நம்மை அடையாளப்படுத்த வேண்டும். காலனித்துவ பண்பாட்டு நெருக்கடிகளுக்கு நாம் முகம் கொடுக்கிறோம். காலனித்துவ செல்வாக்கில் இருந்து நாம் இன்னும் முற்றாக விடுபடவில்லை. பதிலாகப் பண்பாட்டு ஏகாதிபத்தியத்தின் வலையில் நாம் இறுக்கமாகச் சிக் குண்டிருக்கிறோம். மரபுக்கும் நவீனத்துவத்துக்கும் இடையில் நாம் தத்தளிக்கின்றோம். இவற்றின் வெளிப்பாடாகவே இன் றைய இலக்கியத்தைப் புரிந்து கொள்கிறேன் (2023: 108, 109).

(சி) மார்க்சிய எழுத்தாளர்கள் பலர் நீங்களும் தான் ஒரு எல்லைக்கப்பால் அதிலிருந்து ஏன் வெளிவரு கிறார்கள்?

ஒருவர் ஒரு சித்தாந்தத்திலிருந்து இன்னொரு சித்தாந்தத்துக்கு மாறிச் செல்வது இயல்புதான். அதற்குத் தனிப்பட்ட புறநிலைக் காரணிகள் பல இருக்கலாம். மார்க்சியம் இதற்கு விலக்கல்ல. ஓர் எழுத்தாளர் மார்க்சியத்தி லிருந்து வெளிச்செல்கிறார் என்றால், அவருக்கும் மார்க்சியத் துக்கும் இடையே இருந்த ஒட்டுறவு, புனிதம் எத்தகையது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அவருக்குப் பின்னாலிருந்து இயங்கிய வெளிச்சக்திகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எத்தகைய பின்னணியில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்து வெளியேறினார் என்பதும் முக்கியமானது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்வாறு விலகிச் சென்றவர்களுக்கு மார்க்சியத்தோடு இருந்த ஈடுபாடும், புரிதலும் மேம்போக்கானது என்றே தெரிகிறது. ஆழ்ந்த தத்துவப் புரிதலின்பின் அவ்வாறு வெளியேறினார்கள் என்று கூற முடியவில்லை. தனிப்பட்ட அல்லது அரசியல் காரணிகளும் இவர்களுக்குப் பின்னால் செயற்பட்டிருக்கின்றன. வெளிச் சென்றவர்கள் வரிசையில் என்னையும் சேர்த்திருக்கிறீர்கள். நான் ஒருபோதும் எந்த ஒரு மார்க்சிய இயக்கத்துடனும் என்னை இணைத்துக்கொண்டு செயற்பட்டவனல்ல. தத்துவார்த்தரீதியில் மார்க்சியத்துடன் எனக்கு உடன்பாடு இருந்தது. இன்றும் பல அம்சங்களில் அந்த உடன்பாடு தொடர்கிறது. மார்க்சியம் பற்றிய எனது புரிதல் கட்சி மார்க்சியத்திலிருந்து வேறுபட்டது. "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" என்ற எனது நூலில் எனது புரிதல் தெளிவாக வெளிப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். மார்க்சியத்தை மதமாக வழிபடுவோருடன் எனக்கு உடன்பாடில்லை. மற்றும்படி, உலகைப் புரிந்துகொள்ளவும் மாற்றவும் உதவும் வலுவான சித்தாந்தமாக அது இன்றும் உள்ளது என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை (2023: 138).

(ச) இப்போதும் நான் மார்க்சியம் இறந்து போய்விட்டதாகச் சொல்லமாட்டேன். ஆனால், அரசியல் வன்முறை, ஆயுதப் புரட்சி போன்ற கண்ணோட்டங்களில் நம்பிக்கையிழந்து போய் விட்டேன். இவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டிய மனநிலையில் உள்ளேன். பல்வேறு நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறுகளையும் பார்க்கும்போது ஓர் உண்மை புலனாகின்றது. அரசியல் வன்முறையும், அரசியல் சகிப்புத் தன்மையும் சகவாழ்வு வாழ முடியாது. "Political violence and political tolerance can't co-exist." ரஷ்யப் புரட்சி ஆகட்டும், சீனப் புரட்சி ஆகட்டும் பல்வேறு தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் ஆகட்டும், வன்முறை அரசியல் என்று வரும்போது ஜனநாயகம், சகிப்புத்தன்மை என்பவற்றுக்கு அங்கே இடமில்லை... ஆயுதப் போராட்டம் மார்க்சியக் கோட்பாட்டின் ஒரு அம்சம் தான். இதர பல அம்சங்களும் அங்கேயுள்ளன. வன்முறை என்பது தவிர்க்க முடியாத ஒரு அம்சம் என்றவகையில் மார்க்ஸ் சொன்னாரே ஒழிய, வன்முறைதான் வேண்டும் என வலியுறுத்தி அவர் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. "புரட்சி என்பது ஒரு மருத்துவச்சி மாதிரி" என்றார். ஆயுதப் போராட்டம் இல்லாமல் சமூக மாற்றமொன்று நிகழுமாக இருந்தால் அவர் அதை நிராகரிக்கமாட்டார் என்றே நம்புகின்றேன். மார்க்ஸ் அதைச் சந்தோஷமாகவே ஏற்றுக் கொள்வார் (2023: 172, 173).

(ம்) வறட்டுத்தனமான மார்க்சியக் கண்ணோட்டத்திற்கு எதிராக நீங்கள் இருக்கின்றீர்கள். மார்க்சியக் கண்ணோட்டத்திலும் சரி அதற்கு எதிரான கண்ணோட்டத்திலும் சரி இலக்கியத்தை நோக்குவது இன்றைக்கு ஒவ்வாத ஒன்று. அது ஒரு Out of date என நாங்கள் நினைக்கின்றோம்.

சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னரும், அதை யொட்டி உலக நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் கருத்தில் கொண்டு நீங்கள் அவ்வாறு நினைக்கின்றீர்கள். அதற்காக மார்க்ஸின் சிந்தனைப் போக்கை உதறித் தள்ளிவிட வேண்டும் என்று சொல்லமாட்டேன். வறட்டுத்தனமான மார்க்சியக் கண்ணோட்டமும் அடிபட்டுப் போய்விட்டது. இங்கு 60, 70களில் நிலவிய அப்படியான ஒரு போக்கு இப்போது இருப்பதாகச் சொல்ல முடியாது. தமிழ் நாட்டில்கூட அவர்கள் இலக்கிய அந்தஸ்த்து, பலம் பெற்று விளங்கவில்லை. மார்க்சியத்துக்கு ஒரு வளமான பக்கமும் உண்டு. அதன் அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவது பயனுடையது (2023: 171, 172).

மார்க்சிசம் பற்றி நுஃமான் அவர்கள் நேர்காணல்களில் முன்மொழிந்துள்ள இக்கருத்துகளை "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். இந்நூலில் இடம் பெற்றுள்ள முதல் மூன்று கட்டுரைகளும் (மார்க்சியமும் இலக்கியத் திறனயாய்வும் சில குறிப்புகள், மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் இன்னும் சில குறிப்புகள், ரகுநானின் சிலப்பதிகார ஆராய்ச்சி) இன்று மார்க்சியத் திறனாய்வில் மோலோங்கியுள்ள வறட்டு வாதத்தை விமர்சிக்கின்றன. நான்காவது கட்டுரை இலக்கியத் திறனாய்வில் எதிர் மார்க்சியக் கண்ணோட்டத்தை விமர்சிக்கின்றது. வறட்டு மார்க்சிய வாதமும் எதிர்மார்க்சிய வாதமும் வாழ்க்கையையும் இலக்கியத்தையும் புரிந்து கொள்வதற்கும், இலக்கிய ரசனையை வளர்த்துக் கொள்வதற்கும், இலக்கியத் திறனாய்வை வளப்படுத்துவதற்கும் உதவமாட்டா என்பதையே இக்கட்டுரைகள் வலியுறுத்துகின்றன என்று குறித்த நூலின் முன்னுரையில் எழுதியுள்ளார். மேலும் முன்னுரையில் அவர் முன்மொழிந்துள்ள சில வரிகள் சிந்தனைக்குரியன. "நான் மார்க்சிய சித்தாந்தத்திலும் அழகியல் கோட்பாடுகளிலும் ஆழ்ந்த புலமை உடையவன் அல்ல. ஆயினும் கடந்த கால் நூற்றாண்டு காலமாக எனக்கு இவற்றுடன் ஓரளவு பரிச்சயம் உண்டு. ஒரு படைப்பாளி என்ற வகையிலும் ஒரு வாசகன் என்ற வகையிலும் எனக்கு இலக்கியத்தில் ஆழ்ந்த அக்கறையும் ஈடுபாடும் உண்டு. வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கு உதவும் ஒரு முக்கியமான கலைச் சாதனமாக நான் இலக்கியத்தைக் கருதுகின்றேன். எல்லா வகையான இலக்கியங்களும் வாழ்க்கையை அதன் போக்கில் புரிந்து கொள்ள எனக்கு உதவியிருக்கின்றன. அதுபோல எனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு இலக்கியத்தைப் புறநிலையாக அணுகுவதற்கு மார்க்சியம் எனக்கு உதவியிருக்கின்றது. இந்தப் புறநிலைப் பார்வைதான் இலக்கியத் திறனாய்வில் மார்க்சியத்தின் பிரதான பங்களிப்பு என்று நான் கருதுகின்றேன். இது நமது மார்க்சிய விமர்சகர்கள் பலரும் கையாளும் அகநிலைச் சார்பான தணிக்கைமுறை விமர்சன நோக்குக்கு" முற்றிலும் மாறானது. தணிக்கை முறை குறுங்குழுவாத (Sectarian) அரசியல் நிலைநின்று ஒரு குறிப்பிட்ட வகையான படைப்புக்களை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்றவற்றையெல்லாம் முற்றாக நிராகரித்து விடுகின்றது. பதிலாக புறநிலை நோக்கு எல்லா வகையான படைப்புக்களையும் அக்கறையோடு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றது. அவற்றின் சமூக, அழகியல் அம்சங்களை ஆராய்கின்றது. அவற்றின் குண நலன்களை, அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது. இத்தகைய புறநிலை நோக்கே ஆரோக்கியமான இலக்கியத்திறனாய்வு வளர்வதற்கு வழிவகுக்கும் என்று நான் கருதுகின்றேன். இது தொடர்பான விவாதங்கள் நிகழ்வதற்கும் அதன் மூலம் தமிழில் மேலும் மார்க்சியத் திறனாய்வு செழுமையுறுவதற்கும் இந்நூல் உதவும் என்பது என் நம்பிக்கை".

அவரது நம்பிக்கை நிறைவேறியிருப்பதால்தான், இந்நூல் வெளிவந்து 37 ஆண்டுகளுக்குப் பிறகும் பேராசிரியரும் ஆய்வாளருமான ஸ்டாலின் ராஜாங்கம் (இந்து தமிழ் 10 சனி, செப்டம்பர் 14, 2024 CHENNAI) பின்வருமாறு எழுதியுள்ளார் போலும்... "மார்க்சியத் திறனாய்வாளர் என்கிற முறையில் அவரை மார்க்சியத் திறனாய்வுநெறி சார்ந்தவர் என்று கூறலாம். "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" (1987) அவருடைய முக்கியமான நூல்களுள் ஒன்று. அதேவேளையில், இலங்கையிலும் தமிழகத்திலும் இருந்த மார்க்சியத் திறனாய்வாளர்களிடமிருந்து அவர் வேறுபட்டிருந்தார். உலகைப் புரிந்து கொள்ளவும் மாற்றவும் உதவும் வலுவான சித்தாந்தமாக மார்க்சியம் இன்றைக்கும் இருக்கிறது என்றும், இலக்கியத்தை உன்னத நிகழ்வாக அன்றிச் சமூக உற்பத்தியாக நிறுவியதில் மார்க்சியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு முக்கியமானது என்றும் குறிப்பிடும் அவர், மார்க்சியத்தை அரசியலாக மட்டுமின்றிச் சமூகத்தையும் பண்பாட்டு நடைமுறைகளைப் புரிந்துகொள்ளவும் பயன்படுத்த முடியும் என்று விளக்கினார். இலக்கியத்தில் எல்லா அம்சங்களையும் அதனால் விளக்கிவிட முடியும் என்று தான் நம்பவில்லை என்றும் குறிப்பிட்டார். "நான் கட்சி மார்க்சியர் அல்ல" என்று குறிப்பிட்டுக் கொண்ட அவர், மார்க்சியத்தைச் சமூகக் கோட்பாடாகப் பொருள்படுத்திக் கொள்ள முயன்றவர் எனலாம்." *1991* ஜூலை "சுபமங்களா" இதழுக்கு வழங்கிய நேர்காணலில் சுந்தர ராமசாமி பின்வருமாறு சொல்லியிருக்கிறார்: "எம்.ஏ.நுஃமானின் "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" தரமான நேர்மை யான விமரிசனம்" ("விரிவும் ஆழமும் தேடி" *1998: 55*).

**இரண்டு. பின்நவீனத்துவம்**

பின்நவீனத்துவம் (Post Modernism) என்பது கலையின் செல்நெறிகள் பற்றியது. நவீனத்துவக் கலைக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டது. அது ஒரு கலைப்பாணியாக (Artistic style) அமையும் என்கிறார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. பின்நவீனத்துவம் தற்கால மெய்யியல் சூழலில் ஒரு முக்கிய மான அரசியல் நீரோட்டமாக உருவெடுத்து, நவீனத்துவம் குறித்த ஆழமான மற்றும் தொலைநோக்கு விமர்சனத்தை வழங்கியுள்ளது. இது சமூகக் கோட்பாடுகள் விவாதிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்துப் பாரம்பரிய மற்றும் நவீன வகை சிந்தனைகளுக்கும் சவால் விடுத்துள்ளது. பின் நவீனத்துவம் பகுத்தறிவு பற்றிய நுட்பமான விமர்சனத்தை வழங்குகிறது. இது மெய்யியல் நிலப்பரப்பிற்குள் ஒரு புதிய போக்கு ஆகும். பின்நவீனத்துவம் சார்ந்த விடயங்களைப் பற்றி சிந்திப்பவர்கள் பின்நவீனத்துவம் என்பது நவீனத்து வத்திலிருந்து விடுபடுவதா அல்லது நவீனத்துவத்தின் தொடர்ச்சியா அல்லது இரண்டுமா என குழப்பமடைந் துள்ளனர். நவீனத்துவத்திலிருந்து வேறுபடுவதாகப் புரிந்து கொள்ளப்பட்ட "பின்நவீனத்துவம்" என்ற சொல், இருபதாம் நூற்றாண்டின் மேற்கத்தியக் கலாச்சாரத்தின் "நிகிலிசத்தை" (Nihilism) விவரிக்க *1917* ஆம் ஆண்டில் ஜெர்மன் மெய்யிய லாளர் ருடால்ஃப் பன்விட்ஸ் என்பவரால் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது் இது அவர் பிரெட்ரிக் நீட்சே (Nietzsche; *1844-1900*) விடமிருந்து எடுத்த கருப் பொருளாகும். நீட்சேவின் முக்கிய கருத்தாக்கங்களில் ஒன்று நிகிலிசம். நிகிலிசம் என்பது இலட்சியத்தின் பெயரால் உண்மையை மறுப்பது என நீட்சே வரையறுத்தார். நாளைய மீட்சியின் பெயரால் இன்றை தொலைப்பதை அவ்வாறு பார்த்தார். "அழகு, உண்மை, மீட்சி ஆகியவற்றை போர்த்திக் கொண்டு பாரம்பரிய நம்பிக்கைகள் என்ற பெயரிலும், நல்வழி கோட்பாடுகள் என்ற பெயரிலும் வடிவம் கொண்டு இருக்கும் மெய்யியல்கள் மேலோட்டமானவை அவற்றின் பின்னால் சுயநலம் மீதான விருப்பங்கள், அதிகாரம் மீதான விருப்பங் கள், வார்த்தைகளில் வரவிரும்பாத உண்மைகள் மறைந் துள்ளன"- என்பதே பின்நவீனத்துவாதிகளின் முதல் கொள்கையாகும். பின்நவீனத்துவம் தனது அறிவுக் கருவி யாக "கட்டுடைத்தல் (deconstruction)" என்பதை முன் வைத்தது. கருத்தின் துவக்கம் (Origins) நோக்கி நகர்வதன் வழியே கட்டுடைத்தல் நிகழ்ந்தது. கிரேக்க மெய்யியலில் "அழகு, அறிவு, உண்மை என அனைத்தும் உள்ளடக்கிய பேரண்டத் தினை நோக்கி தீர யோசித்து உண்மைகளை கண்டடைதல்" அறிவினை அறிய உதவும் கருவியாயிற்று. நவீனத்துவத்தில் கருத்தாக்கங்களுக்கு இடையேயான உறவு களை கண்டு பிடிக்க மனிதன் முயற்சி செய்வது, செயலில் இறங்குவது அறிவுக் கருவியாகும். பின் நவீனத்துவத்தில் கட்டுடைத்தல் அறிவினை அறியும் கருவியானது. நீட்சேவின் பார்வைப்படி, அனைத்து வேறுபாடுகளையும் கடந்த எல்லாருக்கும் பொதுவாக வரக்கூடிய லட்சியங்கள் (transcendental ideals) தீங்கிழைக்கும் நோக்கங்களைக் கொண்டுள்ளன. இந்த அமைப்பின் அடிப்படை நோக்கம் மனிதகுலத்திற்கு உதவுவது அல்ல, மாறாக தீர்ப்பை வழங்குவதும், மானுட இருப்பையே கண்டனம் செய்வதுமே ஆகும். இவை புனையப்பட்ட உண்மைகளுக்கு ஆதரவாக யதார்த்தமான உண்மைகளை நிராகரிக்கின்றன. கட்டுடைக்கும் மெய்யியல், எந்த ஒரு மனிதனும் தனது முக்கிய நலன்களைக் கருத்தில் கொள்ளாமல், தனது அறத்தினையும், நல்லெண்ணத்தினை யும் மட்டும் அடிப்படையாக பார்த்து நல்லது என்றோ மோச மானது என்றோ என எந்த ஒன்றையும் பற்றி "புறவயமான" (objective), "பக்கச்சார்பற்ற" (disinterested) மதிப்பீட்டை வழங்க முடியாது என சொல்லும். கட்டுடைத்தல் தொடர்ந்து நிகழும் பொழுது என்ன நிகழ்கின்றது? நாம் உலகை அறிய முயல்கின்றோம். கட்டுடைத்தல் மூலம் முயற்சிக்கையில் எல்லா தனிநபர்களும் முதன்மையாக சுய நலத்தால் உந்தப்பட்டதாக நம்ப ஆரம்பிக்கின்றோம். அதன் முடிவில் கசப்பே வளர்கின்றது. இந்த இடத்தில் மார்டின் ஹைடெகர் என்பவரின் மெய்யியல் கருத்தினை அவதானிக்க லாம். ஹைடெகரும் கட்டுடைத்தல்வாதம் என்பதை முன் வைப்பவர். எனினும் அவர் நீட்சேவின் "இன்றைய பொழுதில் இன்றைக்கு இருப்பதை முழுமனதோடு நேசித்தல்" என்ற பார்வைக்கு மாறாக யதார்த்தத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள, பகுத்தறிவு மீதான செயல்முறையின் துணைக் கொண்டு ஆராய்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதை ஹைடெகர் சொன்னார். எனவே ஹைடெகரின் கட்டுடைத்தல் பார்வையானது நீட்சேவின் முறையை விட பொருத்தமானது.

*1950* களிலும் *1960* களிலும் இலக்கிய நவீனத்து வத்திற்கு எதிரான பிற்போக்குத்தனத்தைக் குறிப்பிட்டு இலக்கியத் திறனாய்வில் பின்நவீனத்துவம் பயன் படுத்தப் பட்டது. இலக்கியத்திற்கான பின்நவீனத்துவத்தின் விளைவு களையும் வெளிப்பாடுகளையும் கோட்பாட்டு ரீதியாகச் சித்திரிக்கப் பல முயற்சிகள் நடந்துள்ளன. இவை அனைத்தும் பொதுவாக வரலாற்று அல்லது முறையான வரையறையின் சிக்கல்களில் இயங்குகின்றன. பின் நவீனத்துவ நாவல்களின் மேலாதிக்கப் பண்பு, மூலப் படைப்பை எழுதுவது இயலாத காரியம் என்ற பாசாங்கும், அவற்றின் முரண்பாடான கருப்பொருள் "எழுத்தின் முடிவு..." பற்றி எழுதுவதும் ஆகும். இதன் விளைவாக இயற்கையைவிட கலையே பிரதிபலிப்புப் பொருளாக மாறியது, மற்றும் சுய-நனவான பிரதிபலிப்பு உருவானது. நவீனத்துவம் ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தில் மையக் கருப்பொருள் மற்றும் ஒன்றுபட்ட பார்வையை மையமாகக் கொண்டிருந்தாலும், பின்நவீனத்துவம் மனித அனுபவத்தை நிலையற்றதாகவும், முரண்பாடானதாகவும், தெளிவற்றதாகவும், முடிவில்லாததாகவும், தீர்மானிக்க முடியாததாகவும், முடிக்கப்படாததாகவும், துண்டாடப்பட்ட தாகவும், இடைநிறுத்தப்பட்டதாகவும், "பிளவுபட்டதாகவும்" பார்க்கிறது. எனவே, இது முரண்பாடான, துண்டு துண்டான, தெளிவற்ற, தீர்மானிக்க முடியாத, முடிக்கப்படாத, "சிதைந்த" உலகின் பார்வையில் கவனம் செலுத்துகிறது.

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் பின்நவீனத்துவம் பற்றி பிரக்ஞைபூர்வமாக உரையாடியுள்ளார். "உலக மயப்பட்ட முதலாளித்துவத்துக்கு அனுசரணையான சித்தாந்தமாகவே நான் அதைப் புரிந்துகொள்கிறேன். இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏகாதிபத்தியச் சமூகம் எதிர்நோக்கிய அரசியல் பொருளாதார நெருக்கடியின் விளைவாகத் தோன்றிய கலாசார நெருக்கடியின் விளை வாகத் தான் நவீனத்துவம் அல்லது நவீனவாதச் சிந்தனை மேற்கில் தோன்றியது. இரண்டாவது உலக யுத்தத்தின்பின் புதிய முகத்துடன் எழுச்சியடைந்த நவகாலனித்துவமும் அதன் உலகமயக் கோட்பாடும் மேற்கில் தோற்றுவித்த சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளின் விளைவுதான் பின்நவீனத்துவச் சிந்தனை என்று புரிந்து கொள்கிறேன், பின்நவீனத்துவச் சிந்தனைகள் சாரம்சத்தில் உலகமயப்பட்ட முதலாளித்து வத்துக்கு அனுசரணையாகவே அமைகின்றன. சாராம்சம் என்ற சொல்லையே பின்நவீனத்துவ வாதிகள் சாராம்சவாதம் என்று ஒதுக்கிவிடுவார்கள்.

உலகத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது என்பது முக்கியமான பின்நவீனத்துவக் கருத்து. இது மிகப்பழைய ஐயவாதத் தத்துவத்தின் பிறிதொரு வடிவம்தான். உலகத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள அல்லது விளக்க முயலும் தத்துவங்களைப் பெருங்கதை யாடல் எனப் பின்நவீன வாதிகள் ஒதுக்கிவிடுகின்றனர். அதற்குப் பதிலாகக் கூறுபடுத்தல் கொள்கையை முன்வைக்கின்றனர். இதன் நடைமுறை விளைவு சமூகத்தை இனம், மதம், மொழி, சாதி, பால் அடிப்படையில் கூறுபடுத்துவதாகவே அமைகின்றது. ஏகாதிபத்தியம் தனது பொருளாதார நலன்களைப் பூகோளமயப் படுத்துவதற்கு நாடுகளை அரசியல், சமூக அடிப்படையில் கூறுபடுத்துவது அவசியமாகின்றது. உலக நாடுகளில் இனம், மதம், மொழி, சாதி, பால் அடிப்படை சில முரண்பாடுகளைத் தோற்றுவித்து அடையாள அரசியலை ஏகாதிபத்தியம் ஊக்கப்படுத்துவதன் நோக்கம் இதுதான். பின்நவீனத்துவச் சித்தாந்தம் அடையாள அரசியலுக்குச் சாதகமாகவே இருக்கின்றது. இலக்கியத் தளத்தில் குறிக்கோள் உள்ள எழுத்தை முற்றாக நிராகரித்து, பிரதி தரும் போதையே (Pleasure of the Text) இலக்கியத்தின் பயன் என்பதை வலியுறுத்துகின்றது. ஆசிரியரை முற்றாக நிராகரித்து வாசகரை அதன் இடத்தில் நிறுத்துகின்றது. பிரதிக்கு வாசகரே பொருளைத் தருகிறார் என்ற கொள்கையை முன்வைக்கின்றது. ஆசிரியர் வாசகருக்கு எதையும் சொல்ல முடியாது என்பது இதன் உட்பொருள். பத்தாயிரம் பேர் பிரதியைப் படிக்கும்போது பத்தாயிரம் வெவ்வேறு பிரதிகளாக அது மாறுகின்றது. இவ்வாறு பிரதி பற்றிய மாயாவாதத்தைப் பின்நவீனத்துவம் முன்மொழி கின்றது. இத்தகைய கோட்பாட்டின் உட்புதைந்திருக்கும் அரசியல் எனக்கு முக்கியமானதாகத் தோன்றுகிறது. இந்த அரசியல் செயலற்ற நிலைக்கு உங்களை இட்டுச் செல்லும் அரசியல். பின் நவீனத்துவச் சிந்தனையை விழுங்கிக் கொண்டு பிரதி வித்தை காட்டும் சில அதிநவீன தமிழ் எழுத் தாளர்களைப் படித்தால் அவர்களின் அரசியலை மறுக்கும் அரசியலை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். ஜெயமோகனின் "பின்தொடரும் நிழலின் குரலில்" நீங்கள் தெளிவாக இதனைக் காணலாம். விடுதலைக்காக, உரிமைக்காகப் போராடுவ தெல்லாம் எவ்வளவு அர்த்தமற்றது, பைத்தியக் காரத்தனமானது என்பதை நிரூபிப்பதற்கு அவர் நூற்றுக் கணக்கான பக்கங்களில் சொல் வித்தையாடுகிறார்.

எல்லாச் சித்தாந்தங்களையும் போலவே பின் நவீனத்துவமும் சமூகத்தை, அரசியலை, கலை இலக்கி யத்தைப் புரிந்துகொள்வதற்குச் சில கலைச் சொற்களையும் கருத்தாக்கங்களையும் நமக்குத் தந்திருக்கின்றது. நமது தேவைக்கும் புரிதலுக்கும் ஏற்ப நாம் அவற்றைப் பயன் படுத்தலாம். அதேவேளை எல்லாச் சித்தாத்தங்களையும் வழிபாட்டுரீதியில் அன்றி விமர்சனக் கண்ணோட்டத்தில் அணுக நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்" *(2023: 112, 113)*.

நுஃமானைப் போல விமர்சன கண்ணோட்டத்தி லன்றி, "வழிபாட்டு ரீதியில்" பின்நவீனத்துத்தை நோக்குகின்ற அ.மார்க்ஸ் தனக்கே உரித்தான பாணியில் நுஃமானின் புரிதலை கடும் தொனியில் விமர்சித்திருக்கிறார். எடுத்துக் காட்டாக, *2023* மே இல் இலங்கை ஏறாவூரில் நடைபெற்ற புத்தக கண்காட்சியின் போது "பேரா. நுஹ்மான் அவர்களின் படைப்புகள் குறித்த மதிப்பீட்டு உரை"யில் இது பற்றியும் பேசியிருக்கிறார். அந்த உரையின் ஒருசில வரிகள் வருமாறு,

"நான் அறிந்தவரை "பின்நவீனத்துவம்" எனும் தத்துவப் போக்கு நமது சமகாலத்தின் முக்கிய பேரறிஞர் என உலகள வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னணியில் ழாக் தெரிதாவால் முன்னவைக்கப்பட்டபோது, அக்கோட்பாடு குறித்துத் தமிழ் பேசும் உலகில் அதைக் கண்டித்து அவதூறு செய்தவர் நுஹ்மான்தான். இது குறித்து ஆழமாக எதையும் கூறாமலும், எந்தப் புரிதலும் இன்றியும் அவர் அதைப் "பின் நவீனத்துவ மாயை" என்றெல்லாம் அவதூறு செய்து வெறுப்பைக் கொட்டினார்." அ.மார்க்ஸின் இந்த பிதற்றல் குறிப்பது போல, நுஃமான் பின்நவீனத்துவத்தை "அவதூறு" செய்து "வெறுப்பைக் கொட்டவில்லை!" அந்த கோட்பாட்டை அறிவார்ந்த ரீதியில் விமர்சன பிரக்ஞையோடு அணுகியிருக் கிறார். அவரது கட்டுரைகளும் நேர்காணல்களும் இதனை துல்லியப்படுத்தியுள்ளன. நேர்காணல்களில் அவர் முன் வைத்துள்ள கருத்துகளில்/ விமர்சனங்களில், அ.மார்க்ஸ் கொதிப்பது போல் "அவதூறு" கொட்டப்பட்டிருக் கிறாதா? படித்துப்பாருங்கள்,

(அ) பின்நவீனத்துவம் என்பது விரிவாக விவாதிக்கப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய கலைச்சொல்தான். அதுபற்றிய தெளிவு பொதுவாக யாருக்கும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், அதீத வளர்ச்சியடைந்த மேற்கத்தைய நாடுகளின் பண்பாட்டு நெருக்கடியை விளக்குவதற்குப் பல அறிஞர்கள் முயற்சிகள் மேற்கொண்டார்கள். அவர்களின் விளக்கங்களே பின்நவீனத்துவக் கொள்கை என்று 1960க்குப் பின்னர் பிரபலம் அடைந்தது. தனி ஒருவரால் அல்லது சிலரால் உருவாக்கப் பட்ட கட்டிறுக்கமான ஒரு கோட்பாடு என்று இதைச் சொல்ல முடியாது. பலருடைய கருத்துகளின் தொகுதியாகத்தான் இதை நோக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. 1990க்குப் பிறகுதான் தமிழில் சிலரால் அது ஆரவாரத்துடன் வரவேற்கப் பட்டது. இதை வரித்துக்கொண்ட பின்னர் பழைய கலை, இலக்கியக் கோட்பாடுகளை யெல்லாம் வரலாற்றுக் குப்பைக் கூடைக்குள் வீசிவிடவும் சிலர் தயங்க வில்லை. ஒரு இடதுசாரி என்றவகையில் நான் இதை மிகுந்த ஐயத்துடன்தான் நோக்கினேன். அவ்வப்போது அதுபற்றி எழுதியும் இருக் கிறேன். நான் ஏற்றுக்கொள்ளும் வகையில் அல்லது புரிந்து கொள்ளும் வகையில் தமிழில் இதுபற்றி யாரும் எழுதவில்லை. இதன் பின்னால் உள்ள அரசியல் பரந்துபட்ட மக்கள் நல அரசியல் அல்ல என்றுதான் நான் சொல்வேன். பெரு முதலாளித்துவம் தனது நலனுக்காக பொருளாதார ரீதியான உலகமயமாக்கலையும் அரசியல்ரீதியான கூறுபடுத்தலை யுமே விரும்புகின்றது. பின்நவீனத்துவக் கொள்கைகள் இதற்குச் சார்பானவை என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது. பின்நவீனத்துவவாதிகள் என்று அடையாளப்படுத்தப்படும். சிலர் முதலாளித்துவ எதிர்ப்பாளர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய கோட்பாடு பரந்துபட்ட மக்களை ஒன்றிணைப் பதற்குப் பதிலாகப் பல்வேறு அடையாள அரசியலின் அடிப்படையில் கூறுபடுத்துவதற்கே உதவு கின்றது என்பதே என் கருத்து. மேற்கில் இதுபற்றி நிறைய விமர்சனங்கள் வந்துள்ளன. டெரி ஈகிள்டனின் 'Illusion of Postmodernism" என்ற நூல் இவ்வகையில் முக்கியமானது. அரைநிலப்பிரபுத்துவ, அரைக்காலனிய ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வாழும் நாம் இன்னும் நவீனத்துவத்துக்குள்ளேயே முழுமையாக வர வில்லை. இந்நிலையில் பின்நவீனத்துவம் பற்றிப் பேசுவது எந்தளவு பொருந்தும் என்று தெரியவில்லை. பின்காலனித்துவம். பற்றித்தான் நாம் பேச வேண்டியிருக்கும்.

(ஆ) பின்நவீனவாதம் அரசியல், தத்துவம், பண்பாடு போன்ற பல துறைகளிலும் இதுவரை வலுவுடன் விளங்கிய கொள்கைகள் எல்லாவற்றையும் கேள்விக்கிட மாக்குகின்றது. உலகளாவிய கொள்கைகள் என்று எவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க முடியாது எனக் கூறுகின்றது. அவற்றை யெல்லாம் பெருங் கதையாடல் என்று நிராகரித்துவிடுகின்றது. குழுத் தனித்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. இலக்கியத் துறையில் பிரதிக் கோட்பாட்டுக்கு முதன்மை கொடுக்கின்றது. இலக்கிய ஆசிரியரின் முக்கியத்துவத்தை நிராகரிக்கின்றது. ஆசிரியரின் மரணத்தை றோலன் பார்த் என்ற பிரான்சிய பின்நவீனச் சிந்தனையாளர் முதல்முதல் அறிவித்தார். ஒரு படைப்பு உருவாகியபின் ஆசிரியரின் ஆளுமைக்கு அங்கு இடமில்லை என்பது இதன் பொருள். வாசகரே இங்கு முக்கியத்துவம் பெறுகிறார். ஒரு இலக்கியப் பிரதியைப் படித்து வாசகர் என்ன பொருள் கொள்கின்றாரோ அதுவே அப்பிரதியின் பொருள். அவ்வகையில் ஒரு பிரதிக்குத் திட்டவட்டமான பொருள் ஒன்று இருக்க முடியாது. ஒவ்வொரு வாசகரும் ஒரே பிரதியைப் படித்து வெவ்வேறு பொருள் கொள்ள முடியும். ஆகவே, ஒரு பிரதியின் பொருள் முடிவற்றது என்றெல்லாம் பின்நவீனவாதம் கூறுகின்றது. பின்நவீனவாதத்தைப் பொறுத்தவரை கம்பராமாயணமும், கல்கியின் சிறுகதை ஒன்றும், ஒரு காதல் கடிதமும் ஒரு சிறு துண்டுப் பிரசுரமும் பிரதிதான். பிரதி என்ற வகையில் இவை தம்முள் சமமானவை. அவ்வகையில், இலக்கியத் தரம், இலக்கிய மேன்மை என்பவற்றுக்குப் பின்நவீன விமர்சனத்தில் இடம் இல்லை எனலாம். ஜனரஞ்சக இலக்கியம், உயர் இலக்கியம் என்ற வேறுபாட்டைப் பின்நவீனவாதம் கடந்து செல்கிறது *(2023: 154, 155)*.

(இ) அர்த்தத்தை வாசகன் தீர்மானிப்பது, அது அவனது உரிமை என்ற வார்த்தைப் பிரயோகங்கள் விசயத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதில் தடையாக அமைந்து விடலாம். உதாரணமாக "இன்று ஏப்ரல் முதலாம் திகதி" என்று நான் சொன்னால், அதை "இன்று மார்ச் முப்பதாம் திகதி" என்று நான் சொல்வதாகத் தீர்மானிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு என்று கருதமாட்டீர்கள் என்று நினைக்கின்றேன். எனது கூற்றுக்கும் நீங்கள் பொருள் கொண்டதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆனால் "இன்று ஏப்ரல் முட்டாள் தினம்" என்பதை நான் நினைவூட்டுவதாக நீங்கள் பொருள் கொள்ளலாம். அல்லது அந்தத் திகதியில் நீங்கள் பிறந்திருந்தால் உங்கள் பிறந்த தினத்தை நான் நினைவூட்டுவதாக நீங்கள் பொருள் கொள்ளலாம் அல்லது ஒரு முட்டாள் பிறந்த தினம் என்று நான் உங்களைக் கிண்டல் செய்வதாகக் கூட நீங்கள் பொருள் கொள்ளலாம். இவை இந்தக் கூற்றோடு தொடர் புடைய விடயங்கள். முற்றிலும் நீங்கள் உருவாக்கிய பொருள் அல்ல. பிரதியின் அர்த்தத்தை வாசகன் தீர்மானிக்கிறான் என்பதைவிட அவன் புரிந்து கொள்கிறான் என்பதே சரியானது என்று நான் நினைக்கின்றேன். பிரதியின் அர்த்தத்தை வாசகன் எவ்வாறு புரிந்து கொள்கிறான்? ஏன் அவ்வாறு புரிந்து கொள்கிறான்? என்பன முக்கியமான கேள்விகள். இது பிரதிக்கும் வாசகனுக்கும் இடையிலான உறவு தொடர்பான பிரச்சனை. ஓர் இலக்கியப் பிரதியை வாசகர்கள் வெவ்வேறு வகையாகப் புரிந்து கொள்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பிரதி சார்ந்ததாக அல்லது வாசகர் சார்ந்ததாக இருக்கலாம். வாசகனை மட்டும் மையமாகக் கொண்டு நோக்கினால், வாசகனின் இலக்கியப் பரிச்சயம், அவனது உலக ஞானம், அவனது மொழித்திறன், அவனது சமூக, அரசியல் கண்ணோட்டம் போன்ற பல காரணிகள் அவனது புரிதலைத் தீர்மானிக்கின்றன. பிரதியும் அத்தகையப் புரிதல் களுக்கு இடம் கொடுக்கின்றது. இவ்வாறு நோக்குவதை விடுத்து பிரதிக்குப் பொருளே இல்லை வாசகன் எதைப் புரிந்து கொள்கிறானோ அதுதான் அதன் பொருள் என்று வாதிடுவது ஒரு இலக்கிய அராஜகவாதம்தான். பின் நவீனத்துவ விமர்சகர்கள் பலர் இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள். இதில் எனக்கு உடன்பாடு இல்லை *(2023: 111)*.

நுஃமான் அவர்களின் புலமைத்துவத்தினை பறைசாற்றுகின்ற "பிரதியின் மரணம்" என்ற கட்டுரையில் ஆசிரியன், பிரதி, வாசிப்பு ஆகியவற்றை அமைப்பியலின் அடிப்படையில் பரிசீலித்திருக்கிறார். 1980க்குப் பிறகு தமிழில் ஆர்ப்பாட்டமாக மேலெழுந்த அமைப்பியல், பின் அமைப்பியல் விமர்சனத்துக்கு ஒரு எதிர்வினையாக இக்கட்டுரை அமைந்துள்ளது. காலச்சுவடு இதழில் (ஜூன் 1996) களம் கண்ட இக்கட்டுரை, "மொழியும் இலக்கியமும்" என்ற நூலிலும் (பதிப்பு : 2006, இரண்டாம் பதிப்பு : 2007) சேர்க்கப் பட்டுள்ளது. குறித்த நூலின் முன்னுரையில் இக்கட்டுரை பற்றி நுஃமான் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "பரவலான வரவேற்பையும் தீவிரமான எதிர்ப்பையும் சம்பாதித்த கட்டுரை அது. நண்பர் அ.மார்க்ஸ் தனது வழக்கமான பாணியில் "நுஃமானின் அடிப்படை வாதம்" என்ற தலைப்பில் தனது தடாலடிக் கண்டன விமர்சனத்தை "நிறப்பிரிகை"யில் எழுதினார். எனது கட்டுரையை ஒரு அறிவார்ந்த தளத்தில் எதிர் கொள்ளாது, என்னை ஒரு அடிப்படைவாதியாகக் கட்டமைக்கும் உள்நோக்குடன் எழுதப்பட்ட கட்டுரையாகையால் அதை முற்றிலும் புறக்கணிப்பதே அதற்குரிய எனது பதிலாகும்."

பேராசிரியர் ஸ்டாலின் ராஜாங்கம் (2024) குறிப் பிட்டுள்ள அவதானமொன்று இவ்விடத்தில் கவனிக்கத் தக்கது. "இலக்கியத்தில் எதார்த்தத்தையே பெரிதும் விரும்புகிறேன் என்றாலும், நவீனப் பாணிகளை நிராகரிக்க வில்லை என்று கூறிய அவர், மொழியியலின் தொடர்ச்சியில் அறிமுகமான அமைப்பியல், குறியியல், பின்அமைப்பியல் போன்ற நவீனக் கலை இலக்கியக் கோட்பாடுகளின் இயந்திர கதியான பொருத்தப்பாடுகளை இலக்கிய உணர்திறன் என்கிற அணுகுமுறையின் துணைகொண்டு எதிர் கொண்டார். அமைப்பியல் கோட்பாட்டைக் கொண்டு எதிரும் புதிருமாக உச்சபட்ச மறுப்புகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்த காலத் தில், நிறைந்த வாசிப்பின் பின்புலத்தில் அவற்றைப் பரிசீலித்து எழுதினார். குறிப்பாக, ரோலன் பார்த்தின் "ஆசிரியர் இறந்து விட்டான்" என்ற கருத்தை எடுத்துக்கொண்டு, படைப்பில் ஆசிரியனைப் பொருட் படுத்தவே தேவையில்லை என்று கூறப்பட்டதை மறுத்தார். அதாவது "ஆசிரியரை முற்றிலும் ஒதுக்கி, பிரதியின் முழுமையான அமைப்பைக்கூடக் கருத்தில் கொள்ளாமல், பிரதியைத் தன் மனம்போன போக்கில் விளக்க முயலும் "வாசிப்புப் பிரதி, பலதளப் பொருண்மை" என்கிற கருத்தை ஏளனம் செய்வதாக அமைகிறது. மார்க்சிய விமர் சனத்தில் ஒரு வறட்டு வாதம் மேலோங்கி இருந்ததுபோலவே, அமைப்பியல் விமர்சனத்திலும் ஒரு வறட்டு வாதமே தமிழுக்கு அறிமுகம் ஆகி இருக்கிறது" என்று சாடினார். மார்க்சியத திறனாய்வு நெறி மீது அவருக்கு இருந்த விமர்சனம், புதிய கோட்பாடுகளை விமர்சனமின்றித் தழுவுபவராக மாற்ற வில்லை என்பதை இங்கே பார்க்கிறோம். நோம் சாம்ஸ்கியின் மொழி உணர்திறன் என்கிற கருத்தைத் தழுவி யோனத்தான கல்லர் பேசிய "இலக்கிய உணர்திறன்" வாசகனுக்குத் தேவை. இலக்கிய உணர்திறனும், படைப்பு மனமும் கொண்ட வாசகனிடம்தான் பிரதி புது உயிர்ப்பு பெற முடியும் என்று வாதிட்டார் நுஃமான்."

#### மூன்று. நவீனத்துவம்

ஆங்கிலத்தில் மாடர்ன் (Modern), மாடர்னிட்டி (Modernity), மார்டனிசம் (Modernism) என மூன்று கலைச் சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இம்மூன்று சொற்களின் வேர்ச்சொல் மார்டன் (Modern) என்பதே என்றாலும் பயன்பாட்டு நிலையில் வேறுபாடுகள் உள்ளன. இம்மூன்று சொற்களையும் தமிழில் நவீனம், நவீனத்துவநிலை, நவீனத்துவம் என மொழிபெயர்ப்புச் செய்து பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் ஒவ்வொன்றும் தனித்தனியாகச் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா? என்பது விவாதிக்கப்பட வேண்டியது. நவீனம் என்பது அன்றாட வாழ்க்கையில் பெரிதும் பயன் பாட்டில் உள்ள சொல். நவீன நிலை என்பது எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் முடிவுகளின் மீது மனிதர்கள் காட்டும் நிலைபாட்டின் பக்கச்சார்பைக் குறிக்கும் சொல்லாக நடைமுறையில் இருக்கிறது. இம்மூன்றிலிருந்தும் விலகிக் குறிப்பிட்ட காலகட்டத்துக் கலை இலக்கிய விவாதங்களைக் குறிக்கும் சொல்லாக நவீனத்துவம் இருக்கிறது. அச் சொல்லின் வருகையும் செல்வாக்கும் மேற்கு நாடுகளில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும் கலை இலக்கியப்பரப்புகள் பலவற்றிலும் இருந்தது (அ.ராமசாமி எழுத்துகள்).

"நவீனத்துவம்" (Modernism) என்பது 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனிதர்களின் சிந்தனைகளிலும், சமூக அமைப்புகளிலும், பண்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கிறது. இது ஒரு சிந்தனை முறை அல்ல. ஒரு கால கட்ட மனநிலை. அகில உலகத்தையும் ஆக்கிரமித்த மனநிலை. நவீனத்துவம் என்பது தொடர்ந்து நடைபெறும் ஒரு வளர்ச்சி நிலையாகும். பேராசிரியர் நுஃமான், "பாரதியும் நவீனத்துவ மும்" என்ற கட்டுரையில் நவீனத்துவம் பற்றி ஆய்வு நுட்பத் தோடு ஆராய்ந்திருக்கிறார் (பார்க்க, "மொழியும் இலக்கிய மும்" 2007: 111-131). "கலைமுகம்" ஆண்டிதலுக்கு (1999) வழங்கிய நேர்காணலில் நவீனத்துவம் பற்றி தெளிவாக சொல்லியிருக்கிறார். "தமிழ் இலக்கிய உலகில் நவீனத்துவம் என்ற சொல் ஒரு திட்டவட்டமான பொருளில் பயன்படுத்தப் படுவதாகச் சொல்ல முடியாது. ஆங்கிலத்தில் "மொடனிட்டி", "மொடனிசம்" ஆகிய சொற்கள் வழக்கில் உள்ளன. இவை இரண்டும் பொருளில் வேறுபட்டவை. "மொடனிட்டி என்பது தற்காலத்துக்குரியது. புதுமையானது, பாரம்பரிய மரபு வழியிலிருந்து வேறுபட்டது. என்ற பொருள் தரும். இதனை நவீனத்துவம் எனலாம். "மொடனிசம்" என்பது இந்த நூற்றாண்டின் முன் அரைவாசியில், குறிப்பாக இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கு நாடுகளில் தோன்றிய ஒரு கலாசாரக் கொள்கையாகும். கட்டடக் கலை, சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம் போன்ற துறைகளில் புதிய வெளிப்பாட்டு வடிவங்களைத் தேடிய, அவற்றைத் தத்துவ ரீதியாக நியாயப்படுத்திய ஒரு கலாசாரக் கொள்கையாக நாம் இதனை விளக்கலாம். இக்கொள்கையை நவீனவாதம் எனத் தமிழில் கூறுவது பொருத்தமாகும். ஆயினும் நவீனத்துவம் என்ற சொல்லாலேயே இவ்விரண்டை யும் நாம் சுட்டுகிறோம். அதனால் சில மயக்கங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. நவீனவாதம், நவீனத்துவம் என்பவற்றுக் கிடையே உறவு உண்டு எனினும் இவை இரண்டும் வேறுபட்டவை.

மேற்கு நாடுகளில் நவீனத்துவம் கைத்தொழிற் புரட்சியோடு ஆரம்பிக்கின்றது. கைத்தொழிற் புரட்சி பாரம் பரிய நிலப் பிரபுத்துவச் சமூக அமைப்பைப் பெரிதும் மாற்றியமைத்தது. சந்தைப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட முதலாளித்துவச் சமூக அமைப்பை உருவாக்கியது. அரசியல், நீதித்துறை, ஒழுக்கவியல், தத்துவம் ஆகியவற்றில் இது பெருமாற்றங்களைக் கொண்டுவந்தது. கலை இலக்கியத் துறைகளிலும் புதிய பொருள், புதிய வடிவங்கள் என்பன தோன்றின. இவை பழைய மரபுகளிலிருந்து (Tradition) பெருமளவு மாற்றமடைந்த நவீனத்துவத்தின் சில முக்கிய அம்சங்களாகும்.

தமிழில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து நவீனத்துவத்தின் அம்சங்கள் வெளிப்படத் தொடங்கின. ஆங்கிலேயர் இங்கு அறிமுகப்படுத்திய முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவுகளே இவை. இலக்கியத் துறையில் நவீனத்துவத்தின் வெளிப்பாடாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாவல்கள் தோன்றின. பாரதியின் வருகையோடு கவிதையில் நவீனத்துவம் அறிமுகமாகியது. அதே காலப் பகுதியில் சிறுகதை இலக்கியம் தோன்றியது. கலை இலக்கியத்தில் யதார்த்தவாதம் நவீனத்துவத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப் பட்ட காலத்தில் மேலைத்தேய முதலாளித்துவச் சமூகங் களில் ஏற்பட்ட துரிதவளர்ச்சியும் சிக்கல்களும் கலை இலக்கி யத்தில் நவீனவாதச் சிந்தனைகளைத் தோற்று வித்தன. யதார்த்தவாதப் போக்கிலிருந்து வேறுபட்ட Imagism, Cubism, Surrealism போன்ற கலை முறைகள் தோன்றின. நவீன ஓவியம் (Modern art), புதுக்கவிதை (New Poetry) போன்றவை யும் நவீனவாதத்தின் வெளிப்பாடுகளே யாகும். கடந்த கால் நூற்றாண்டுக்குச் சற்று அதிகமான காலப் பகுதியில் முதலாளித்துவம் பல்தேசிய முதலாளித்துவமாக வளர்ச்சி யடைந்த காலப் பகுதியில் மேற்குலகில் பண்பாட்டுத் துறையில் பின்நவீனவாதம் பற்றிப் பேசப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக தமிழிலும் இதன் தாக்கத்தைக் காண்கின்றோம்" (2023: 153, 154).

**நான்கு. யதார்த்தவாதம்**

இலக்கியப் பனுவல்களில் சமகால வாழ்வும் இயற்கையும் மிகச் சரியாக – கூடுதல் குறைவின்றி, நுட்பமாகப் படைத்துக் காட்டப்படும் விதத்தைக் குறிக்கும் சொல் யதார்த்தம் அல்லது நடப்பியல். ஒரு விதத்தில் அதற்கு முன்பு கடைப்பிடிக்கப்பட்ட இலக்கியக் கோட்பாடான மனிதனை ஆகக் கூடிய லட்சியவாதியாகச் சித்திரிக்கும் கற்பனா வாதத்தை நிராகரிக்கும் நோக்கத்தில் வந்த ஒரு படைப்புப் பார்வை என வரையறுத்துச் சொல்லலாம். யதார்த்தவாதம் அல்லது நடப்பியல் என்பது, பனுவலுருவாக்கத்தில் இருக்கும் செவ்வியல் கூறுகளையும் புனைவியல் கூறுகளையும் நிராகரித்ததன் வழியாகவே அதன் பண்புகளை உருவாக்கிக் கொண்டது. நடப்பியல் கடந்த காலத்தைப் பற்றி எழுதுவதை விட நிகழ்காலச் சமூகவாழ்வும் அதில் வாழ்ந்து கொண்டி ருக்கும் மனிதர்களின் சாராம்சமும் தான் படைப்பின் கச்சாப் பொருளாக இருக்க வேண்டும் எனச் சொன்னது என்கிறார் அ.ராமசாமி. "மார்க்சியம் கோட்பாட்டளவில் கலை இலக்கி யத்தில் யதார்த்தவாதத்தையே முதன்மைப்படுத்துகின்றது" என்றும் "உலகச் சூழலில் யதார்த்தவாதத்திற்கு இன்னும் வலுவான தளம் இருக்கின்றது என்பதே என் அபிப்பிராயம்" என்றும் குறிப்பிடுகின்ற நுஃமான், பெரிதும் யதார்த் தவாதத்தினையே ஏற்றிருக்கிறார். மஹாகவியின் யதார்த்தமே என்னை அவருக்கு மிகவும் நெருக்கமாக்கியது என்று "ஞானம்"(ஆகஸ்ட் 2000) நேர்காணலில் அவர் சுட்டியிருக் கிறார். மஹாகவியின் "சடங்கு", "கோடை", "ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்" போன்ற பிரதிகளை யதார்த்த வாதத் திற்கு உதாரணம் காட்டியிருக்கிறார். கவிஞர் நுஃமானின் கவிதைகள் யதார்த்தத்தின் பிரதிபலிப்புக்களே. "உதயப் பொழுதும் அந்தி மாலையும்" என்ற அவரது பெருந்தொகை கவிதை பிரதி இதற்கு சிறப்புச் சான்றாகிறது. இந்நூலில் அவரது வாக்குமூலமாக அமைந்த கவிவரிகள் இதனை நிரூபணம் செய்கின்றன.

எனது கவிதையில்
ஒரு மர்மமும் இல்லை.
அதுவும் வார்த்தைகள் தான்
அது என் உணர்வின் குரல் அல்ல,
என் உணர்வின் நிழல்
சில வேளை அது இரங்கி அழும்
சில வேளை அது கோபித்துக் குமுறும்
சில வேளை அது நேசத்துக்காய்
இரங்கி ஏங்கும்
சில வேளை அது விரக்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து துயிலும்
கவிதை எனக்கு முகமூடி அல்ல
அதுவே என் முகம்.

யதார்த்தவாதம் பற்றிய நுஃமானின் நேர்காணல் கருத்து பின்வருமாறு அமைந்துள்ளது. "இதை ஆங்கிலத்தில் Realism என்பர். இதைப்பற்றி மிகச் சுருக்கமாக விளக்குவது என்பது எளிதல்ல. ஆயினும் நடைமுறை வாழ்க்கையை அதன் உட்புதைந்திருக்கும் உண்மைகள் புலப்படுமாறு கலை இலக்கியப் படைப்புகளில் சித்திரித்தல் என அதன் சாராம்சத்தைக் கூறலாம். இக்கலைக் கோட்பாடு மேலை நாடுகளில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தான் வளர்ச்சியடைந்தது. முதலாளித்துவச் சமூக அமைப்பின் தோற்றத்துக்கும் இக்கலைக் கோட்பாட்டின் உருவாக்கத் துக்கும் இடையே தொடர்பு இருப்பது இன்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. நவீன புனைகதை இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதைகளிலேயே இது முதல்முதல் வெளிப்பட்டது. டால்ஸ்டாய், ஸ்தயேவ்ஸ்கி, மாக்ஸிம் கார்க்கி போன்ற ரஷ்ய நாவலாசிரியர்களின் படைப்புகளில் இக் கோட்பாடு உச்சநிலை அடைந்தது என்பர்" *(2023: 149)*. மூத்த கவிஞர் இ.முருகையன் "கிழக்கிலங்கைக் கமச்செய்கையின் யதார்த்தச் சித்திரம்" எனக்குறிப்பிடும் கவிஞர் நுஃமானின் "நிலம் என்னும் நல்லாள்" என்ற கவிதை யதார்த்த வாதத்திற்கு உரத்த உதாரணமாகும். கவிதையின் சிலவரிகள் வருமாறு,

அப்போது நான் சிறுவன்/ அப்பா வயலுக்குள்/
எப்போதும் தன்னோடு/ எனைக்கூட்டிச் செல்வதுண்டு.

பள்ளவெளிக் குள்ளே/பதினாலு ஏக்கர் எமக் குள்ளது./
மேலும் ஒருபத்தேக்கர்ப்பூமியை/ஒத்திக்குச்செய்கின்றோம்./
மும்மாரி, அல்லிமுல்லை,/மாட்டுப் பழைக்குள்ளும்/
எம்மாத்திரம் காணி/எங்களுக்குச் சொந்தம் என/
ஊரே புகழ் பாடும்./ உண்மையும் தான் நாங்கள் எல்லாம்/
பாரம் பரியப் பணக்காரப் போடிகள்தான்.

சூடடித்த நெல்லைச் சுமந்து வருகின்ற/
மாடுகளைக் கண்டால்/ வருத்தப் படுவார்கள்./
எப்போதும்/எங்கள் வளவுக்குள் இடம் இன்றி/
முப்பதுக்கு மேல் வண்டி/ மூட்டை சுமந்து வரும்.

மண்டபத்துக் குள்ளேயும்/வாசல் விறாந்தையிலும்/
கொண்டுவந்த நெல்லையெல்லாம்/
கூரை வரை உயர்ந்த/பட்டடைகள் கட்டி, அவற்றுள்/
பவித்திரமாய்க்/ கொட்டிவைப்போம்./
பட்டடைகள் கொள்ளாத நெல்லையெல்லாம்/
மூட்டைகளாய்க் கட்டி/ அறைகள் முழுவதிலும்/
மோட்டுயரத் துக்கே அடுக்கி முடித்து வைப்போம்.

வீட்டுக்குள் நெல்வாடை வீசும்/எனக் கென்றால்
தும்மல் பறக்கும் தொடர்ந்து./
விளக்குவைத்துக்/குந்தி இருந்து படிக்கத்தலைகுனிந்தால்/
அந்துப் பூச் செல்லாம்/அநேகம் படை எடுத்து/
வந்துவந்து மொய்க்கும்/ வரியில் முகத்திலெல்லாம்.

தொல்லை தராது/ சுவரில் இருந்து வரும்
பல்லி, அவற்றைப் பசியாறிச் செல்வதுண்டு!
அட்டூழியம் செய்யும்/ எலியை அழிப்பதற்குப்
பட்டடையில் எங்களது/ பூனை படுத் திருக்கும்!

**ஐந்து. இயற்பண்புவாதம்**

யதார்த்தவாதம்போல் இயற்பண்புவாதமும் ஒரு கலை இலக்கியக் கோட்பாடுதான் என்று குறிப்பிட்டு, யதார்த்த வாதத்தினையும் இயற்பண்புவாதத்தினையும் நுஃமான் ஒப்பாய்வு செய்திருக்கிறார். "ஆங்கிலத்தில் இதனை "நெச்சுர லிசம்" என்பர். நடைமுறை வாழ்க்கையை அப்படியே, உள்ளது உள்ளபடி சித்திரிப்பதை இது குறிக்கும். பிரான்ஸ் நாவலாசிரி யர் எமிலி ஜோலாவின் நாவல்களை இயற்பண்புவாதத்துக்குச் சிறந்த உதாரணங்களாக மேலைநாட்டு விமர்சகர்கள் கூறுவர். எனினும் யதார்த்தவாதத்துக்கும் இயற்பண்புவாதத்துக்கும் இடையே உள்ள இடைவெளி மிகவும் குறுகியது அல்லது பெரிதும் கற்பிதமானது என்றே எனக்குத் தோன்றுகின்றது. எந்த ஒரு படைப்பாளியும் உள்ளதை உள்ளவாறே சித்திரிப்பது என்பது சாத்தியமல்ல புகைப்படத்தில்கூட இது சாத்தியமல்ல. எனினும் ஒரு வாழ்க்கை நிலைமையைச் சித்திரிக்கும் ஒரு படைப்பாளி இந்த நிலைமை ஏன் இவ்வாறு இருக்கிறது, இதற்கான காரணிகள் என்ன என்பன போன்ற கேள்விகளை எழுப்பி அதற்குவிடை காணக்கூடிய முறையில் ஒரு படைப்பை உருவாக்க முடியும். இதே வாழ்க்கை நிலைமைகளைச் சித்திரிக்கும் பிறிதொரு படைப்பாளி இது இவ்வாறுதான் இருக்கும். இது இவ்வாறு இருப்பதுதான் இயற்கையானது என வலியுறுத்தும் வகையில் அப்படைப்பை உருவாக்க முடியும். இந்த வேறுபாட்டை யதார்த்தவாதத்துக்கும் இயற்பண்பு வாதத்துக்கும் இடையிலான வேறுபாடாகக் குறிப்பிடலாம். எனினும் இந்த வேறுபாடு நிலையானதல்ல. வாசகரின் வாசிப்பை - புரிதலைப் பொறுத்துமாறுபடக் கூடும். உதாரணமாக ஒரு இயற்பண்புவாத நாவல் என்று கூறப்படுவதை ஒரு வாசகர் யதார்த்தவாத நாவலாக வாசிக்க முடியும். இது மறுவளமாகவும் நடைபெற முடியும். அதாவது ஒரு யதார்த்த நாவல் என்று கூறப்படுவதை ஒரு வாசகர் இயற்பண்புவாத நாவலாக வாசிக்க முடியும். உதாரணமாக புதுமைப்பித்தனின் "பொன்னகரம்", "ஒருநாள் கழிந்தது" ஆகிய சிறுகதைகளை இருவகைகளிலும் ஒருவர் வாசிக்க முடியும். இதனால்தான் இவ்விரு கொள்கைகளுக்குமிடையே உள்ள இடைவெளி மிகவும் குறுகியது என்றேன். கவிதையில் இயற்பண்புவாதத்துக்கு உதாரணம் தேடுவது சிரமம். எனினும் நீலாவணனின் "வேளாண்மை" ஒரு பொருத்தமான உதாரணமாகத் தோன்றுகின்றது. அதையே யதார்த்தவாதக் கவிதைக்கும் உதாரணமாகக் கூறுவேன்" *(2023: 149, 150)*.

**ஆறு. கற்பனாவாதம்**

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், தொழில் புரட்சியின் விளைவாக அதிக மக்கள் நகரங்களை நோக்கிச் சென்றனர். தொழில்துறையின் வளர்ச்சியால் இயற்கை மாசடைதலும் நிகழத்துவங்கியிருந்தது. இந்த மாற்றங்களுக்கு எதிராக, கற்பனாவாதம் (Romanticism) உருப்பெற்று வந்தது. இம்மானுவேல் காண்டின் (Immanuel Kant: *1724-1804*) மெய்யியல் சிந்தனைகளும் இவ்வியக்கம் தோன்ற காரணமாக அமைந்தன. அறிவொளிக்காலம் (Age of Enlightenment) இலட்சிய சமூகத்தை முன்மாதிரியாக வைத்தது. கற்பனா வாதம் இலட்சிய மனிதனை, கற்பனைமூலம் வளர்த்தெடுத்த கதை நாயகர்கள் வழி முன்மாதிரிகளாக வைத்தது. அறிவொளி இயக்கம் சமூகத்தின் முன்னேற்றத்தை முன்னிறுத்தியதென்றால், கற்பனாவாதம் தனி மனிதனின் உணர்ச்சிகளின் மீது கவனம் கொண்டது. பகுத்தறிவிற்கு பதில் உள்ளுணர்வும், கற்பனையும், தனி மனித உணர்ச்சி களும் முன்மொழியப்பட்டன. நகர மயமாதலுக்கு பதிலாக எளிமையான கிராமப் புற வாழ்க்கையும் இயற்கையும் முன் வைக்கப்பட்டன. கற்பனாவாதகால பிரதிகள் வாழ்வனுபவங் களையும் உணர்ச்சிகளையும் கற்பனை மூலம் வளர்த்து உச்சத்துக்கு கொண்டு செல்பவையாகவும், அக உணர்ச்சி களை இயற்கையுடன் இணைத்து காண்பவையாகவும் இருந்தன. உணர்ச்சிகள் கொந்தளிப்பவையாகவும் மொழி உத்வேகம் இருந்தது. அறிவொளி காலகட்டத்தில், படைப்பின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தின் ஒழுங்கு மீதிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்பு தளர்த்தப்பட்டு, கலை வெளிப்பாட்டுக்கான பல்வேறு அழகியல் மகள் முன்வைக்கப்பட்டன. படைப்பின் உருவாக்கத்தில், அலைஞன் இயற்கையுடன் உரையாடுதலின் வழி, படைப்பு உருவாக்கப்படுகிறது, அதனால் இயற்கையும் படைப்பின் உருவாக்கத்தில் பங்கு கொள்கிறது போன்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அறிவின் வழி இயற்கையை ஆராயும் முறையை விடுத்து, கற்பனை மற்றும் உள்ளுணர்வின் துணைகொண்டு இயற்கையை அழகியல் நுண்ணுணர்வுடன் அறிய முனைந்தனர். காதலும் ஏக்கமும், தனிமையும் கொண்டு இயற்கைமுன் நிற்கும் நாயகர்களை முன்னிறுத்திய காலகட்டம் இது. இக்கால கட்டத்தின் முன்னோடி படைப்பாளர்களாக வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, பைரன், கீட்ஸ் போன்றவர்கள் உயரத்தில் தெரிந்தனர். இவர்கள்தான் ஆங்கில இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படும் "ரொமாண்டிக்" (Romantic: தன்னுணர்ச்சி) காலப்பகுதியின் கவனிப்புக்குரிய கவிஞர்களாக கொண்டாடப்பட்டனர் *(பார்க்க, ஈழக்கவி, "அழகியல் மெய்யியல்" 2020: 138-150).*

இனி, நுஃமான் அவர்களின் கற்பனாவாதம் பற்றிய கருத்தியலை கவனிப்போம். "இதனை யதார்த்தவாதத்துக்கு எதிர்நிலையானது எனலாம். நடைமுறை யதார்த்தத்தில் இருந்து விலகி, மிகைப்படுத்தப்பட்ட, முற்றிலும் புனைவியல் பாங்கான கலைமுறையை இது குறிக்கும். ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய ஒரு கலைக் கோட்பாடு இது. சிந்தனையைவிட உணர்ச்சியையும், மனிதனால் உண்டாக்கப்பட்டவற்றைவிட இயற்கை வனப்பையும் இக்கலைக் கோட்பாடு முதன்மைப்படுத்துகிறது. அழகை ஆராதித்தல் இதன் முக்கிய அம்சமாகும். ஏனைய இலக்கிய வடிவங்களை விடக்கவிதையில் இதன் ஆதிக்கம் அதிகமாகும். வில்லியம் வேட்ஷ்வேத், வால்ட்விட்மன், ஷெல்லி, கீற்ஸ் ஆகியோர் பிரசித்திபெற்ற ஆங்கிலக் கற்பனாவாதக் கவிஞர்களாவர். தமிழில் பாரதியிலும் பாரதிதாசனிலும் அவருடைய வாரிசுகளிடத்திலும் கற்பனாவாதத்தின் செல்வாக்கைக் காணலாம். பாரதிதாசனின் "அழகின் சிரிப்பு" தொகுதியிலுள்ள கவிதைகள் எல்லாமே கற்பனாவாதக் கவிதைகளுக்கு நல்ல உதாரணங்களாகும்" *(2023: 150, 151).*

**ஏழு. சர்ரியலிசம். மெஜிக்கல் ரியலிசம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வளர்ச்சி அடைந்த இலக்கிய இயக்கங்களுள் ஒன்று சர்ரியலிசம் (surrealism) ஆகும். இது மீமெய்ம்மையியல் என தமிழ் பெயர்க்கப்படுகின்றது. 1924 இல் ஆன்றி பிரெட்டன் (Andre Breton) என்பவர் இவ்வியக்கத்தின் தன்மை குறித்தும் இவ்வியக்கத்தினர் மேற்கொள்ளும் சிலநெறிகள் குறித்தும் ஓர் ஆய்வு அறிக்கையினை வெளியிட்டார். அவரது கருத்துப்படி, "பேசும் அல்லது எழுதும் மொழியாலோ, அல்லது வேறு வகையாலோ உள்ளத்தின் அடித்தளத்தில் இயல்பாக ஊற்றெடுத்துப் பொங்கிவரும் சிந்தனை அல்லது உணர்ச்சிக் கோவையினை ஒளிவுமறைவின்றி உள்ளத்தில் எழுந்த வண்ணமே வடித்துக்காட்டுவது "சர்ரியலிசமாகும்" என்கிறார். இவ்வியக்கத்தின் வாயிலாகக் கலையுலகில் மனித மனத்திற்குப் புதியதொரு விடுதலையளிக்கும் திசைநோக்கி ஒரு புரட்சியை உருவாக்க முடியுமென்று அவர் நம்பினார். சர்ரியலிச இயக்கத்தின் வாயிலாக உள்ளார்ந்த உணர்வு நிலையின் உண்மை நடப்பினைப் புறவுலக நடப்போடு இயைய வைத்துக் காட்டமுடியும் என்று நினைத்தார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கவிதை உலகில் மட்டுமன்றிக் கலையுலகிலும் இவ்வியக்கம் ஊடுருவலாயிற்று.

"மெஜிக்கல் ரியலிசம்" (Magic Realism: மாயாஜால யதார்த்தவாதம்) கலையைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது. இது முக்கியமாக லத்தீன் அமெரிக்க இலக்கியங்களில் வெளிப்படத் தொடங்கியது இலக்கியத்தில் மெஜிக்கல் ரியலிசம் யதார்த்தத்தை எதிர்பாராத, சாத்தியமில்லாத கூறுகளுக்குக் கொண்டு வந்து, வாசகனை திகைத்து, பிரமாதமாக வியக்க வைக்கிறது. பின்நவீனத்துவ உத்தியான மெஜிக்கல் ரியலிசம் என்பது நிஜமாகவோ அல்லது சாதாரணமாகவோ தோன்றும் ஒரு கதையாடலில் அற்புதமான அல்லது சாத்தியமற்ற கூறுகளை அறிமுகப் படுத்துவதாகும். மெஜிக்கல் ரியலிஸ்ட் நாவல்களில் சாதாரண வாழ்க்கையில் நிகழும் கனவுகள், முன்னர் இறந்த கதாபாத்திரங்கள் திரும்ப வருதல், மிகவும் சிக்கலான கதைக் களங்கள், காலத்தின் மாற்றங்கள் மற்றும் தொன்மங்கள் மற்றும் விசித்திரக் கதைகள் கதையின் ஒரு பகுதியாக மாறுவது ஆகியவை அடங்கும். பல விமர்சகர்கள் மெஜிக்கல் ரியலிசம் அதன் வேர்கள் தென் அமெரிக்க எழுத்தாளர்களான ஜார்ஜ் லூயிஸ் போர்கஸ் மற்றும் கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ் ஆகியோரின் படைப்புகளில் கொண்டுள்ளது என்று வாதிடுகின்றனர், மேலும் சிலர் அதை லத்தீன் அமெரிக்க பாணியாக வகைப்படுத்தியுள்ளனர். ஜார்ஜ் லூயிஸ் போர்ஹெஸின் ஹிஸ்டோரியா யுனிவர்சல் டி லா இன்ஃபாமியா, மேஜிக் ரியலிசத்தின் முதல் படைப்பாக பலரால் கருதப்படுகிறது. இது தவிர, கொலம்பிய நாவலாசிரியர் கேப்ரியல் கார்சியா மார்க்வெஸின் "தனிமையின் நூறு ஆண்டுகள்" *(1967)*, "கலரா பெருந்தொற்றின் போதான காதல்"*(1985)*, சல்மான் ருஷ்டியின் "இரவின் குழந்தைகள்" *(1981)*, ஹாருகி முரகாமி எழுதிய "கடற்கரையில் காஃப்கா" *(2022)*, எலிசபெத் கிரேவரின் "துக்க கதவு" *(1985)* ஆகியவை மேலைய மெஜிக்கல் ரியலிசத்திற்கு சில எடுத்துக் காட்டுகளாகும்.

"சர்ரியலிசம், மெஜிக்கல் ரியலிசம் என்பன நவீன கலைப் பாணிகள் மட்டுமே. சர்ரியலிசம் மேற்கில் இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வளர்ச்சியடைந்த, முதலாளித்துவப் பொருளாதார, பண்பாட்டு நெருக்கடிகளின் விளைவாகத் தோன்றிய நவீனவாத கலைக் கோட்பாட்டின் ஒரு பிரிவாகும்" எனக்குறிப்பிட்டு, இது பற்றி பின்வருமாறு நுஃமான் விமர்சிக்கின்றார். "வினோதமான கனவுப் பாங்கில், தொடர்பற்ற படிமங்களை ஒன்றிணைக்கும் ஒரு வெளிப்பாட்டு முறையாக இது வளர்ச்சியுற்றது. மெஜிக்கல் ரியலிசம் முதலில் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்கள் சிலரால் வளர்த்தெடுக்கப்பட்ட கலைப் பாணியாகும். இது பின்னர் மேற்கில் பிரபலமடைந்தது. இன்றைய சமூக யதார்த்தத்தைப் புராண - ஐதீக பாணியிலான கதை சொல்லும் முறையில் வெளிப்படுத்தும் கலைப் பாணி தான் இது. இவையெல்லாம் யதார்த்தவாதத்திற்கு எதிரானவை. கண்ட பாவனையில் கொண்டை முடிக்கும்" தமிழ் எழுத்தாளர்கள் சிலர் இதனைப் போலியாகப் பிரதி செய்திருக்கிறார்கள். ஒரு குறுகிய வட்டாரத்தில் இவை பிரபலப்படுத்தப் பட்டும் வருகின்றன. மார்க்சியம் கோட்பாட்டளவில் கலை இலக்கியத்தில் யதார்த்தவாதத்தையே முதன்மைப்படுத்துகின்றது. மூன்றாம் உலகச் சூழலில் யதார்த்தவாதத்திற்கு இன்னும் வலுவான தளம் இருக்கிறது என்பதே என் அபிப்பிராயம்" *(2023: 137).*

"மேஜிக்கல் ரியலிசத்தின் மரணமும் லத்தீன்-அமெரிக்க இலக்கிய வகையினங்களும்" என்ற கட்டுரையில் *(கீற்று: 2006)* ஆர். முத்துக்குமார் முன்வைத்துள்ள விமர்சனத்திலிருந்து ஒரு சிறுபகுதி நுஃமானின் விமர்சனத்திற்கு வலுசேர்க்கும் வகையில் எடுத்துரைக்கப்படுகின்றது. "தமிழில் படைப்பிலக்கிய தளத்தில் தகர்க்கப்பட வேண்டிய அளவுக்கு ஒருபோதும் உச்சம் பெற்றிராத "யதார்த்தவாதம்" என்ற ஈயை நசுக்க, "மேஜிக்கல் ரியலிசம்" என்ற மலையை அதன் மீது கவிழ்த்தனர். ஈயைக் கொன்றதாக இறுமாப்பு அடைந்தது மலை. ஆனால் தப்பித்த ஈ மீண்டும் மலையின் மீது அமர்ந்தது. அமைப்பு மைய வாதத்தை அறிமுகப்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியலாளர்கள், மேஜிக்கல் ரியலிசம் பற்றியும் உரத்த குரலில் பேசத் தொடங்கினர். எல்லா அறிமுகங்களும் போலவே அறிமுகவாதிகளின் கருத்தியலுக்கும், சபலத்திற்கும், கற்பனைக்கும், அரசியலுக்கும், நிலைப்பாட்டிற்கும் உட்பட்டே மேஜிக்கல் ரியலிசமும் "தமிழ்ச்சூழலில்" நுழைகிறது. ரியலிசம் அனைத்துமே "சோஷலிச யதார்த்தவாதம்" அல்லது ஜர்னலிஸ்டிக் ரியலிசம் என்பதாக மட்டுமே இருக்கமுடியும் என்று நாகார்ச்சுனன் நம்பினால், தமிழவனோ தமிழின் பண்டைய கூறுகளுடன் அவை ஏற்கனவே இங்கு இருப்பதாக அதாவது "நச்சினார்க்கினியர் செமியாட்டிக்ஸ்" போன்று, தொல்காப்பியர் சசூர் போன்று இன்னொசன்ட் எரீந்த்ராவும், மணிமேகலையும் என்று அசட்டு மேம்போக்குவாத ஒப்பீடுகளைச் செய்து அறிமுகம் செய்து வித்தார். நம் உள்ளூர் பூமர்களின் நிதானமற்ற மேஜிக்கல் ரியலிச ஆவிநிபாதத்தால் லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் முன் வரலாறு, மேஜிக்கல் ரியலிசத்தின் அதற்கு மட்டுமே உரியதாகக் கொள்ள முடியாத அதன் உத்திகள், மேஜிக்கல் ரியலிசத்தின் மீது அவர்கள் காலத்திலேயே இருந்த விமர்சனம் இவ்வளவும் மூடி மறைக்கப்பட்டு, இங்கு புதிதாக எழுதக்கிளம்பிய வாசகர்கள் தங்களது ஆதர்சமாக நம்பிய ஒரு சில எழுத்தாளர்களை "யதார்த்தவாதி" என்று முத்திரை குத்தி, அவர்களைப்பற்றிய பிரத்யேக விமர்சனங்களை தவிர்த்து அதிரடியாக மட்டம் தட்டவும் "மேஜிக்கல் ரியலிசம்" என்ற "கருத்தாக்கம்" ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. இவைகள் அனைத்துமே விதேசிய உயிரை சுதேசிய பிரேதமாக்கி, அதற்கு பொட்டிட்டு மஞ்சனம் நீராட்டி நெற்றியில் காசு உள்ளிட்ட சடங்குகள் செய்து சிறுபத்திரிகை வாசகர்களின் காட்சிக்கு வைத்த சடல சடங்காகி விட்டது."

**எட்டு. உருவவியல்**

இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகளில் மிகப் பரவலாகச் செல்வாக்குப் பெற்றிருப்பது உருவவியல் அணுகுமுறையாகும். படைப்பு இலக்கியத்தின் வடிவத்தையும், அதன் நேர்த்தியையும் உருவவியல் ஆராய்கின்றது. உருவவியல், ருஷ்ஷியாவில் 1917இல் உருக்கொண்டது. இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில், மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்த இக்கொள்கை, ருஷ்ஷிய வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாக ஆகிவிட்டது. இதன் வரலாற்றை முதன் முதலாக முழுமையாக எழுதி ஆங்கிலம் அறிந்த உலகிற்கு விரிவாக அறிமுகப்படுத்தியவர் விக்டர் எர்லிஹ் என்பவர். இவர் இதனை ருஷ்ஷியாவில் நடந்த புரட்சிக் காலத்தின் குழந்தை என்றும் அதன் பிரத்தியேகமான அறிவுலகச் சூழ்நிலையின் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக இது ஆகிவிட்டது என்றும் குறிப்பிடுகின்றார். உருவவியல் தோன்றுவதற்குக் களமாக இருந்தவை மொழியியல் பற்றிய சிந்தனைகளும் கவிதையில் மொழிநிலைகளின் இடம் பற்றிய சிந்தனைகளும் ஆகும். செகிலோஸ்லோவேகியா, விக்டர் ஷ்க்லோவஸ்கி, போகிஸ் எய்ஹென்பாம், ரோமன் ஜகோப்சன், தொமோ ஷோவ்ஸ்கி, யுரிதின்யனொவ் ஆகியோர் உருவவியலின் முன்னோடிகளாவர். இவர்களே உருவவியல் கொள்கைகள் வகுத்தவர்கள். ஆனால், இவர்கள் யாரும் தம்மை உருவவியல்காரர்கள் என்றோ தம் கொள்கையை உருவவியல் என்றோ அழைத்துக் கொள்ளவில்லை. ஆயினும் இவர்களது கொள்கையின் ஆதார சுருதி உருவம் பற்றி அமைந்ததால், இவர்களது கொள்கை உருவவியல் கொள்கை என்றே அழைக்கப்படுகிறது. "கலை- ஓர் உத்தியாக" என்னும் மகுடத்தில் விக்டர் ஷ்க்லோவஸ்கி 1916இல் ஒரு கட்டுரை எழுதினார். "கலை என்பது அடிப்படையில் ஓர் உத்திதான். உத்திகளின் மொத்தமே கலையாக வடிவம் கொள்கிறது" என உரைத்த இவ்வாய்வு உருவவியலுக்கு உந்துதலாக அமைந்தது.

உருவம் என்பது, உறுப்புகளின் ஒன்றிணைந்த செயல்பாடுகளின் வெளிப்பாடு அது, நடையியல் உத்திகளின் ஒரு ஒட்டு மொத்தமாகும் என்று ஷ்க்லோவ்ஸ்கி குறிப்பிடுகின்றார். "இலக்கிய ஆராய்ச்சியின் உண்மையான தளம், இலக்கியம் அல்ல. ஆனால் இலக்கியத்தனமே (Literariness) ஆகும்" என்பது ரோமன் ஜகோப்சனின் கருத்தாகும். அதாவது குறிப்பிட்ட ஒரு படைப்பை எது- எந்தப் பண்பு- இலக்கியமாக ஆக்கியிருக்கிறது என்பதேயாகும். உருவவியலுக்கு இத்தகைய பார்வையே அடித்தளமாக அமைகிறது. உருவவியல் ருஷ்ஷியாவில் தோன்றினாலும், ஒத்த சூழ்நிலைகளின் பின்னணியில் இது பிற மேலைநாடுகளில் வெவ்வேறு வடிவங்களில் பிரான்சு, இத்தாலி, அமெரிக்கா என்று பல நாடுகளுக்குப் பரவியது. குறிப்பிட்ட வித்தியாசமான ஒலிப் பின்னல்கள், குறிப்பிடும்படியான சொற்சேர்க்கைகள், புதிய சொல் வழக்கு, சொற்பொருள் மாற்றம், உவமங்கள், உருவங்கள், படிமங்கள், குறிப்புச் சொற்கள், ஒலி அல்லது சொல் திரும்ப வருதல் போன்றவை, மற்றும் இவற்றோடு பலவிதமான உறுப்புகளும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிற விதத்தில் காணப்படுகின்ற கவனிக்கத்தக்க தன்மைகள் ஆகியன உருவவியலின் செயல்பாட்டளவிலான சிறப்புக் கூறுகள் ஆகும். இவை எப்படி அல்லது எந்த வழிமுறையில் இலக்கியப் பண்பாக உருக்கொள்கின்றன? சொற்களையும், தொடர்களையும் மட்டுமல்லாமல், நடைமுறையில் வெளிப்படையாகவும் உடனடியாகவும் தோன்றக்கூடிய அனுபவம் முதற்கொண்ட மூலாதாரப் பொருட்களை, அதாவது பழகிய பொருட்களை, பழக்கமிழக்கச் செய்தல் (Defamiliarize) என்பதன் மூலம் இலக்கியப் பண்பு உருக்கொள்வதாக இவர்கள் சொல்கிறார்கள். தமிழ் இலக்கணப் பின்னணியிலிருந்து சொல்வோமேயானால், இது, இயல்பு வழக்கு என்பதனைச் செய்யுள் வழக்காக மாற்றுவது போலாகும். இலக்கியம் என்பது முக்கியமாக ஓர் உருவமே என்றும், எனவே திறனாய்வு உள்ளிட்ட இலக்கிய அறிவியல் என்பது இத்தகைய கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு, உருவத்தின் பல்வேறு அம்சங்களையும் பண்புகளையும் அறிவார்ந்து புலப்படுத்த வேண்டும் என்றும் உருவவியல் வலியுறுத்துகிறது.

"ஒரு மொழித் தகவலை ஒரு கலைப்படையாக ஆக்குவது எது என நினைக்கிறீர்கள்?" என்ற நேர்காணல் கேள்விக்கு நுஃமான் சொல்லிய பதில் இது: "இது ஒரு முக்கியமான கேள்வி. ருஷ்ஷிய உருவவியலாளர்கள் எழுப்பிய கேள்வி. உருவவியல் சிந்தனையின் முன்னோடிகளுள் ஒருவரான ரோமன் ஜகோப்சன் இக்கேள்வியை எழுப்பினார். இது தொடர்பாக "மொழியியலும் இலக்கியத் திறனாய்வும்" என்ற எனது கட்டுரையில் பேசியிருக்கிறேன். விடையளிப் பதற்கு மிகவும் சிக்கலான கேள்வி இது. இலக்கியத்தின் மூலப் பொருள் மொழிதான். மொழி இல்லாமல் இலக்கியம் இல்லை. அவ்வகையில் இலக்கியத்தை ஒரு மொழிக்கலை என்று சொல்லலாம். ஏனைய கலைகளுக்கு மொழி ஒரு அடிப்படைக் கூறாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மொழியை நாம் இலக்கியப் படைப்புக்கு மட்டுமின்றி பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம். உதாரணமாக ஒரு கட்டுரை, விளம்பரம், மரண அறிவித்தல், கவிதை, சிறுகதை எல்லாவற்றின் மூலப்பொருள் மொழிதான். இவையெல்லாம் மொழித் தகவல்கள்தான். ஆனால், ஒரு கட்டுரையில் இருந்து ஒரு கவிதையை வேறுபடுத்துவது எது? உருவவியலாளர்கள் இதற்கு விடையளிக்க முயன்றார்கள். ஜகோப்சன் மொழியின் கவித்துவச் செயற்பாட்டை (poetic function) அதன் பிற செயற்பாடுகளில் இருந்து வேறுபடுத்திக் காட்ட முயன்றார். எல்லா மொழித் தகவல்களிலும் கவித்துவச் செயற்பாடு இருக்கலாம் எனினும் இலக்கியப் படைப்பில் அது குவிமையமாக இருக்கிறது என்று அவர் விளக்கினார். ஆயினும், பின் நவீனத்துவம் முதன்மைப் படுத்தும் பிரதிக்கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்துக்கும் இலக்கியம் அல்லாத வற்றுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அதிகம் பொருட்படுத்துவதில்லை. பிரதிக்கோட்பாட்டைப் பொறுத்தவரை ஒரு விளம்பரமும் கவிதையும் பிரதிகள்தான். இவற்றை ஒருவர் எவ்வாறு பொருள் கொள்கிறார் என்பதிலேயே அது அதிக அக்கறை கொள்கின்றது. இலக்கியம், கவித்துவம் என்பதெல்லாம் நவீனத்துவ யுகத்துக்குரிய சங்கதிகள். பின்நவீனத்துவ யுகத்தில் செல்லுபடியாகாது என்பது பிரதிக்கோட்பாட்டின் உட்கிடை எனலாம்" *(2023: 109, 110)*.

**ஒன்பது. பெண்ணியம்**

உலகளாவிய நிலைப்பாட்டைக் கொண்ட பெண்ணியம் பெண்களின் சமத்துவத்தை வலியுறுத்துகின்றது. 1889 வரை "Womanism" என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினைகளையும் அதன் அடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்பட்ட நிலையில், 1980ஆம் ஆண்டு "Feminism" என்று மாற்றம் பெற்றது. Feminism என்ற ஆங்கிலச் சொல்லானது "Femina" என்ற இலத்தீன் சொல்லிருந்து மருவி வந்ததாகும். 1894 ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன்முதலில் இச் சொல் எழுதப்பட்டிருக்கின்றது. பெண்ணியமானது பெண் தன் இருத்தலை உணர்ந்து தனக்கும் தன் இனத்துக்குமான போராட்டத்தைத் தொடங்கிய பெண்ணியம் இன்றைய நிலையில் ஒவ்வொரு பெண்ணும் தனக்கான சுய அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்ள போராட முன்வர வேண்டும் என்று உணர்த்தி நிற்கின்றது. பிரித்தானிய மெய்யியலாளரும் (Philosopher) பெண்ணுரிமை வழக்கறிஞருமான மேரி வால்ஸ்டன்கிராப் (Mary Wollstonecraft: 1759 – 1797) 1792 இல் வெளிக்கொணர்ந்த "A Vindication of the Rights of Women" என்ற "பெண்ணிய மெய்யியல்" நூல் பெண்ணிய விவாதங்களுக்கு வித்திட்டது. பிரான்ஸ் நாட்டு மெய்யியலாளர் (Philosopher) சைமன் டீ பௌவா (Simone De Beauvoir 1908–1986) 1949இல் வெளியிட்ட "The Second Sex" என்ற பிரதி பெண்ணிய எழுச்சிக்கு முகாந்திரமானது. எலைன் சோவேட்டர் (Elaine Showalter; 1941), ஜூலியா கிறிஸ்தேவா (Julia Kristeva 1941) டிபோரா (Deborah E. McDowell; 1951) முதலானவர்கள் பெண்ணிய கருத்தாடல் களை உருவாக்கி பெண்ணியம் சம்பந்தமான விரிவாக விவாதித்தனர். இன்றைய காலகட்டத்தில் பெண்ணிய வாதிகள் மறுத்தோடிகளாக புதிய கருத்தாடல்களை தோற்றுவித்துள்ளனர். இலக்கியத்திலும் இது தீவிர தாக்கத்தினை செலுத்தியுள்ளது.

நுஃமான் நேர்காணலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "1980க்குப் பிந்திய தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்ணியம் முக்கியப் பங்களிப்பு செய்திருக்கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது. மொழி, இலக்கியம் பற்றிய எனது பார்வையில் பெண்ணியம் தாக்கம் செலுத்தியிருக்கின்றது என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். 1960–களின் இறுதியில் "கவிஞன்" என்ற கவிதை இதழை நான் தொடங்கினேன். பெண்ணை வெளி ஒதுக்கும் ஆண் முனைப்புள்ள இத்தலைப்பை இன்று நான் தேர்வு செய்ய மாட்டேன். அன்று இந்தப் பிரக்ஞை நமக்கு இருக்கவில்லை. இந்த பார்வை மாற்றம் பெண்ணியத்தின் செல்வாக்கு என்பதை மறுக்க முடியாது. ஆயினும் எல்லா "இசங்களும்" எல்லா காலத்திலும் உடன்பாடான செல்வாக்கை செலுத்துகின்றன என்று கூறமுடியாது. ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட சூழலில் முற்போக்கான விடுதலைக் கருத்தியலாக இருக்கும் ஒரு கோட்பாடு பின்னொரு காலத்தில் பிறிதொரு சூழலில் பிற்போக்கான அடக்குமுறை கருத்தியலாக மாறிவிடுவதுண்டு. மார்க்சியமும் இதில் இருந்து தப்பவில்லை. தேசியம் பயங்கரமான சமூக விளைவுகளை ஏற்படுத்தியதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணம் உண்டு. தமிழ்நாட்டில் சாதியத்தின் சமூக விளைவுகள் நாம் அறியாததல்ல. எந்த "இசத்தையும்" வழிபாட்டு ரீதியில் அன்றி, விமர்சன ரீதியில் நோக்க வேண்டிய அவசியத்தையே இவை நமக்கு உணர்த்துகின்றன" *(2023: 117)*.

**பத்து. முடிவாக முற்றுப்பெறாத விவாதங்கள்**

"முற்றுப்பெறாத விவாதங்கள்" என்ற நேர்காணல் தொகுப்பினை "காலச்சுவடு" வெளிக் கொணர்ந்துள்ளது. இப்பிரதியில் எம்.ஏ.நுஃமான் அவர்களின் 14 நேர்காணல்கள் காணப்படுகின்றன. 2023இல் வெளிவந்த இதன் பக்கங்கள் 200 ஆகும். ஓவியர் றஸ்மி அட்டையை அழகாக வடிவமைத்துள்ளார். நூலாசிரியரின் சொல்லில் இந்த பிரதி சொல்லவருவதன் சாராம்சம் முன்வைக்கப் பட்டுள்ளது: "இந்நேர்காணல்களில் என்னிடம் கேட்கப்பட்ட வினாக்கள் பெரிதும் சமூகம், இலக்கியம், அரசியல், மொழி சார்ந்தவையாகவே உள்ளன. அவை பற்றிய எனது தீர்க்கமான கருத்துக்களை இங்கு முன் வைத்துள்ளேன். எனது சில கருத்துகள் சிலருக்கு உடன்பாடு அற்றவையாக இருக்கலாம். அது இயல்பானதே. எல்லோரும் ஒரே கருத்தைக் கொண்டி ருக்க முடியாது. கருத்து வேறுபாடு ஆரோக்கியமானது என்பதே எனது நிலைப்பாடு. விவாதங்கள் முற்றுப்பெறுவ தில்லை. அதனாலேயே "முற்றுப்பெறாத விவாதங்கள்" என இத்தொகுப்புக்குத் தலைப்பிட்டேன்" (2023: 9,10). நூலின் பின் அட்டைக் குறிப்பு சுட்டுவதுபோல, மார்க்சியம், மொழியியல், சமூகம், இலக்கியம், இனத்துவம், தேசியவாதம் என இந்நூலின் பரப்பு விரிவானது. தமிழின் பல்துறை (பேராசிரியர், இலக்கியவாதி, மொழியிலாளர், விமர்சகர், சமூக அக்கறை கொண்டவர்...) ஆளுமை ஒருவரின் விரிந்த வரைபடத்தைக் கண்டடைய முடியுமெனினும், இவ்வாய்வில் நுஃமானின் இசங்களைப் பற்றிய கருத்தாடல்களே கவனக்குவிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இசங்களின் கோட்டுச்சித்திரத் தினை, இசங்கள் உருவாக்கிய முக்கிய விவாதங்களை, அந்த விவாதங்கள் உருவாக்கிய பயன்பாடுகளை எவ்வாறு விமர்சன கண்ணோட்டத்திற்கு உட்படுத்தியுள்ளார் என்பதையே இக்கட்டுரை அவதானித்துள்ளது.

"முற்றுப்பெறாத விவாதங்கள்" தொகுப்பின் உரையாடல்கள் மிக எளிமையாக அமைந்துள்ளன. புலமைத்துவ கருத்தியல்களைக்கூட மிக எளிமையாகவே வெளிப்படுத்தியிருக்கிறார். இசங்களை எளிமையாக விளக்கியிருக்கிறார். எளிமைதான் "நுஃமானிசமாக" அவரது படைப்பாக்கங்களில் பரிணமித்துள்ளது. எம்.ஏ.நுஃமான் ஒரு மொழியியல் அறிஞர். இந்திரன் குறிப்பிடுவது போல, பெரிய ஒரு இலக்கணப் பண்டிதர்தான். இலக்கண பண்டிதர்களிடம் காணப்படும் வறட்டுத்தனம் நுஃமானிடம் கிடையாது. எளிமைதான் அவரது எழுத்துக்களில் அழகியலாக பிரகாசம் கொண்டுள்ளது. நுஃமான் அவர்களது கவிதைகள் ஆதிவாசிகளுடைய கவிதைகள் போல, எளிமையானது என்கிறார் இந்திரன். ஆனால் அவற்றில் ஆயிரம் அர்த்தங்கள், வாழ்க்கை இருக்கும். "உதயப் பொழுதும் அந்தி மாலையும்" கவிதை தொகுப்பில் திளைப்பவர்களுக்கு இது துல்லியமாகத் தெரியும். அனார் கவிதைகள் பற்றிய அறிமுகக்குறிப்பில் அவர் கவிதையின் எளிமை பற்றி தெரிவித்துள்ள கருத்து கவனிக்கத்தக்கது: "கவிதையின் மொழியைப் பொறுத்தவரை அனார் எளிமையில் இருந்து இருண்மையை நோக்கி நகர்ந்திருக்கிறது என்று சொல்லலாம். எளிமை என்பதன் மூலம் கவிதையின் பொருளும் உணர்வும் வாசகருக்கு எளிதில் எட்டக்கூடியதாக இருப்பதையும், இருண்மை என்பதன் மூலம் அவ்வாறு எளிதில் எட்ட முடியாதிருப்பதையும் நான் குறிப்பிடுகின்றேன். இதில் ஒன்று உயர்ந்தது மற்றது தாழ்ந்தது என்ற கருத்தில் அல்ல. இரண்டும் கவிதையின் வெவ்வேறு வகைகள், வெவ்வேறு முகங்கள், கவிதையின் வெவ்வேறு அழகியல் போக்குகள். இயற்கை உலகிலிருந்து நமக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயமில்லாத இல்பொருட் படிமங்களைப் பயன்படுத்தும் போது ஒருவகை இருண்மையும் கிடைக்கிறது. அனார் தன் கவிதையில் வெளிப்படுத்தும் உணர்வுகளை, "காலை வெயிலின் வெம்மைக்குள் இசையில் நீர் உறிஞ்சும் வண்ணத் துப் பூச்சி, அவள் கண்களில் நீல விஷத்தின் கனவுகள்" போன்ற புதிய புதிய இல்பொருட் படிமங்களால் ஆன இருண்மைத் திரைகளால் போர்த்தி விடுகிறார். அது அவரது கவிதைகளுக்கு ஒரு வசீகரத்தைத் தருவதோடு என்போன்ற வாசகர்களுக்கு ஒரு சவாலாகவும் அமைந்து விடுகிறது" (இணையம்: அக்கினிக்குஞ்சு் டிசம்பர் 13, 2020). ஒரு மொழியி யல் புலமைத்துவவாதி, "என்போன்ற வாசகர்களுக்கு ஒரு சவாலாகவும் அமைந்து விடுகிறது" என்று குறிப்பிடுவது அவர்/ அவரது கவிதைகள் எளிமையிசத்தை ஆராதிப்பதால் தான்! அவரது நேர்காணல் கருத்தொன்று கவனிக்கத்தக்கது:

"தனக்கே புரியாமல் எழுதுதல், பிறர் புரிய முடியாதபடி எழுதிக் குழப்புதல், தானும் குழம்பி மற்றவரையும் குழப்புதல் – இப்படி ஒரு எழுத்துப் போக்கு நிலவுகிறதே – அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"மொழி என்பது புரிதலுக்கு உரியதுதான். மொழி புரியா விட்டால் தொடர்பாடல் சாத்தியம் இல்லை. ஒரு இலக்கியப் படைப்பு புரியவில்லை என்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். மொழி, வாசகர், படைப்பாளி என்ற மூன்றும் இதில் சம்பந்தப்படுகின்றன. பரிச்சயமற்ற மொழியில் எழுதப்பட்ட ஒரு படைப்பு புரியாமல் இருக்கலாம். உதாரண மாகச் சங்க இலக்கியத்தைச் சொல்லலாம். அது இரண்டா யிரம் வருடங்களுக்கு முற்பட்ட, இன்று வழக்கில் இல்லாத மொழியில் எழுதப் பட்டுள்ளது. அந்த மொழியில் பரிச்சயம் இல்லாதவர்களுக்கு அது புரியாது. இலக்கிய மொழியில் பரிச்சயமும் பயிற்சியும் இல்லாத வாசகருக்கு அதன் நுண் பொருள்கள் புரியாது. இலக்கிய மொழியில் பயிற்சி பெறும் போது அது புரியலாம்.

நீங்கள் சொல்வது எழுத்தாளர் சார்ந்த பிரச்சினை. சிலர் புரியாமல் எழுதுவதை ஒரு உத்தியாக, கோட்பாடாகக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் போன்ற, உங்களைப் போன்ற நன்கு இலக்கியப் பயிற்சி உடைய வாசகர்களுக்கு ஒரு படைப்புப் புரியவில்லை என்றால் அது படைப்பாளியின் பிரச்சினை தான். பின்நவீனத்துவக் கொள்கைகளைப் பிழை யாகப் புரிந்து கொண்ட சிலர் இப்படி எழுதுகிறார்கள். கோணங்கியின் பிற்கால எழுத்துகள் அப்படிப்பட்டவை. இன்று பல கவிஞர்கள் அப்படி எழுதுகிறார்கள். அவற்றைப் படித்து ஆகா என்று புகழ்வதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். இவர்களைத் தமிழில் அன்றித் தமிழ்போன்ற ஒரு பாஷையில் எழுதுபவர்கள் என்று நான் சொல்வேன். இத்தகைய எழுத்துகள் வீண் என்பதே என் கருத்து" (2023: 27).

நுஃமான் எதைப் பற்றி எழுதினாலும் படைப்பு மனத்தைத் தவற விடாது அணுகினார் என்பதுதான் அவரின் தனித்துவமாக இருக்கிறது என்கிறார் பேராசிரியர் ஸ்டாலின் ராஜாங்கம் (2024). "வல்லினம்" (ஜூன்-ஆகஸ்ட் 2008) நேர்காணலில், "எழுத்தாளன் அல்லது படைப்பாளி என்கிற அடையாளத்தையே எல்லாவற்றிலும் முக்கியமானதாக நான் கருதுகின்றேன்" என்று நுஃமான் குறிப்பிட்டுள்ளார். அவரது எழுத்துகளில் படைப்பு மனமே ஒளிமேல் ஒளியாய் மிளிர்கிறது. அவர் "படைப்பு மனம் கொண்ட திறனாய்வாளர்" என அவதானிக்கப்பட்டுள்ளார். "அதேவேளையில், படைப்பாளி உணர்வுபூர்வமானவர், விமர்சகர் அறிவுபூர்வமானவர் என்கிற இரட்டை எதிர் மறையை மறுக்கும் அவர், படைப்புணர்வு அற்றவர் நல்ல விமர்சகராகவோ அறிவுபூர்வமான சிந்தனைத் திறனற்றவர் நல்ல விமர்சகராகவோ அறிவுபூர்வமான சிந்தனைத் திறனற்றவர் நல்ல படைப்பாளியாகவோ மலர்தல் சாத்தியமல்ல என்று கருதுகிறார். தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக விளங்கிய நுஃமானின் பயணத்தில் நடந்த விதிவிலக்கொன்றை அடுத்ததாகக் கூறலாம். மொழியை ஒரு தொடர்புக் கருவியாகப் பார்த்தது மொழியியல், அதேபோல மொழியியலைப் பொறுத்தவரையில் இலக்கணம் என்பது மொழியின் அமைப்பு மட்டுமே. ஒரு புலமையாளராக மொழியியலைப் படிக்க வேண்டியிருந்த நுஃமான், ஒரு படைப்பாளியாக இவற்றை நுட்பமாக இணைத்தும் பிரித்தும் எதிர்கொண்டிருந்தார் என்றே சொல்ல வேண்டும். இலக்கியம் என்பது மொழித்திறனோ, செய்திறனோ அல்ல என்று கருதிய அவர், நல்ல படைப்புக்கு ஆழ்ந்த அகன்ற அனுபவமும், அனுபவத்தைப் பொருள் கொள்ளும் நுண்ணிய உணர்திறனும் படைப்புத்திறனும் தேவை என்று கருதினார். அதிர்ச்சி மதிப்பீட்டிற்காக எதையேனும் கூறிக் கவனம் ஈர்க்க நுஃமான் ஒருபோதும் முயன்றவரில்லை. அதனாலேயே அவர் அதிகம் எழுதவில்லை என்பதுபோல் தெரியலாம். உண்மை யில், அவர் குறைவாக எழுதவில்லை. நிதானமாக எழுதியிருக் கிறார் என்பதைப் பார்க்க முடிகிறது. தான் எழுத முற்பட்ட விஷயங்களைப் பற்றி ஆழமான வாசிப்பை அவர் பெற்றிருந் தார். கல்வியாளர், ஆய்வாளர் என்று சொன்னாலே புறவய மான பார்வைகளை மட்டுமே கொண்டவர்கள் என்ற கருத்து இங்கு நிலவுகிறது. ஆனால், எம்.ஏ.நுஃமான் இதற்கு எதிரான இனிய புறநடை" (2024). சுந்தர ராமசாமி குறிப்பிடுவது போல, "இவரது எழுத்தில் வாழ்க்கை, மனிதன், கலை மூன்றும் முரண்கள் இல்லாமல் இணைகின்றன" ("விரிவும் ஆழமும் தேடி" 1998: 70). இதனையே "முற்றுப்பெறாத விவாதங்கள்" என்ற பிரதி பேசியிருக்கிறது. 80 வயதிலும் இலக்கிய இயங்கலுக்குள் இருக்கின்ற நுஃமான் அவர்களிடம், "ஓய்வு நிலைப் பேராசிரியராய் ஆகிவிட்டீர்கள். இனி என்ன செய்வதாய் உத்தேசம்?" என்ற கேள்விக்கு அவர் சொல்லிய பதில் இது: "புலமைத் துறையினருக்கு ஓய்வு இல்லை. உத்தி யோக ரீதியில் நான் ஓய்வுபெற்றிருக்கிறேன். இனி சம்பளம் கிடைக்காது. இதுதான் வேறுபாடு. மற்றும்படி நான் பணியில் தான் இருக்கிறேன். வாசிப்பதும் எழுதுவதும்தான் எனது நிரந்தரப் பணி. அதில் மரணபரியந்தம் எனக்கு ஓய்வுக்கு இட மில்லை (2023: 20). "நுஃமானிசத்தை" அல்லது "நுஃமானை" புரிந்துகொள்வதற்கு அவரது "காத்திருங்கள்" என்ற கவிதையே போதுமானது.

மன்னிக்கவேண்டும்
எனக்கு எதற்கு இப்போது பாராட்டு,
பட்டம், பரிசு, விருதுகள்,
விழாக்கள் எல்லாம்..?

காத்திருங்கள்
நான் இறந்து நூறாண்டுகள் ஆகட்டும்
நான் புதைக்கப்பட்ட இடத்தில்
புல் முளைக்கட்டும்
இன்னும் நூறாயிரம்பேர்
புதையுண்டு போகட்டும்

அதன்பின்பும்
என் புதைகுழியின் அடையாளத்தை
உங்களால் கண்டுகொள்ள முடிந்தால்,
என் எச்சங்களில் ஏதாவது ஒரு துணுக்கு
எஞ்சியிருந்தால்,
மின்மினிபோல் அது சற்றேனும்
ஒளி உமிழ்ந்தால்
என்னை நினைவுகூருங்கள்
அதுவரை காத்திருங்கள்
தயவுசெய்து
காத்திருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைப்பு !!

சூரியன் வழுக்கிக்
கடலில் விழுந்த பொழுதொன்றில்
எங்கள் ஒழுங்கையிலே நடந்து போகின்றேன்...

விஜயனிடம் தொலைந்து போன
குவேனியைப் போல
மதில்களிடம் சோரம் போன வேலிகள்
பூவரசுகளை காணாமல்
போனோர் பட்டியலில்
சேர்த்து விட்டிருந்தன..

பூவரசம் ஆடையால்
தன்னைப் போர்த்திருந்த
எங்கள் ஒழுங்கையை முன்னர்
ஒளிந்திருந்து எட்டிப் பார்த்த நிலவு
அம்மணமாகி விட்ட
ஒழுங்கையின் மேனியைத்தன்
வெளிச்ச விரல்களால்
தயக்கம் ஏதுமின்றித்
தடவிப் பார்க்கிறது...

பூவரசம் சருகுகளைக்
கிளறிப் புழுக்களை
உண்டு வாழ்ந்த
செண்பகம் ஒன்று
தெருமுனையில் தேடுவாரற்றுச்
செத்துக்கிடக்கிறது
எந்தன் தேசம் போல...

தாவணியையும் பாவாடையையும்
இரட்டைத்துண்டுத் துணிகளிடம்
இரவல் கொடுத்த
இரவு விடுதி நடனக்காரி போல
செத்த செண்பகத்தைச் சுற்றி
வந்த இலையான்களின்
ரீங்காரத்தில் காணாமல் போன
எனது அக்காவின்
கால் சங்கிலி எதிரொலிக்கிறது...

வழக்கமாக வளையா
வாலுடன் நிமிர்ந்து
நடக்கும் எங்கள் தெருநாய் ஒன்று
வாலை வளைத்தபடி
தமிழ் மறந்த எனதொரு
தம்பியினைப் போலத்
தன் குரைப்பை மறந்து
குனிந்த தலை நிமிராமல் போகிறது...

பனங்காயை உதிர்த்து
விட்ட பனைமரம் ஒன்று
எங்கள் தெருக் கூத்தினைப் போலத்
தேடுவாரற்றுக் கிடக்கும்
பனங்காயைப் பார்த்து
தேகம் பதறியதில்
குருத்தோலை ஒன்று
படபடவென்று தன்கைகளால்
தன்னைத்தானே அறைந்து கொள்கிறது..

எங்கள் நிலத்தினை வலோற்காரமாகப்
பிடித்திருப்பவர் போல அந்தப் பனையில்
ஒட்டி நின்று வளருகின்ற
ஆலில் இருந்து நீண்டு
கொண்டு இருக்கும் அதன் விழுது
தேசாந்தரம் போன
என் தங்கை முன்னர்
சூடியிருந்த மல்லிகைச்
சரத்தினை நினைவு படுத்துகிறது..

நின்றாற் போலவரும்
வெளிநாட்டுப் பயணி
சில டொலர்களைத் தூவுவது போல
சாடையாகத் தூவிய மழை நனைக்க
வந்த மண் வாசத்தினை
வேற்று மணத்திற்குப் பழக்கப்பட்ட
எனது மூக்கினால் முன்னரைப்
போல நுகர முடியாவிட்டாலும்
வாசம் வித்தியாசமாக
இருப்பதை உணர்கிறேன்...

தேடியதை விடத்
தொலைத்ததே அதிகம்
என்ற எண்ணம்
திறந்த சோடாப்போத்தல்
சீறி வருவது போல
நெஞ்சடைக்க அதனை
மூட முடியா அந்தரத்தில்
துக்கம் தொண்டைக்
குழிக்குள் வந்து
தூக்கு மாட்டிக் கொள்ள
அண்ணாந்து பார்க்கிறேன் இது வரை
எனக்கு வழி காட்டியிருந்த நிலவும்
தொலைந்து போயிருந்தது...

- காரைக்கவி கந்தையா பத்மானந்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரம்

மலரன்னை



வீட்டு முன் விறாந்தையில் போடப்பட்டிருந்த சாய்மனையில் சாய்ந்து சயனத்தில் மூழ்கியிருந்தார், தில்லைநாதன். அரசாங்க பணியிலிருந்து அவர் ஓய்வு பெற்றும் இருபது ஆண்டுகள் கழிந்து விட்டன. வயதுக் கேற்ப தள்ளாமை அவரை ஆட்கொண்டு விட்டதால் வெளியில் நடமாட முடியவில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டியதாயிற்று.

கொக்! கொக்!!

மனைவி மங்களத்தின் இருமல் ஒலி அவரது கோழித்தூக்கத்தை கலைத்து விட்டது. திடுக்கிட்டு விழித்தவர் ஒரு கணம் நிதானமாக நிலைமையை ஆராய்ந்தார். மீண்டும் இருமும் சத்தம். அதனைத் தொடர்ந்து மூச்சிரைக்கும் சத்தம். நிதானமிழந்தவராய் அவர் படுக்கையை விட்டு நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார். ஈனக்குரலில் மனைவி அனுங்கியதைக் கேட்டதும் பச்சாத்தாபத்தினால் அவரது மனம் தவித்தது. எழுந்து மெதுவாக உள்ளே போனார்.

அங்கே... கட்டிலில் எழுந்து கால்களை நீட்டிய வாறு மங்களம் உட்கார்ந்திருந்தாள். மூச்சு விடுவதற்கு ஏற்பட்ட சிரமத்தினால் தலை மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருந்தது. மனைவியின் அருகில் போனவர், அவளது தலையைத் தடவியவாறே கேட்டார்.

"மங்களம்! பம் அடிச்ச நீரே?"

வாய் திறந்து பதில் சொல்லும் நிலையில் அவள் இருக்கவில்லை. மெதுவாக கையை உயர்த்தி அறையி லிருந்த மேசையைக் காட்டினாள். மேசை மீதிருந்த பம்மை எடுத்து வந்தவர், அதன் மூடியைக் கழற்றி விட்டு அவளது வாயில் வைக்க அவள் அதனை கௌவிக் கொண்டாள். அவர் பம்மை அழுத்தி மருந்து வாய்க் குழிக்குள் போனதும் மங்களம் வாயைமூடிக்கொண்டு பம்மை விலத்தி விட்டாள். அவர் பம்மை எடுத்து மூடிவைத்துவிட்டு மனைவியின் அருகிலேயே அமர்ந்து கொண்டார்.

சற்று நேரத்தில் மூச்சிரைப்பு குறைந்து அவள் நிதான நிலைக்கு வந்தாள். தில்லைநாதனுக்கு அவரை யறியாமலே அடிவயிற்றிலிருந்து ஒரு பெருமூச்சு திரண் டெழுந்து வந்துவெளியேறி காற்றுடன் கலந்து சங்கம மாகியது. மனமோ கடந்தகால நினைவுகளை மீட்பதற் குத் தாவியது.

மங்களத்தை அவர் மனைவியாக கைப்பிடித்து வருடங்கள் ஐம்பது ஓடி மறைந்து விட்டது. இத்தனை வருட தாம்பத்திய வாழ்க்கையிலும் அவர்களுக்கேயென வாரிசு ஒன்று இல்லாமல் போனது தான் குறை. எனினும் அவரின் அண்ணரின் மகனான கோபி அவர் களுடனேயே வளர்ந்து பிள்ளைப் பேறற்ற குறையை நிறைவு செய்தான். தில்லைநாதனும் மனைவி மங்களமும் அவனைத் தாங்கள் பெற்ற மகனாகவே கருதி பாசத்துடன் வளர்த்து வந்தனர். மங்களம் கோபியை தங்களுடன் வளரவிட்டிருக்கும் பெற்றோருக்கும் அந்த நற்பேறை அருளிய இறைவனுக்கும் மனமுவந்து நன்றி சொல்ல எப்பொழுதும் தவறியதில்லை.

அவர்களது அரவணைப்பில் கோபியும் வளர்ந்து பெரியவனானான் தில்லைநாதன் அவனை ஊக்குவித்து படிக்க வைத்து ஒரு பட்டதாரியாக்கினார். கோபிக்கு ஒரு வங்கியில் வேலை கிடைத்தது. அவனுடைய சம்பாத்தி யத்தை அவனிடமே விட்டு விட்டார், தில்லைநாதன். சுமுகமாகவும், மனநிறைவுடனும் காலம் கழிந்து கொண்டிருந்தது. காலாகாலத்தில் அவனுக்கு ஒரு திருமணத்தை செய்து வைத்துவிட வேண்டுமென்று விரும்பினார். அந்தச் சமயத்தில்த்தான் கோபி தனது உள்ளக்கிடக்கையை அவரிடம் வெளியிட்டான்.

"சித்தப்பா! என்னோட பாங்கில வேலை செய்யிற நிதர்சனா என்ற பிள்ளைை நான் மனதார விரும்புறன். அவவும் என்னை விரும்புறா. நீங்கள் தான் முன் நின்று எங்களுடைய திருமணத்தை நடத்தி வைக்க வேணும்"

தன்னிடம் மண்டியிட்ட வளர்ப்பு மகனின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். மங்களமும் மகனது விருப்பத்தை நிறை வேற்ற வேண்டுமென்று முழுமூச்சாக அவரை ஊக்குவித் தாள். எனவே, தில்லைநாதனும் பெண்வீட்டாரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய தகவல்களை சேகரிக்கத் தொடங்கினார். அவர் சேகரித்த தகவல்கள் இது தான்.

மூன்று பெண்பிள்ளைகளைக் கொண்ட ஒரு ஏழைக் குடும்பத்தில் மூத்தவளாகப் பிறந்தவள் இந்த நிதர்சனா. பொருளாதார ரீதியில் தாழ்ந்த போதிலும் சரஸ்வதியின் கடாட்சம் அந்தக் குடும்பத்து பிள்ளை மீது பரிபூரணமாய் நிலைத்திருந்தது. இரண்டாவது பெண் காஞ்சனா, பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் இறுதி யாண்டு மாணவி. மூன்றாவது பெண் அஞ்சனாவும் பல்கலைக்கழக தேர்வுக்கான பரீட்சையை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருக்கிறாள். இவ்வளவு தான் அவரால் சேகரிக்க முடிந்தது, மங்களம் அவருக்கு ஒரு யோசனை கூறினாள். அதன் பிரகாரம் கோபியிட மிருந்தே அவளது வீட்டு முகவரியை அறிந்து, நேரிடை யாகவே நிதர்சனாவின் வீட்டுக்குப் போனார், தில்லை நாதன்.

"வாங்கோ!" என்று வாய் நிறைய வரவேற்று நிதர்சனாவின் அப்பாவும் அம்மாவும் அவரை நன்கு உபசரித்தனர். முதலில் தன்னை அறிமுகப்படுத்திய தில்லைநாதன், தான் வந்த விடயத்தைப் பற்றியும் மெது வாக அவிழ்த்து விட்டார். எல்லாவற்றையும் மௌன மாகக் கேட்டுக் கொண்டிருந்த நிதர்சனாவின் அப்பா, தனது நிலைமையை விளக்குவதற்காக வாய் திறந்தார்.

"இஞ்சை பாருங்கோ. நீங்கள் நினைக்கிற மாதிரி நான் ஒன்றும் இந்த ஊரவன் இல்லை. எங்களுடைய பூர்விகம் பலாலி. நாங்கள் எங்கட நிலத்தை விட்டிட்டு வந்து முப்பது வருசங்களுக்கு மேலாகுது. இராணுவ ஆக்கிரமிப்பு என்ற பெயரில் நாங்கள் எங்கட வீடு வளவு, காணி பூமி, தோட்டம் துரவு, வயல்வெளிகள் எல்லாத் தையும் விட்டிட்டு வந்தம். எத்தனையோ போர் அனத் தங்களை அனுபவிச்சம். எங்களால் இற்றை வரைக்கும் காப்பாத்த முடிஞ்சது எங்கட உயிர்களை மட்டும்தான். எங்களிட்ட மிச்சமாய் இருக்கிறதும் அது ஒன்று தான்."

அவரது கதையைக் கேட்டதும் தில்லை நாதனின் முகம் பேயறைந்தது மாதிரிப்போய் விட்டது. மெதுவாக குரலில் சொன்னார்.

"வாழ்க்கையில நிறைய கஷ்டங்களை அனுபவிச்சிட்டியள் போல"

நெடுமூச்சொன்றை வெளியிட்ட நிதர்சனாவின் அப்பா தொடர்ந்தார்.

"எங்கட காணி பூமியெல்லாம் அவங்கட வசிப்பிடமாகப் போயிட்டுது. நாங்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைமை. காணியளை சுவீகரிச்சதுக்கு நட்ட ஈடு தருவினம் எண்டு சொல்லிச்சினம். எல்லாம் வாய்ப்பேச்சளவில தான். நாங்களும் அங்கை இங்கை யெண்டு அலைஞ்சது. தான் மிச்சம். எந்தவித பலனும் கிட்டவில்லை."

பேச்சை இடையில் நிறுத்தி தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டார், அவர். பார்வை நிலையற்று வெறித்திருந்தது. தில்லைநாதன் அவரது உணர்வுகளை திசைதிருப்ப முயன்றார்.

"உங்களுடைய துன்பத்தை என்னால புரிஞ்சு கொள்ள முடியுது"

"இது மற்றவையால புரிஞ்சு கொள்ளக்கூடிய துன்பம் இல்லைப் பாருங்கோ. அதை அனுபவிச்ச வனுக்குத்தான் வலி தெரியும்"

விரக்தியுடன் அவர் கூறிய வார்த்தைகள் தில்லை நாதனின் மனதை நெகிழவைத்தது. இவருக்கு என்னா லான நிவாரணத்தை நான் செய்தே ஆக வேண்டும் என மனம் கங்கணம் கட்டிக் கொண்டது.

"துவங்கீட்டீங்களே உங்கட புராணத்தை"

மனைவியின் செல்லமான கண்டிப்பு அவரைப் பாதிக்கவில்லை. மீண்டும் தொடர்ந்தார்.

"நாங்கள் ஊரை விட்டு ஓடி வரேக்க என்னுடைய மூத்தவள் நிதர்சனா ஆறுமாதப்பிள்ளை. இப்ப... அவள் படிச்சு பாங்கில நல்ல பதவியில் இருக் கிறா. மற்றவளுக்கும் இந்த வருசத்தோட படிப்பு முடி யுது. மூன்றாவது பிள்ளை சோதினை எழுதிப்போட்டா. அவளுக்கும் கம்பஸ் கிடைக்கும் எண்டு எதிர்பார்கிறம். கடவுளே என்று எனக்கு பிறந்ததெல்லாம் கெட்டிக்காரப் பிள்ளையள் தான். அந்தளவில் நான் குடுத்து வைச்சிருக் கிறன்"

சொல்லிவிட்டு அவர் நிறுத்த, தில்லைநாதன் தன்னையறியாமலே வாய் புலம்பி விட்டார்.

"உந்த விசயத்தில நான் பாவியாய் போயிட்டன் பாருங்கோ."

"என்ன! என்ன சொல்லுறியள் நீங்கள்"

ஆச்சரியத்துடன் வந்தது வினா.

"ஓம். உண்மையைத்தான் சொல்லுறன். கடவுள் என்னை வஞ்சிச்சிட்டார். எங்களுக்கு பிள்ளைப் பாக்கியத்தைத் தர மறந்திட்டார்"

சந்தேகத்துடன் நிதர்சனாவின் தாய் வாய் திறந்தாள்.

"அப்ப...கோவி"

பட்டென பதிலளித்தார் தில்லைநாதன்.

"கோபி என்னுடைய வளர்ப்பு மகன். எனது கூடப்பிறந்த அண்ணரின் மகன்"

"அப்பிடியே.."

ஏக காலத்தில் இரண்டு குரல்கள் வெளியாகின. அவர்களது கவனத்தை திசைதிருப்பும் நோக்கத்தோடு தில்லைநாதன் ஒரு கேள்வியை கேட்டார்.

"இது உங்களுடைய சொந்த வீடு தானே?"

"ஏதிலிகளாய் ஊரை விட்டு வெளியேறிய எங்களால ஒரு குழி நிலத்தைக்கூட வாங்க முடியவில்லை. என்னுடைய பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினன். இத்தனை காலமும் எத்தனையோ வாடகை வீடுகளில் வாழ்க்கை கழிஞ்சு போச்சுது. எல்லாமே துன்ப அனுபவங்கள் தான். இதுவும் வாடகை வீடு தான். இனி பிள்ளைகள் தலையெடுத்திட்டுதுகள். நிதர்சனா பாங்கில லோன் போட்டு ஒரு இரண்டுபரப்பு காணியை வாங்கி விட்டிருக்கிறாள். மற்றவளும் சேர்ந்து அதில ஒரு சின்ன வீட்டைக் கட்டப் போறதாய் சொல்லிக் கொண்டி ருக்கினம் கண்டியளோ. அதுக்குப் பிறகுதான் எங்களுக்கு சொந்த வீட்டில வாழுற பாக்கியம் கிட்டும்."

சொந்த வீடு என்று உச்சரித்ததும் அவரது கண் களில் தோன்றிய பிரகாசத்தை தில்லைநாதன் அவதானிக் கத் தவறவில்லை. விடைபெறும்போது தில்லைநாதன் தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்.

"எங்களுக்கு சொத்து பத்து எல்லாம் முக்கிய மில்லைப் பாருங்கோ. பிள்ளைகளின்ரை விருப்பம் தான் முக்கியம். எதுக்கும் நான் அண்ணரிட்ட ஒரு சொல்லு கேட்டிட்டு முடிவு சொல்லுறன். என்ன இருந்தாலும் அவர் கோபியை பெத்தவராயிற்றே"

அவர்களிடமிருந்து விடை பெற்றவர், நேராக அண்ணர் வீட்டுக்குப் போனார். விஷயத்தைக் கேட்டதும் அண்ணர் துள்ளிக் குதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போயும் போயும் என்ரை பிள்ளைக்கு அந்த அன்னக்காவடிள் வீட்டிலையோ சம்மந்தம் செய்யிறது. நீ எந்த முகத்தோட இதை என்னட்ட சொல்ல வந்த நீ"

மனக்குழப்பத்தோடு தில்லைநாதன் வீடு வந்து சேர்ந்தார். எனினும் கோபியின் பிடிவாதம் வெற்றி கண்டது. அப்பாவை எப்படியோ வழிக்கு கொண்டு வந்து விட்டான். ஒருவாறு கோபி நிதர்சனா திருமணம் நடைபெற்று கோபி நிதர்சனா வீட்டுக்கு வாழப் போய்விட்டான். நிதர்சனா தங்கள் வீட்டு மருமகளாக வாழ வரப்போகிறாள் என பகற்கனவு கண்டதில்லை நாதனுக்கும் மனைவி மங்களத்துக்கும் கிடைத்தது ஏமாற்றமே. அவர்களது மனநிலையை அது வெகுவாகப் பாதித்து விட்டது. ஒரேயடியாக மனமும் உடலும் தளர்ந்து போயினர். நடைப்பிணங்களாக அவர்கள் உலவத் தொடங்கினர்.

ஓரளவு சுகதேகியாக வாழ்ந்து வந்த மங்களம் ஆஸ்த்துமா நோயினால் பீடிக்கப்பட்டாள். அண்ணர் குடும்பமும் அவர்களை எட்டிப்பார்ப்பதில்லை. தில்லை நாதனும் மங்களமும் தான் கோபியை தவறாக வழி நடத்தியிருக்கிறார்கள் என்பது அவர்களது கருத்து. மன வேதனை அவருக்கு உயர் இரத்த அழுத்த நோயை பரிசாக அளித்திருந்தது. நோயாளர்கள் ஆகிவிட்ட இருவரையும் தள்ளாடை கவ்விக் கொண்டது. மங்களத்தினால் சமையலைக்கூட கவனிக்க இயலாத நிலை.

மங்களம் சுகதேகியாக உலவிவந்தபோது தனது இரத்தவழி உறவினர்களின் பிள்ளைகள், கணவரது சகோதரர்களின் பிள்ளைகள் என எத்தனையோ பேரை வளர்த்து விட்டிருக்கிறாள். முன்பெல்லாம் சித்தி, பெரியம்மா, மாமி என அழைத்து அவளை நாடி வருவோரெல்லாம் உடல் நலிந்துபோன அவளைக் கைவிட்டு விட்டனர். அதனால் அவளது உடல் நோயை விட மனம் தான் அதிகமாக பாதிக்கப்பட்டு ஏங்கித் தவித்தது.

"உடல் பலம் இருக்குமட்டும் நான் எத்தனையோ பேரை அரவணைத்து ஆதரித்தேன். இன்று உடற் பலமிழந்து நான் அந்தரிக்கும் நிலையில் எல்லோருமே என்னை கைவிட்டு விட்டார்கள். இறைவன் கூட சஞ்சரித்து விட்டாரே"

கடவுள் மீது கொண்ட நம்பிக்கையும் கூட தளரத்தொடங்கிது. அதனை நிவர்த்தி செய்வது போல் கமலம் அவர்களை நாடி வந்தாள். இறுதிக்கட்ட ஈழப் போரில் கணவரை இழந்தவள், அவள். கொழுகொம்பும் கொடியும்போல் தில்லைநாதனும் மனைவி மங்களமும் இருவரும் தம்மை நாடி வந்த கொடியை இறுக பற்றிக் கொண்டனர். கமலமும் அதற்கு பிரதி உபகாரமாக அவர்களது நலன்களை அக்கறையுடன் கவனிக்கத் தொடங்கினாள்.

தாங்கள் தூக்கி வளர்த்து ஆளாக்கிய மகன் கோபி தங்களிடம் ஒரு வார்த்தை சொல்லாமலே தூர தேசம் போய் விட்டதை அறிந்து அவர்களது மனம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் துடித்துத் துவண்டது. கடவுள் பிள்ளைப் பாக்கியத்தை எமக்கு எட்டாக்கனியாக்கிய போது நாம் எப்படி வளர்ப்புப் பிள்ளையைமுற்றாக நம்பியிருந்து ஏமாற்றமடைந் தோம். எல்லாம் இவன் செயல் என எண்ணி கடவுளை நொந்து கொண்டனர். எனினும் தாங்கள் சுற்றம், உற்றார் உறவினர் மீது செலுத்திய அன்பின் பிரதிபலிப்பாகத் தான் கடவுள் தங்களிடம் கமலத்தை சேர்ப்பித்திருக் கிறார் என முழுமனதாக நம்பினார்கள்.

கமலத்துக்கு இரண்டு பிள்ளைகள். உயர்தர வகுப்பில் ஒருவனும், சாதாரணதர வகுப்பில் மற்றவளு மாக பாடசாலையில் பயின்று கொண்டிருந்தனர். கமலம் அதிகாலையில் எழுந்து உணவு தயாரித்து அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிய பின்னர்தான் தில்லைநாதன் வீட்டிற்கு வருவது வழக்கம்.

"அம்மா!"

குரல் கேட்டதும் தில்லைநாதனும் மனதில் ஓடிக்கொண்டிருந்த நினைவுத்தொடர் குறுக்கறுக்கப் பட்டதால் திடுக்கிட்டு விழிப்படைந்தார்.

"வா பிள்ளை கமலம். இண்டைக்கு அம்மாவுக்கு முட்டு இழுத்தது. சுடுதண்ணி வைச்சுத்தான் அவவை குளிப்பாட்ட வேணும்."

"அதுக்கென்ன வைக்கிறன், இப்ப உங்களுக்கு என்ன சாப்பாடு செய்யிறது?"

அவர் அதே வினாவை மனைவி மீது திருப்பினார்.

"இஞ்சரப்பா மங்களம். என்ன சாப்பிடப் போறீர்? இடியப்பமும் சொதியும் வைக்கச் சொல் லட்டே?"

அனுக்கத்துடன் வந்தது மங்களத்தின் பதில்.

"இல்லையப்பா. புளிக்கஞ்சி எண்டால் வாய்க்கு இதமாயிருக்கும் எண்டுபாக்கிறன். பகலைக்கும் சேர்த்து வைச்சுவிட்டால் கமலத்துக்கும் வேலை குறையும்."

மற்றவர்களின் சிரமத்தை நன்கு புரிந்து அனுப வித்து உணர்ந்தவளாயிற்றே, அவள். கஞ்சிக்கு உலையை அடுப்பில் ஏற்றமுன் வெந்நீரை கொதிக்கவைத்த கமலம், அதை தண்ணீருடன் கலந்து துலாவியவாறே கூறினாள்.

"ஐயா! கேட்டியளே புதினத்தை. எங்கட பிள்ளையார் கோயில் திருவிழாவெல்லே நடக்குது. நேற்றைக்கு பலாலியார் வீட்டுத் திருவிழாவாம். உங்கினை கதைச்சினம்"

"எட பலாலியார் ஒரு திருவிழா செய்யிற அளவுக்கு வந்திட்டுதோ காலம்"

உண்மையிலேயே அதிசயமாக இருந்தது தில்லைநாதனுக்கு. கமலம் தொடர்ந்தாள்.

"அதையேன் கேக்கிறியள். பகல் திருவிழா முடிய அன்னதானமாம். நல்ல சாப்பாடு என்று சனம் சொல்லிச்சுதுகள். இரவுத் திருவிழாவுக்கு மேளக்கச்சேரியாம். எல்லாம் முடிய வாத்தியக்காரர்கள் நாதஸ்வரம் வாசிச்சவைக்கு தங்கச்சங்கிலியும், தவில் வாசிச்சவைக்கு தங்க மோதிரமும் போட்டவையாம்."

"எங்காலையாக்கும் அவைக்கு அவ்வளவு பணம்"

மனதில் தோன்றியதை வாய்விட்டு சொல்லிக் கொண்டார். அதற்குரிய பதிலையும் கமலமே சொல்ல வேண்டியிருந்தது.

"அது வேறொன்றுமில்லை. பலாலி வாத்தியாரின்ரை மகளும் மருமகனும் வெளிநாட்டிலையிருந்து வந்திருக்கினமாம். அவை தான் செலவழிச்தென்று சனம் கதைக்குதுகள் ஐயா"

தில்லைநாதன் மௌனமானார். மங்களத்தை நிமிர்ந்து பார்த்தார். கமலம் குவளையால் மொண்டு மொண்டு நீரை அவளது முகத்தில் வார்க்க, அவளோ தனது இரு கைகளாலும் அதை ஏந்தி முகத்தை அலம்பிக் கொண்டிருந்தாள். கமலம் வார்த்த வெந்நீர், முகத்தி லிருந்து கீழே வடியும் போது உவர்நீராக மாறிக் கொண்டிருப்பதை எவருமே அறிந்திலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிப்பும் தவிர்ப்பும்

இடறிவிழுந்த இடத்திலிருந்தே
எழுதலுக்கான நாட்கல்லை
நாட்டத் தொடங்குகிறேன்
துவள்தல் துறந்து நான்...
ஆனால் நீயோ...,
கொடுக்குக் கட்டிக்கொள்கிறாய்
நிர்மூலமாக்குதலுக்கான
சக்கர வியூகத்தை நிறுவி
அதன் மத்தியில்
அனைத்து ஆயுதங்களையும் குவித்தவனாய்...

நான் உணர்கிறேன்,
முன்னோக்கிப் பாய்தலுக்கான
உன் உள்ளுந்தலில்
தவறேதுமில்லை!
ஆனால் என்பாதையில்
"குழிகளைப் பறித்து"
வக்கிர முட்களை வலிந்து பரப்பி,
பழிப் பிசுங்கான்களைக் கொட்டி,
கோள் ஆணிகளைக் கூர்மையாக்கி அறைந்து
முட்கம்பிகளை அடுக்காக்கிப்
பொறிவைக்கிறாய் போகுமிடங்மெங்கும்!

எத்தனை பிரியம் உனக்கு?
என் உதிரங்களால்
உன் கண்களை நிரப்புவதில்...

எப்போது உணர்வாய்?
உன்னைப்போலவே...
எனக்கும் தோல்வியில்
பெருவிருப்பேதும் இல்லை என்பதை
அப்போதாவது...?
முரணிலைக்கான
உன் அலாதி வாஞ்சை
அவந்தடங்கலாம்...?

துன்பத் துருத்தியில் காய்ச்சி,
வேதனை மடத்தில்களால்
வேண்டுமட்டும் தாக்கி,
சொரசொரத்த வார்த்தைகளால்
சாணை பிடிக்கப்பிடிக்க திரழ்கிறது
வெற்றிக்காக நான் இட்ட நாட்கல்...!

ஆனாலும்...
எனக்குத் துளியும் உவப்பில்லை
தோல்வியையும் துன்பத்தையும்
வித்திடலில்
எழுதலுக்காக நான் இட்ட
நான் இட்ட
நாட்கல்லின்மீதே
எனது கவனத்தைக் குவிக்கிறேன் துணிந்து!

- அ.பௌநந்தி



## பகையின் பெருங்காதல்

இழுக்கினை உருவாக்கி இழுத்துப்பிடித்து
ஊதிப்பெரிதாக்கும் இயல்பு

பஸ்பமாய் இல்லாதெரிந்தொழியும்
என் பெறுமானங்கள்

கண்டால் கனிவாயும் காணாவிடில்
எரிவாகவும் உன் கண்கள்

கர்வத்தின் சாத்தானுடன் எப்போதும்
கலந்துபோன உன் சம்பாஷணைகள்

நெகிழ்வின் உச்சத்தில் நெருங்க நெருங்க பகையின்
பெருங்காதலை வளர்க்கும் உன்னிதயம்

எனது மகிழ்ச்சி உனக்குப் பிடிக்காத
விஷம் தடவிய விஷயம்

எனது வெற்றியில் உனது பொறாமை
வலையின் வீச்சம் படரும்

துளியும் நான் உவகை பெறக்கூடாதென்பதில்
மெத்தக்கவனமாய் நீ

எனது அடைவு உன்னிடம் எடுபடாத
ஏடாகூட இளப்பம்

உன் சம்பந்தப்பட்டவை யாவுமே மரணவாயில்
கொண்டு இரகசியமாய்த் தாளிடப்பட்டவை

அதுசரி,
எப்படி நாம் இதுவரையில்
நண்பர்களாயிருந்தோம்.

- ஜலீலா முஸம்மில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு

சியாமிளா யோகேஸ்வரன்



அம்மா கமலம் கிரைண்டரில் எதையோ அரைத்துக் கொண்டிருந்த சத்தம் சுஜாவின் காதுகளில் நாராசமாக விழுந்தது. அவளின் இதயம் காலையில் இருந்தே படபடவென்று அடித்துக் கொண்டிருப்பதால், சின்ன ஓசை கூட இதயத்தில் ஓங்கி அடிப்பது போன்ற உணர்வைக் கொடுத்தது. சத்தமே இல்லாத இடமொன்றுக்குச் சென்று அமர்ந்து கொள்ள வேண்டும் போன்றதொரு ஏக்கம் பெரிதாக எழுந்தது. எழுந்ததில் இருந்து எந்த வீட்டு வேலையையும் செய்யத் தோன்றாமல், வீட்டுக்கும் தோட்டத்துக்கும் நடை பயின்றே களைத்து விட்டாள்.

சாதாரணப்பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளி வரப்போவதாக வந்த அறிவிப்புத்தான் சுஜாவை இப்படி நிற்க இருக்க விடாமல் கலங்கடித்துக் கொண்டிருக்கின்றது. ஏமாற்றங்களை மட்டும் சந்தித்து நலிந்து போயிருக்கும் இதயம், சின்ன ஒளித்துணுக்காவது தெரிந்து விடாதா என்ற தவிப்புடன் காத்திருக்கின்றது. பதினைந்து வருடங்களாக அவளின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, கனவுகள், காத்திருப்புகள் என்று எல்லாமே மூத்தவன் நரேனின் இந்தப் பெறுபேற்றைச் சுற்றித்தானே சுழன்று கொண்டிருக்கின்றன.

தன்னுடைய பெறுபேறுகள் வந்த கூட மனம் இத்தனை அல்லாடியதாய் அவளுக்கு ஞாபகமில்லை. படிப்பில் பெரிதாக அக்கறை காட்டாததால் வீட்டுக்கு இளையவளான அவளின் பெறுபேற்றை யாரும் பெரிய கனவுகளுடன் எதிர்பார்த்திருக்கவில்லை. உயர்தரத்தில் கலைப் பாடம் படித்த போது, அவளில் நம்பிக்கை வைத்திருந்த ஆசிரியர்களுக்காகவே சிறப்பாகப் படித்தாள். அத்துடன் வகுப்பின் நட்சத்திர நாயகனுக்கு இவளின் மேல் ஒரு கண் இருப்பது தெரிந்ததும், அவனுக்காகவும் கவனமாகப் படித்தது வீண் போகவில்லை. பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானாள். அதன் பின் படிப்பின் உச்சங்களைத் தொடுவது ஒன்றும் கடினமானதாக இருக்கவில்லை.

எத்தனை படித்தும் தான் என்ன? சில நேரங்களில் விதியோ அல்லது வினையோ வாழ்க்கையில் கோரமாக விளையாடி மீள முடியாத பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இல்லையென்றால் வார இறுதி விடுமுறைக்காக பேராதெனியவில் இருந்து கொழும்பில் இருக்கும் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த போது பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தவன் பேச்சு கொடுத்த போது பேசாமல் இருந்திருக்கலாம். அன்றைய நாளுக்குப் பிறகாவது அவன் தொடர்பைத் துண்டித்து விட்டிருக்கலாம். அல்லது அவளின் தலையெழுத்தை மாற்றி வைத்த அந்த நாள் அவள் வாழ்வில் வராமலேயே போயிருக்கலாம்.

"பேராதெனியவில் படிக்கிறீர்களா?" பக்கத்தில் இருந்தவன் கேட்டான்.

"ம்" என்று சொல்லி விட்டுக் கதைப் புத்தகத்தைப் படிப்பது போன்று பாவனை செய்தாள். விதி அவளைக் கவிழ்க்க என்றே சதி செய்திருக்க வேண்டும்.

திடீரெனப் பிடித்துக் கொண்ட மழை கொட்டத் தொடங்கச் சாரல் ஜன்னலுக்கால் அவள் முகத்தில் அறைந்து அவளை நனைத்தது. சுஜா ஜன்னலைப் பூட்ட முயற்சி செய்த போது, அது அசைய மறுத்து அடம் பிடித்தது. அவளைச் சீட்டில் இருந்து வெளியே வரச் சொல்லி விட்டு ஜன்னலைப் பூட்டிய அவன் கண்ணியம் அவளுக்குப் பிடித்திருந்தது. நன்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை.

பஸ்சில் இருந்து இறங்க முன்னர் இவளின் கைத்தொலைபேசி இலக்கம் அவன் தொலைபேசியில் பதிவாகி விட்டிருந்தமையும் விதியினது விளையாட்டின் தொடர்ச்சியே.

அமைதியாகக் குழைந்து பேசியே அவள் மனதில் இடம் பிடித்தான் கிருபா என்ற கிருபாகரன். பொறியியலாளராக வேலை செய்கின்றேன் என்று சொன்னது அவளுக்குள் இருந்த தயக்கத்தை உடைக்கப் போதுமானதாக இருந்தது. காதலிக்கின்றேன் என்று சொன்னால் தந்தை கொன்றே விடுவார் என்ற அச்சத்தில் வீட்டுக்குச் சொல்லாமல் மறைத்தாள். ஆனால் அதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக நாட்கள் ஒளித்து வைக்க முடியவில்லை. எல்லோரும் தூங்கி விட்டார்கள் என்று எண்ணிக் கொண்டு கிருபாவிடம் பேசியதைக் கேட்ட தந்தை போனுடன் சேர்த்துக் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைத்தார். பல்கலைக்கழகம் செல்ல வேண்டாம் என்ற தந்தையின் கடும் உத்தரவை அண்ணனும் அக்காளுமாய் பேசித் தணித்தார்கள். ஆனாலும் பதிவுத்திருமணத்தை உடனே நடத்த வேண்டும் என்ற அவரது உத்தரவை மீற முடியவில்லை. பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த சுஜா, மீள முடியாத துயரத்தில் மாட்டிக் கொண்டு விட்டாள் என்பது வீட்டினர் யாருக்கும் அப்போது புரியவில்லை.

தந்தை பொல்லாதவர் என்று சொல்லி சுஜா கிருபாவிடம் அனுதாபம் தேடியபோது, தன்னுடன் வந்து தங்கச் சொன்னான். பதிவுத் திருமணம் முடிந்து விட்டது என்றாலும் தந்தை அனுமதி தர மாட்டார் என்பதால் விடுதியில் நிற்பதாகச் சொல்லி விட்டு அவனுடன் போய் தங்கினாள். முதலில் இனிக்கப் பேசியவனின் போக்கில் போகப் போக மாறுதல்கள் வரத் தொடங்கி விட்டிருந்தன. பல்கலைக்கழகத்தில் என்ன செய்கின்றாள் என்பதை ஒன்று விடாமல் தனக்குச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தான். ஒரு நாள் சொல்லாமலேயே அவளைப் பார்க்க வந்திருந்தவன் சிரேஷ்ட மாணவனின் சுகநல விசாரணைக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தவளைக் கண்டதும் முகம் கறுத்துப் போனான். அடுத்து நின்ற இரண்டு மணி நேரம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பிய போது சுஜாவுக்கு முதன் முதலில் வாழ்க்கையைப் பற்றிய கவலை வந்தது.

அந்த வார இறுதியில் அவனுடன் தங்க என்று சென்றிருந்த போது வார்த்தைப் பிரயோகங்கள் தப்பாகவே இருந்தன. "அலைபவள்" என்ற வார்த்தை அவளின் காதல் இதயத்தை நொருக்கப் போதுமானதாக இருந்தது. எப்போதடா கிளம்புவோம் என்று இருந்து விட்டுக் கிளம்பியவளுக்கு தொலைபேசியில் கூட அவனிடம் பேசப் பிடிக்கவில்லை. ஆனால் தொலைபேசியில் அழைத்த போது பேசாமல் இருக்கவும் முடியவில்லை.

"என்ன புளிச்சுப் போட்டுதோ கோல் எடுக்கக் கஷ்டமாயிருக்குது?" சுஜாவுக்குப் பதில் சொல்ல விருப்பமிருக்கவில்லை என்றாலும் அவன் வாயை அடைக்கா விட்டால் தன்னை வார்த்தைகளால் வதைப்பான் என்பதற்காகவே சமாதானமாகப் பேசினாள். எதிர்காலத்தைப் பற்றி அன்று முளைத்த அச்ச உணர்வு பெரிதாக வளர்ந்து அவளின் தன்னம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் மெல்ல மெல்லக் காவு கொண்டு விட்டிருந்தது.

படிப்பு முடிந்து திருமணத்தை முடிக்க என்று சுஜாவின் குடும்பத்தினர் நாள் வைத்த போது, மீள முடியாத புதைகுழியில் மாட்டிக் கொள்வது போன்ற உணர்வே அதிகமாக இருந்தது. காதலித்தவள் அவள் என்பதால் கிருபாவைப் பற்றிய உண்மைகளை வீட்டில் சொல்லக் கலக்கமாக இருந்தது. சொன்னாலும் இனி மீள்வதற்கு வழிகள் இருப்பதாகத் தோன்றவில்லை. காதலித்தவனுடன் திருமணம் என்ற போதும், சின்னச்சிரிப்புக் கூட இன்றி கல்யாண மேடையில் அமர்ந்திருந்தாள்.

தனிமையில் அவனுடன் வாழவென்று போன சில நாட்களிலேயே கிருபாவின் முழு சுயஷரூபமும் தெரிந்து போனது. பொறியியலாளர் என்று சொன்னவன் மின்சார ஊழியர் என்பது தெரிய வந்தது முதலாவது அதிர்ச்சி. வேலைகளுக்கு விண்ணப்பிக்க சுஜா முயன்ற போது, அவளை வேலைக்கு அனுப்புவதில் கிருபாவுக்கு இஷ்டமிருக்கவில்லை என்பது தொடர்ந்து கிடைத்த அதிர்ச்சி தந்தைக்குப் பெண் குழந்தைகளைக் காப்பது நோக்கமாக இருந்ததில் வெளியே அனுப்புவதை விரும்ப வில்லை என்றால் கிருபா சந்தேகத்தால் அவளை வெளியே அனுப்புவதை விரும்பவில்லை. அவனது சந்தேகத்தில் தினம் தினம் தீக்குளித்து, அவனது வார்த்தைகளால் காயப்படுவதை விட பேசாமல் வீட்டில் இருக்கலாம் என்று சுஜாவுக்கும் தோன்றி விட்டிருந்தது.

வீட்டு செலவுகளுக்குப் பணம் போதாமல் போன போது "சீதனமா கொண்டு வந்தாய்?" என்று வார்த்தைகளால் சுட்டான். இதற்கு மூன்று பரப்புக் காணியும் லட்சங்களில் பணமும் அவனுக்குச் சீதனமென்ற பெயரில் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு சில மாதங்கள் வரையில் அவனது அர்த்தமில்லாத பேச்சுகளுக்கு எல்லாம் பதில் கொடுத்துக் கொண்டிருந்தவள் ஒரு கட்டத்தில் அது வெறுத்துப் போகவே அமைதியாக இருக்கத் தொடங்கி விட்டாள். அது அவனை இன்னமும் எரிமலையாக்கியதில் எப்போது எதற்குக் கொதிப்பான் என்பதே தெரியாமல் இருந்தது. ஒரு கட்டத்தில் தாயிடம் சொல்லி அழுதாள்.

"ஆம்பிளைகள் இப்பிடித்தான். அன்பாகச் சொல்லித் திருத்தப்பார், ஒரு பிள்ளை பிறக்கச் சரியாகி விடும்." அத்தனை அன்னைமாரும் தப்பாமல் சொல்லும் ஆறுதல் மொழியையே அவரும் சொன்னார்

கமலம் சொன்னது நடக்க வேண்டுமே என்று குழந்தைக்காகத் தவம் இருக்கத் தொடங்கினாள். மாதங்கள் கடந்தனவே தவிர, அவள் கலி தீர்க்கும் குழந்தைப்பாக்கியம் கிடைக்கவில்லை. ஒருமுறை மாதவிலக்கு வந்து விட்டதைச் சொன்னால் குத்தலாக ஏதாவது சொல்வானோ என்பதால் சுஜா சொல்ல வில்லை. ஆனால் அவனுக்கு தேவையானது என்று வந்து விட்ட போது சொல்லாமல் மறைக்க முடியவில்லை.

"ஒன்றுக்கும் உதவாதை." கிருபாவின் குரலில் ஏமாற்றத்தால் வந்த எரிச்சல்.

"நானும் தான் ஒரு பிள்ளைக்காகத் தவமிருக்கிறேன், ஏன் கிடைக்கேல்லை எண்டு தெரியேல்லையே" நொந்திருந்த இதயத்தின் வலி சுஜாவைப் பேச வைத்தது.

"உன்னிலதான் பிரச்சனை, அது எனக்குத் தெரிஞ்சும், நான் பேசாமல் இருக்கிறன்." வலிகள், வேதனைகள் பற்றித் புரியாதவன் கிருபா என்பது தெரியும் என்றாலும் அந்தக் குற்றச்சாட்டு வலிக்கவே சுஜா நெடு நேரம் வரை அழுது தீர்த்தாள்.

வைத்தியரைப் போய்ப் பார்க்கும் படி அக்காள் அறிவுரை சொன்னாள். இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டதைச் சொல்லிப் போய்ப் பார்க்கலாமா என்று கேட்டபோது, தன்னில் குறை என்று சொல்லி விடுவார்களோ என்பதால் முடியாது என்று ஒரே சொல்லில் மறுத்து விட்டான்.

சுஜா கெஞ்சி அழுது கூத்தாடி வைத்தியரிடம் அழைத்துச் சென்றாள் அவனது விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் செயற்கைக் கருக்கட்டல் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜாவுக்கு கெட்டகாலத்திலும் அது நல்ல காலமாய் இருந்திருக்க வேண்டும். முதலாவது செயற்கைக் கருக்கட்டல் முயற்சியே கை கூடி விட்டது. குழந்தையின் முகம் காணத் தவமிருந்த சுஜாவுக்கு கிருபாவைப் பற்றிய கவலைகள் இப்போது கொஞ்சம் குறைந்து விட்டிருந்தன. பிள்ளைப் பேறுக்கென கமலமும் வந்திருக்க, கிருபாவின் அறைக்குள் சென்றால் மட்டுமே அவனது அவப்பேச்சைக் கேட்க வேண்டி யிருந்தது. மாமியாருக்கு நல்லவனாகவே கிருபா அப் போதும் நடித்துக் கொண்டிருந்தது சுஜாவுக்கு ஒரு விதத்தில் நன்மையே செய்தது.

நரேன் பிறந்ததில் இருந்து சுஜாவுக்குப் பொழுது நன்றாகவே போய்க் கொண்டிருந்தது. அவனது ஒவ்வொரு அசைவையும் ரசித்தாள். கிருபா வுக்கு குழந்தைகள் என்றால் அத்தனை ஆர்வமில்லை என்பதால் நரேனுடன் பெரிதாக ஒட்டி உறவாட வில்லை. மாமியாரும் சுஜாவும் கொஞ்சுவதைப் பார்த்துக்கொண்டிருந்தவன் தனிமையில்,

"இது யாருடைய பிள்ளையோ தெரியாது! நல்லா கொஞ்சு." சுஜாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ஆத்திரம், அழுகை எல்லாம் பொங்கிக் கொண்டு வந்தாலும் பேசத் தோன்றவில்லை. வெளியில் வந்து தாயின் மடியில் முகம் புதைத்து அழுதாள்.

எந்த முயற்சியும் எடுக்காமலேயே அடுத்ததாகப் பிறந்தான் நரேஷ். நல்ல காலம் பெண் குழந்தையாகப் பெறவில்லை என்பது சுஜாவுக்கு ஆறுதலாக இருந்தது. பெண்மையைக் கேவலமாகப் பேசுபவனுடன் வாழும் தன்னிலை சுஜாவுக்கு அருவெறுப்பைக் கொடுத்ததில், தனக்கொரு பெண் குழந்தை வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டிருக்கவே இல்லை. அடிக்கடி அன்னை யைத் தன்னுடன் கூப்பிட்டு வைத்துக் கொள்வது மட்டுமே அவளது ஒரே ஆறுதலாக இருந்தது.

நரேனுக்கு இரண்டு வயதான போது செலவுகளும் அதிகரித்து விட்டிருந்தன. வீட்டுக்குப் பணம் கொடுப்பதில் கிருபாவுக்கு விருப்பமிருக்க வில்லை. அவன் உழைக்கும் பணம் அவனது செலவு களுக்கே போதாமல் இருந்தது. தான் கொடுக்கா விட்டால் சகோதரர்களிடம் பணம் வாங்கிச் சுஜா சமாளித்துக் கொள்வாள் என்பது தெரிந்து விட்டதால் அதை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டான். சுஜாவோ தன் சகோதரர்களிடம் பணம் வாங்குவதை அவமானமாக உணர்ந்தாள். அதனாலேயே வேலைக்குப் போய் ஆக வேண்டும் என்ற தீவிரமான எண்ணம் தோன்றி விட்டிருந்தது. படித்து விட்டு இத்தனை காலம் வேலைக்குப் போகாமல் இருந்து விட்டு, தற்போது வேலை தேடுவது என்பது சிரமமானதாக இருந்தது. ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பித்தாள். பணம் பத்தும் செய்யும் என்பது சரியானதாக இருந்தது. வேலை கிடைத்து விட்டது என்று சொன்னதும் தாம் தூம் என்று வெளிக்கு மட்டும் குதித்த கிருபா தனக்கு ஆதாயம் இருப்பதை உணர்ந்ததும் பெரிதாக எதிர்ப்புக் காட்ட வில்லை.

தந்தையின் இறப்பின் பின்னர் சுஜாவின் அண்ணன் கமலத்தைத் தன்னுடன் அழைத்துச் சென்று வைத்துக் கொள்ள விரும்பினான். சுஜாவின் நிலை தெரிந்த கமலம், அவளுடன் இருக்கப் போவதாகச் சொல்லி விட்ட போது, சகோதரர்களால் எதுவும் சொல்ல முடியவில்லை. குழந்தைகளைத் தான் பார்த்துக் கொள்வதாகக் கமலம் சொன்னது நிம்மதியைத் தர, சுஜா ஆசிரியப் பணியைத் தொடங்கினாள்.

அத்தனை பிரச்சனைகளுக்கு இடையிலும் கற்பித்தல் தொழில் சுஜாவுக்கு ஆறுதலைக் கொடுத்தது. கற்பித்தலிலும், குற்றமில்லாக் குழந்தைகளின் அன்பிலும் தன்னைத் தொலைத்து விட்டு வீட்டுக்கு வந்தால் காட்சி அப்படியே தலை கீழாகி விடும். சாப்பாட்டில் குறை, வீட்டைக் கவனிப்பதில் குறை, பிள்ளைகளைச் சரியாகக் கவனிப்பதில்லை என்று குறை என்று ஓயாமல் கிருபா ஏதாவது குற்றம் கண்டு கொண்டிருப்பான். வீட்டில் நிம்மதியான சூழல் என்றும் இருந்ததில்லை.

சுஜாவின் திறமையைக் கவனித்த அதிபர், அவளைச் சமயத் துறைக்கும் விளையாட்டுத் துறைக்கும் பொறுப்பாக இருக்குமாறு பணித்திருந்ததால் பாட சாலையிலும் பணிச்சுமை அதிகமாக இருந்தது. நவராத்திரிக் காலம் என்றாலே பாடசாலையில் வேலை கள் அதிகமாக இருந்தன. அடுத்த நாள் பூஜைக்காக எல்லா வகுப்பையும் ஒழுங்குபடுத்தி விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்த போது உடலில் ஒரு சொட்டு சக்தி கூட எஞ்சியிருக்கவில்லை. வீட்டுக்குள் நுழையும் போதே கிருபா வீட்டில் நிற்கின்றான் என்பதாக அவனது வண்டி கட்டியம் சொன்னது. இன்று என்ன கிளப்புவானோ தெரியவில்லை என்ற எண்ணமே சலிப்பைக் கொடுத்தது.

"வா பிள்ளை, என்ன இப்பிடிக் களைச்சுப் போயிட்டாய்? இரு தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்" தாயின் வார்த்தைகள் அமுதமாக இருந்தன. தாயின் அன்புக்கு இணை ஏதுமில்லை என்று தோன்றி யது. நரேஷ் ஓடி வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

"அம்மா, அண்ணா அடிச்சிட்டானம்மா" மூன்று வயதுக்கேயான மழலையில் சொன்னான்.

"தம்பி என்ன குழப்படி செய்தீங்கள்?"

"நான் ஒன்றும் செய்யேல்லை, அண்ணாட புக்கிலை "அ, ஆ" எழுதினனான். "

"நாயே! நீ செய்த வேலைக்கு உனக்கு அடிக்கத் தானே வேணும்" ஏழு வயதான நரேன் பாய்ந்து வந்து நரேசுக்குத் தலையில் ஒரு குட்டு வைக்க சுஜாவுக்கு ஆத்திரம் வந்தது.

"யாரிட பழக்கமடா தம்பியை அடிக்கிறது? தம்பியை நாய் என்று சொல்லலாமோ? உந்தக் கெட்ட பழக்கத்தை எல்லாம் இங்க வைச்சிராதை" சுஜாவின் சொல் உள்ளுக்கு இருந்த கிருபாவைச் சுட்டிருக்க வேண்டும்.

பாய்ந்து வந்தவன், கமலம் கொண்டு வந்த தேநீர்க்கப்பைத் தட்டி விட்டு. சுஜாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். கொட்டிய தேநீரின் சூடு தொடையை அள்ள, "ஐயோ" என்றலறியபடி எழுந்து உதறியவளுக்குத் தலை சுற்றிக் கொண்டு வர அப்படியே நிலத்தில் சரிந்து விழுந்தாள். அதைப் பார்த்த கமலமும், இரண்டு குழந்தைகளும் அலறத் தொடங்கின. அவர் களுக்கு இது புதிதில்லை ஆயினும் சுஜா விழுந்ததைக் கண்டதும் பயந்து போய் விட்டிருந்தனர்.

சுதாரித்துக் கொண்ட சுஜாவின் நாக்கில் சனி ஒட்டியிருந்திருக்க வேண்டும். "ஏனப்பா இப்பிடி பேய் மாதிரி ஆடுறியள்?" கேள்வி சரியில்லாததால் விளைவும் விபரீதமாக இருந்தது. முதுகு, தலை என்று சரமாரியாக அடி விழுந்தது. தடுக்கப்போன கமலத்தின் கைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி விழ அவள் வெளியில் சென்று அமர்ந்து விட்டாள்.

அம்மம்மாவுக்குப் பின்னாலேயே அழுது கொண்டு சென்ற நரேஷின் தலையில் குட்டி,

"சனியனே எல்லாம் உன்னாலை தான். அப்பாவைப் போலத்தான் நீயும்" சொன்ன நரேனை தலைமுடியில் கொத்தாகப் பிடித்து கொண்டவன் பக்கத்திலிருந்த தும்புக்கட்டை முறியும் வரை அடித்து தன் வெறியைத் தீர்த்துக் கொண்டான் கிருபா. தடுக்க வந்த சுஜாவுக்கும் அடி நன்றாக விழுந்தது.

"பிள்ளைகளை வளர்க்கிறாள், பழக்க வழக்கம் ஒன்றுக்கும் உதவாது. பொடியளை எனக்கு எதிரா தூண்டி விடுறாய் என்ன?" கத்தியவன் பைக்கை எடுத்துக் கொண்டு வெளியே போய் விட்டான்.

இன்னமும் வேதனையில் கத்திக் கொண்டி ருக்கும் நரேனின் உடல் சிவப்புச் சிவப்பாய் கன்றித் தடித்துப் போயிருந்தது. கமலத்தின் கையும் அடிபட்டுக் கன்றிப் போயிருந்தது. சின்னவன் மேசைக்குக் கீழே போய் ஒளிந்து கொண்டிருந்தான்.

கமலம் போய் நோவு எண்ணெயை எடுத்துக் கொண்டு வந்து பேரனுக்குப் பூசினாள். நரேன் அந்தப் பூசுகையின் அழுத்தம் தாங்க முடியாமல் அலறினான்.

"பழக்க வழக்கம் குழந்தைகளுக்குத் தெரியா தாம், பெரியவர்கள் நல்லதைக் கதைச்சால் தானே பிள்ளைகளும் கேட்டுக் கதைக்குங்கள். அதுகள் பார்க்கி றதையும் கேட்கிறதையும் தானே செய்யுதுகள்." வழமை யாக வாயைத் திறக்காத கமலம் இன்று ஆத்திரத்தில் பேசினாள்.

தாயையும், பிள்ளைகளையும் பார்த்த சுஜாவுக் குக் கண்ணீர் பொங்கி வந்தது. அழுது அன்னையை வருத்தத்துக்கு உள்ளாக்க வேண்டாம் என்று அடக்கிக் கொண்டாள். இரவுக்குப் புட்டை அவித்து, முட்டை யைப் பொரித்துப் பிள்ளைகளுக்குச் சாப்பாட்டைக் கொடுத்தாள்.

சாப்பிட மறுத்து விட்டு தூக்கம் வராமல் புரண்டபடி படுத்திருக்கும் தாயைப் பார்க்கையில் வருத்தமாக இருந்தது. தன்னுடன் வந்திருந்து இத்தனையையும் அனுபவிக்க வேண்டும் என்று அவளுக்கு என்ன தலையெழுத்தா? மற்றைய சகோதரர்களுடன் இருந்திருந்தால் எத்தனை மகிழ்ச்சி யாக இருந்திருப்பாள்? தன்னுடன் இருப்பதால்தான் முதுமையிலும் நிம்மதியாக இருக்க முடியாமல் வேதனைப்படுகிறாள் என்ற எண்ணம் சுஜாவுக்கு வேதனையைக் கொடுத்தது.

கிருபாவின் பேச்சும், நடத்தையும் தன்னைப் பாதிக்கவே கூடாது என்று அன்று எடுத்த தீர்மானத்தை அமுல் படுத்துபவளாக மறுநாள் காலையில் இருந்து சுஜா நடந்து கொண்டாள். பிள்ளைகளின் நலனை மட்டுமே தன் மூச்சாகக் கொண்டாள். படிப்பு, விளையாட்டு என்று எல்லாவற்றையும் கவனித்து ஊக்குவித்தாள். முக்கியமாகத் தந்தையின் பழக்க வழக்கம் பிள்ளைகளில் ஒட்டிக் கொள்ளாமல் கவனித் துக் கொண்டாள். அவர்களுக்கும் தந்தை என்றால் அச்சம் வந்து விட்டிருக்க, கிருபா வீட்டுக்குள் வருகிறான் என்றாலே ஆளுக்கொரு பக்கமாகத் தலை மறைவாகிக் கொண்டார்கள்.

நரேன் புலமைப் பரிசில் பரீட்சையில் பாஸ் ஆகி விட்டான் என்பது சுஜாவுக்கு முதல் நம்பிக்கை விதையாக விழுந்தது. கிருபாவுடன் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று போன போது அவன் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான்.

"என்ர பிள்ளைக்குத் தான் பள்ளிக் கூடத்திலையே கூட மார்க்ஸ்.." பரவாயில்லையே என்று சுஜா உள்ளுக்குள் எண்ணும் போதே, இத்துடன் திருந்தி விட மாட்டானா என்று ஒரு ஏக்கம் கூடவே ஊர்வதை யும் தவிர்க்க முடியவில்லை. நரேனுக்கு ஒரு வாழ்த்தா வது சொல்வான் என்று சுஜா நினைத்தது நடக்காதது சின்ன ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இரவு சாப்பிடும் போது "கிருபா, நரேனைக் கூப்பிட்டுக் கதையுங்களேன்." சுஜா சொன்னதற்குக் கிருபா கிண்டலாகச் சிரித்தான். சுஜா அத்துடன் வாயை மூடிக்கொண்டாள்.

வருடங்கள் ஓட வீட்டுச்செலவுடன் மற்றய செலவுகளும் அதிகரித்தன. ரியூசன் செலவு, புத்தகங்கள், சீருடை என்று செலவுகள் அதிகரிக்க சுஜா திணறிப் போனாள். பிறந்த வீட்டினரிடம் கேட்கத் தயக்கமாக இருந்தது. அவர்கள் அவ்வப்போது அனுப்பியதை வைத்து சிக்கனமாகச் செலவழித்தாள். வீட்டில் எப்போது பிரச்சனை வரும் என்பது தெரியாமலேயே ஒவ்வொரு கணத்தையும் எல்லோரும் பதட்டத்துடன் கழித்தார்கள். சம்பந்தமே இல்லாமல் பிள்ளைகளுக்கு அடி விழுவதை ஒரு தாயாய் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் தடுக்க முயன்று அடி தாங்கி உடலிலும் காயங்களை வாங்கிக் கொண்டாள் சுஜா.

நினைத்தால் பிள்ளைகளைக் கூப்பிட்டுக் கொஞ்சினான். ஆசைப்பட்ட சாப்பாடுகளை வாங்கிக் கொடுத்தான். தந்தை எப்படியானவர் என்பது புரியாத புதிருடனேயே பிள்ளைகளும் வளர்ந்தார்கள். இத்தனை கஷ்டப்பட்டு இவனுடன் வாழ வேண்டுமா என்று அவ்வப்போது தோன்றினாலும் உலகம் ஏதும் சொல்லுமோ, திருமதி கிருபா ரீச்சர் என்ற பெயர் மாறி விடுமோ என்ற தயக்கம் காலைக் கட்டி வைத்து எல்லா வற்றையும் தாங்க வைத்தது. வாயைக் கொடுத்தால், தன் பெண்மையைக் கேவலமாகப் பேசுவான் என்று பொறுத்துப் பொறுத்து அதுவே பழக்கமாகவும் போய் விட்டிருந்தது.

சாதாரணப்பரீட்சை நடந்த போது கிருபாவுடன் ஏதாவது சண்டை வந்து பரீட்சைக்குத் தயாராகும் நரேனின் மனம் குழம்பி விடக் கூடாது என்று சுஜா கவனமாக நடந்தும் கிருபா வேண்டுமென்றே வம்பு வளர்த்தான். அவன் செய்கைகள் இதயமில்லாத அரக்கனின் செயலுக்குச் சமானமானதாக இருந்தன.

நரேனை ஏதாவது ஒரு வேலைக்கு ஏவிக் கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் நரேனின் முகம் சுருங்கி விட, அதையே சாக்காத வைத்து அடித்தான். சின்னவன் வாய்க்குள் ஏதோ சொன்னான் என்று அவனுக்கும் அடி விழுந்தது. முதல் நாள் பரீட்சைக்குக் கொண்டு போய் விடச் சொன்னபோது, கிண்டலாகப் பதில் சொன்னான்.

"மகாராஜா நடந்து போகட்டும்" எதிர்பார்ப் புடன் நின்ற நரேனின் கண்கள் நிறைந்து விட்டிருந்தன. ஒரு தலை அசைப்புடன் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டான். வாய் திறந்து தாய்க்குப் "போய் வருகின்றேன்" என்று சொன்னால் அதையும் ஒரு பிரச்சனையாக்குவான். "யாருக்கோ பெத்தனி தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் தகப்பன் என்ற பாசம் இல்லாமல் வளருதுகள்." என்பான். பாசம் காட்டினால் தான் மீளக் கிடைக்கும் என்ற அடிப்படை தெரியாதவனைக் காதலிக்க வைத்தது எது என்று சுஜா தன்னையே நொந்து கொண்டாள்.

"அம்மா எனக்கு 8A, 1B" தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு சொன்ன நரேனின் குரலில் சுஜாவின் நினைவுகள் கலைந்தன. மகனை ஆரத் தழுவிக் கொண்டாள். நம்பிக்கையின் விதை வெகு வேகமாக முளைத்து விருட்சமாக வளரத் தொடங்கி விட்டிருந்தது. அடக்கி அடக்கி உள்ளுக்குள் இறுக்கி வைத்தவை எல்லாம் இறங்கி, மனம் இலேசாகி விட்ட உணர்வு ஏற்பட்டது. கமலத்தின் நிம்மதிப் பெருமூச்சு பெரிய சத்தமாகவே கேட்டது. மகள் இன்னொரு ஏமாற்றத் தைத் தாங்கும் நிலையில் இல்லை என்பது தாய்க்கு நன்றாகவே தெரியும்.

விடயத்தைக் கேள்விப்பட்ட கிருபாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஒழுங்காகப் படிக்கவில்லை என்று நரேனுடன் கத்திக் கொண்டிருந்தவனுக்கு ரிசல்ட் தெரியவில்லையோ என்ற சந்தேகத்தில் சுஜா சொன்னாள்.

"8A ம், 1B ம் எடுத்திருக்கிறானப்பா!"

"தெரியுமடி, இவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சு உதே எடுத்தவர்?" சுஜா வாயைத் திறக்கவில்லை. மரத்து விட்ட மனம் தான் என்றாலும் அவ்வப்போது உயிர்த்து வலிக்கச் செய்கின்றது.

உயர்தரத்தில் உயிரியல் படிக்கப் போவதாகச் சொன்ன மகனுக்கு தேவையான வகுப்புகளை ஒழுங்கு பண்ணுவதில் சுஜா பிசியாகி விட்டாள். தனக்கான விடிவும், தன் வயிற்றில் பிறந்தவர்களுக்குமான விடியல் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை அவளை உயிர்ப்பித்திருந்தது. காலையில் இருந்து சாப்பிடாத வயிறு சிணுங்க ஒரு தேநீரைக் கலந்து கொண்டு வெளி யில் போட்டிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள். பதினெட்டு வருடங்களின் பின் அந்தத் தேநீரின் சுவையை என்ன என்பதை நாக்கு அவளுக்கு உணர்த்த ஒவ்வொரு மிடறாக ரசித்துக் குடிக்கத் தொடங்கினாள்.

---

## ஹைக்கூ

வெட்டியானுக்கு விடுமறை
திடுக்குற்றது
பூமி
*******************************

கரப்புக்குள் தடவும் கை
இலக்கில் தப்பியது
பெருநிலவு
*******************************

சுதந்திரம் கிடைத்தது
தோட்டாவின் நிறம்
தங்கத்தில்
*******************************

பூத்து குலுங்கியது செடி
சிந்தியது
செங்குருதி
*******************************

சிறை பிடித்த பின்னும்
சீறுகின்றது
மின்மினி
*******************************



வெளுக்கத்தான் முயற்சிக்கிறது
மேகம்
கண் கூசுகிறது மின்னல்
*******************************

மாது வீட்டில் இருந்தாள்
மது உண்டு வந்தன
தேனீக்கள்
*******************************

மலைக் கொண்டையில் குயில்
இடைவெளியில்
நதியின் பாடல்
*******************************

[ப்பானுக்கு சென்றபோது
சீனாவிலும் தென்பட்டது
ஹைக்கூ
*******************************

பேசிக்கொண்டே நடந்தது
வெயிலும் மழையும்
காதலர்கள்
*******************************

நீதி உயிர்த்தெழுந்தது
செத்தவன்
நிருபராதி
*******************************

வரலாறு முழுக்க மயானங்கள்
எந்தக் கொலையும்
நினைவிலில்லை
*******************************

ஆசை யாரை விட்டது
அனுப்பி இருக்கிறேன்
கவிதைகளை
*******************************

இரவிகாந்தன்
திருகோணமலை

## ஜீவநதியின் அஞ்சலி



ஈழத்தின் மூத்த எழுத்தாளர் சாகித்திய ரத்தினா மு.பொ.அவர்களது இழப்பு பெரும் துயரத்துக்குரியது. ஈழத்து இலக்கியப்பரப்பில் தன் ஆளுமைத்திறனை சிறப்பாக வெளிக்கொண்டு வந்தவர். நல்ல பல நூல்களை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு தந்துள்ளார். திசை என்ற பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவர். இறுதிவரை படைப்புகளைப்படைத்து வந்த மு.பொ.அவர்களது இழப்பு ஈழத்து இலக்கியத்துக்கு பெரும் இழப்பு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# அப்பாவின் வேட்டியும் அம்மாவின் பாவாடையும்

■ இ.இராஜேஸ்கண்ணன்

கொட்டித் தீர்க்கும் கோபங்களையும் கோசங்களையும் கடந்து, இதயத்தில் சந்தனத்தை மிருதுவாகத் தடவிவிட்டு, உயிருக்கும் உணர்வுக்கும் குளிர்மை சேர்க்கும் கதைகளைப் படிக்கும்போது வரும் ஆனந்தம் வார்த்தைகளில் வசப்படாதவை. அத்தகைய சந்தனக் குளிர்ச்சி தரும் கதைகளை தமிழில் பலர் "உரைத்தெடுத்து" தந்திருக்கிறார்கள். உள்ளுணர்வுக்கு ஊட்டம் தரும் அந்தக் கதைகளின் அனுபவ வீச்சு அலாதியானது. ஒரு பூஞ்சோலையின் தண்மையோடும் பூவொன்றின் மென்மையோடும் குளிர்தாங்கிவந்து உடலுரசும் தென்றல் போலவும் தாயின் நெஞ்சணைக் கணப்பைப் போலவும் சாதாரண மனித உணர்வொன்றை சர்வதேசமும் உணரத்தக்க பெறுமானமாக மாற்றத்தக்க வல்லமை அத்தகைய புனைவாளர்களிடம் நுரைவிட்டுத் ததும்புகிறது.

புனைகதை ஆசிரியர்களை "கதைசொல்லிகள்" என்று சொல்கிறார்கள். ஆனால், எல்லாப் புனைகதை ஆசிரியர்களுக்கும் கதையை உணர்வூட்டம் தரும்வகையில் சொல்லத் தெரிவதுமில்லை, முடிவதுமில்லை. அத்துடன் புனைகதை ஆசிரியர் ஒருவர் தனது எல்லாக் கதைகளையும் உணர்வூட்டம் மிக்கதாக எழுதியதாகவும் இல்லை. அந்த உணர்வூட்டத்தை படிப்பவர்கள் பெறுவதிலும் இவ்வாறான வேறுபாடு உள்ளது. என்னவாயினும், படைப்பின் கடைந்த வெண்ணையாக மிதந்து வந்து நிறைவைக் கொடுப்பது அந்த உணர்வுதான். அந்த உணர்வு கதையின் அழகாலும் சாத்தியமாகும்,



அது சொல்லும் பொருளாலும் சாத்திய மாகும். அல்லது இவை இரண்டாலும் சாத்தியமாகும். அவ்வாறான சாத்தியம் புனைகதையாளரின் கதை சொல்லும் முயற்சியல்ல. பதிலாக கதையை வாழ்விக்கும் முயற்சியாகிறது. அந்தக் கதைகளில் புனைகதையாளர் வாழ்ந்து கொண்டிருப்பார். அத்தகைய இரண்டு சிறுகதைகளை இணை வைத்து இரசிப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

பிரபஞ்சன் எழுதிய மிகச்சிறந்த கதைகள் பலவற்றுள் ஒன்று "அப்பாவின் வேஷ்டி". அ.முத்துலிங்கம் எழுதிய அவ்வாறான கதைகளில் ஒன்று "அம்மாவின் பாவாடை". அப்பாவின் வேஷ்டியையும் அம்மாவின் பாவாடையையும் ஒப்பிட்டு வேறுபடுத்தி எது "தூக்கலானது" என்று பேசவோ, ஒன்று இன்னொன்றில் எத்தகைய தாக்கம் செலுத்தியது என்று "வலிந்து கட்டவோ" இந்தக் கட்டுரை எழுதப்படவில்லை. தமிழில் வெளிவரும் கதைகளில் தேர்ந்த எழுத்தாளர்கள் தங்கள் படைப்பின் வழியான உணர்வூட்டத்தை எப்படி வாசகனிடத்தில் சேர்க்கிறார்கள் என்பதை இரசனை நோக்கில் வெளிப்படுத்தவே இந்தக் கட்டுரை முனைகின்றது. இந்தக் கதைகள் தரும் உணர்வின் காரணமாக அவற்றில் எதுவொன்றைப் படிக்கும்போதும் மற்றொன்று நினைவில் மீள்வதை தவிர்க்க முடியாது.

**கதைகளைப் படைத்தவர்கள்:**

சாரங்கபாணி வைத்தியலிங்கம் எனும் இயற்பெயர் கொண்ட "பிரபஞ்சன்"*(1945-2018)* சாகித்ய அக்கடெமி விருது பெற்ற*(1995)* எழுத்தாளர். புதுச்சேரியில் பிறந்தவர். நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், திறனாய்வு, அரசியல் கட்டுரைகள் என்பவற்றை எழுதிவந்த அவர், முதன்மையானதொரு இதழியலாளராக விளங்கியவர். *1961*இல் எழுதத் தொடங்கிய அவர், ஏறத்தாழ பதினைந்து சிறுகதை நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் நேற்று மனிதர்கள், விட்டுவிடுதலையாகி, யாசுவின் அக்கா, பிரபஞ்சன் கதைகள், ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் இரண்டு மனிதர்கள், குயிலம்மை, திரை போன்ற சிறுகதைத் தொகுப்புகள் உள்ளடங்கும். பத்துக்கும் மேற்பட்ட நல்ல நாவல்களை எழுதியவர். சாகித்ய அக்கடெமி விருது பெற்ற அவரது "வானம் வசப்படும்" என்ற நாவல் பாண்டிச்சேரியில் பிரெஞ்சு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் மொழிபெயர்ப்பாளராக இருந்த ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு வரலாற்று பின்புலத்துடன் கூடிய நாவல். அவருக்கு புகழ் வாங்கிக் கொடுத்த நாவல். "மானுடம் வெல்லும்" எனும் இன்னொரு நாவலும் பிரபலமாகப் பேசப்படுவது. இருபதாம் நூற்றாண்டு புதுவைக் கதைகளை பாரதி வசந்தனுடன் இணைந்து தொகுத்த அவரது முயற்சி முக்கியமானது.

அப்பாத்துரை முத்துலிங்கம் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் என்ற கிராமத்தில் பிறந்தவர். தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார். பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையோடு "அக்கா"(1964) என்ற சிறுகதைத் தொகுப்பை முதலில் வெளியிட்டவர். நீண்ட காலம் ஆக்க இலக்கியப் படைப்பாக்க முயற்சிகளிலிருந்து விலகியிருந்த இவர், இப்போது தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் இயங்கிவருகிறார். அவரது பணியின் நிமித்தமாக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்த திளைப்புடன் கூடிய கதைகளை எழுதி வருபவர். தமிழ்ச் சூழலுக்கு புதிய புதிய அனுபவங்களைத் தன் கதைகளின் வழி தருபவர். அக்கா, வம்சவிருத்தி, திகடசக்கரம், குதிரைக்காரன், கொழுத்தாடு பிடிப்பேன், ஆட்டுப் புட்டு, அமெரிக்கக்காரி, மகாராஜாவின் ரயில் வண்டி, அ.முத்துலிங்கம் கதைகள் முதலான பல சிறுகதைத் தொகுப்பு நூல்களை வெளியிட்டவர். அவரது சிறுகதைகள் முழுத்தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. அவர் எழுதிய "உண்மை கலந்த நாட்குறிப்புகள்" எனும் நூல் அவரது உலக அனுபவங்களை காட்டும் சிறந்ததும் புதுமையானதுமான ஒரு படைப்பு.

### கதைகளின் பொருள் என்ன?

வாழ்வைக் கடந்துபோய்விட்ட அப்பாவை, வாழ்ந்த காலத்தில் அவரது அழகு, ஒழுங்கு, வாழ்வு முறை என்று ஒவ்வொன்றாக இரசித்து அநுபவிக்கும் பெரியவனாகிவிட்ட ஒரு மகன், தான் சிறுவனாக இருந்த காலத்துக்கும் பெரியவானாகிவிட்ட காலத்துக்கும் இடையில் நின்றுகொண்டு, அப்பாவின் பெருமைகளை நினைந்துருகும் உணர்வை பரிமாற்றம் செய்யும் கதையாக "அப்பாவின் வேஷ்டி" செதுக்கப்பட்டுள்ளது. அப்பா உடுத்திக்கொள்ளும் ஒரு பட்டுவேட்டியை மையப்படுத்தியே சொல்லப்படும் கதை மகன் உடுத்திக் கொள்ளும் "டெறிகாட்டன் வேஷ்டி" காலம்வரை நீள்கிறது. டெறிக்காட்டன் வேட்டிக் காலத்தில் இருந்து கொண்டு அப்பாவின் பட்டுவேட்டிக் காலத்தை நினைத்து இன்புறும் மகனது ஏக்கங்களை உணர்வுடன் வெளிப்படுத்துவதாக அந்தக் கதை வளர்க்கப்படுகிறது.

வாழ்வுக்கான வசதிகள் அருந்தலாகிப் போன ஏழ்மை நிலையிலும் செம்மையாக வாழுகின்ற அம்மாவிடத்தில் மாற்றிக்கட்ட இருந்த ஒரு பாவாடை நாடாவும் இரண்டு பழைய பழுத்துப்போன பாவாடைகளையும் மையப்படுத்தி வளர்த்துச் செல்லப்படும் கதையில், வீட்டில் வளர்க்கப்பட்ட கீரையைத் தின்ன வந்த மாடு கொடியில் காய்ந்துகொண்டிருந்த அம்மாவின் பாவாடையைத் தின்றுவிட, அதனால் அம்மா வேதனைப்படுவதையும் தனது பிள்ளைக்கு விழுமியம் என்று போதித்து வந்த ஒன்றைத் தானே மீறிச்செல்வதையும் அழகாகக் காட்டுகின்ற கதையாக "அம்மாவின் பாவாடை" சொல்லப்படுகின்றது. நியமம் மற்றும் விழுமியம் மனிதர்களிடத்தில் எந்த எல்லைவரை நிலைக்கும் என்பது, பொதுவெளியில் பேசக்கூடாத "தூமையன்" என்ற வார்த்தையை அம்மாவே பேச நிர்ப்பந்திக்கப்பட்ட சந்தர்ப்பத்தை வைத்து உணர்த்தப்படுகிறது. முன்பு ஒருபோது அந்தச் சொல்லைப் பேசியதற்காக மகனைக் கடுமையாகத் தண்டித்த அம்மா, மாடு தன் ஒரே பாவாடையை தின்றபோது அதே வார்த்தையை பேசிவிடுகிறாள்.

### கதை சொல்வதிலான நுட்பங்களும் பொதுப் பண்புகளும்:

மிக நுட்பமாகச் சொல்லப்படும் இந்த இரண்டு கதைகளும் எடுத்துரைப்பு முறை, கதைப் பின்னல், கையாளும் மொழியின் நயம், வெளிப்படுத்தும் அனுபவம் என்பவற்றில் ஒருங்குவைத்துப் பார்க்கக்கூடிய பல அம்சங்களைக் கொண்டுள்ளன. மிக ஆழ்ந்த அனுபவம் மிக்க தேர்ந்த எழுத்தாளர்கள் அழகாக வெளிப்படுத்திய கதைகள் இவை. விறுவிறுப்பான கதை சொல்லும் பாணி, வெகுசாதாரணமான வாழ்வின் பிரதிபலிப்பாக வந்துள்ள மொழி, மனிதர்களின் இயல்புகளையும் சம்பவங்களையும் இயல்போடு சித்திரிக்கும் விவரணம், எள்ளலும் ஹாஸ்யமும் கலந்திருக்கும் நளினம், கலைத்துவத்துடன் கூடிய வடிவ நேர்த்தி என்பன யாவும் கச்சிதமாக வந்தமைந்த சிறுகதைகள் இவை. வடிவத் தகர்ப்பு, வடிவப் பிரக்ஞை என்றெல்லாம் புதுமைகளை திணிக்கும் இன்றைய "கதைசொலிகளுக்கு" அழகாகவும் தாக்கமாகவும் ஒரு கதையை எப்படிச் சொல்லலாம் என்பதற்கு இந்தக் கதைகள் மாதிரிகளாக அமைந்துவிட்டன.

இந்தக் கதைகள் இரண்டுக்கும் பொதுவான சில பண்புகள் உள்ளன. பிரபஞ்சனின் அப்பாவின் வேஷ்டி "அப்பாவிடம் ஒரு பட்டு வேஷ்டி இருந்தது" என்று தொடங்குகின்றது. முத்துலிங்கத்தின் அம்மாவின் பாவாடை "அம்மாவிடம் ஒரு பாவாடை இருந்தது" என்று தொடங்குகின்றது. பிரபஞ்சன் அப்பாவையும், அப்பாவின் பட்டு வேட்டியையும் மையப்படுத்திக் கதையை வளர்க்கிறார். முத்துலிங்கம் அம்மாவையும் அம்மாவின் பாவாடையையும் மையப்படுத்திக் கதையை வளர்க்கிறார். இருவருமே கதையை மகன்களின் கூற்றாகவே அமைத்துக்கொள்கிறார்கள். முத்துலிங்கத்தின் மகன் அம்மாவின் வாழ்வை இரசிப்பவன், பிரபஞ்சனின் மகன் அப்பாவின் வாழ்வை இரசிப்பவன். மகன்-தாய், மகன்-தந்தை பிணைப்பை ஆழமாக வெளிப்படுத்தும் கதைகள் அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா குளித்துவிட்டு வரும் காட்சியை பிரபஞ்சன் இப்படி எழுதுவார்: “சரி! குளித்ததும் சட்டுப் புட்டென்று வந்து வேஷ்டியை எடுப்பார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. குளித்ததும் கோமணத்தோடு வாசலுக்கு வந்து நின்றுவிடுவார். ஈரத்தைப் பாதி தானும், மீதி சூரியனும் துடைக்க வேணும். நாங்கள் அப்பாவையே பார்த்துக்கொண்டு இருப்போம். நீர் முத்துக்கள் அவர் முதுகில் கோடு கிழித்துக் கொண்டு இறங்குவதைப் பார்க்க வியப்பாய் இருக்கும். அவர் முதுகே ஒரு பெரிய தாமரை இலையாகவும், நீர்கள் முத்துக்களாகவும் தோணும். நிதானமாகவும் அங்குலம் அங்குலமாகவும் துடைத்து ஈரம் போக்குவார். அப்பாவின் உடம்பு சிவந்து போய் விடும். ஏற்கனவே அவர் சிவப்பு. குளித்த பின், உடம்பு பழுத்துவிட்டது மாதிரி இருக்கும்”. இந்த விபரிப்புக்குச் சற்றும் தளர்வில்லாமல் முத்துலிங்கம் அம்மாவின் குளியல் பற்றி இப்படி எழுதுவார்: “மனிதர்களிடம் சாதாரணமாகக் காணப்படாத ஓர் ஒயிலுடன் அம்மா கிணற்றடியில் முழுகிவிட்டு நடந்து வருவாள். அவள்



கடந்த பிறகும் அவளுடைய வாசனை அங்கே நிற்கும். பிஞ்சாகும் வாய்ப்பை இழந்த கொய்யாப்பூக்கள் வழிநெடுகிலும் கிடக்கும். அம்மாவின் கால்களில் அவை ஒட்டிக்கொள்ளும். தோள்களில் வழிந்த நீண்ட கேசத்தில் தண்ணீர் சொட்டும். அவள் நடந்துபோன தடத்தில் சற்றுநேரம் காற்று மினுமினுக்கும். அப்படியே போய் கொடியில் பாவாடையை உதறிவிட்டு காயப் போடுவாள்” இந்த எடுத்துக்காட்டு அம்மாவும், அப்பாவும் குளித்துவிட்டு வரும் காட்சி பற்றிய விபரிப்பின் ஒத்த தன்மையை காட்டுவதற்காகவே.

அம்மாவின் பாவாடை பற்றிய முத்துலிங்கம் அழகாக விவரிப்பார். அந்த விவரணம் பிரபஞ்சனின் அப்பாவின் வேட்டிபற்றிய விவரணத்தோடு ஒருங்கு வைத்து இரசிக்கத்தக்கது. “உண்மையில் அம்மாவிடம் இரண்டு பாவாடைகள் இருந்தன. அவையிரண்டும் தண்ணியில் அடிக்கடி அலசித் தோய்க்கப்பட்டு வயோதிகம் அடைந்தவை. எல்லாம் ஒரே மாதிரி, ஒரே வயதில், ஒரே உயரத்தில், ஒரே பழுப்பில் இருக்கும். ஆனால் இரண்டு பாவாடைக்கும் அம்மாவிடம் இருந்தது ஒரே நாடாதான்” என்று கதையின் ஆரம்பத்திலேயே பாவாடையை பற்றி சொல்கின்றார். பிரபஞ்சன் அப்பாவின் வேட்டி பற்றியும் கதையின் தொடக்கத்தில் குறிப்பிடுகின்றார். “அப்பாவிடம் வெண்பட்டு, பொன்னிறப்பட்டு வேஷ்டிகளும் நிறைய இருந்தாலும் கூட, குழந்தைகளாகிய எங்களுக்கு அவருடைய சிவப்புப் பட்டு வேஷ்டியே அற்புதமாகத் தோன்றியது. சிவப்பென்றால் சுத்த சிவப்பும் இல்லை. குங்கும வண்ண மும் இல்லை. செப்புப் பாத்திரத்தைப் புளிபோட்டு விளக்கி படிக்கட்டில் வைத்துவிட்டு குளிப்பார்களே, அப்போது பார்த்திருக்கிறீர்களா, நீங்கள்! உதய காலத்துச் சூரிய ரேகைகள் பட்டுத் தகதகக்குமே, அந்தச் செப்புப் பாத்திரம் - அது மாதிரி வேஷ்டி அது” வேட்டிபற்றிய இந்த விவரணம் இப்படி நீண்டு செல்கிறது.

அம்மா சீதனமாகக் கொண்டுவந்த மரப்பெட்டி பற்றியும் அதை திறக்கும் நாளில் மகனுக்கு உண்டாகும் வியப்பூக்கம் பற்றியும் எழுதுகின்றார் முத்துலிங்கம். அவ்வாறே அப்பாவின் வேட்டி வைக்க வீட்டிலுள்ள அலுமாரி பற்றியும் அதே தன்மையான வியப்பூக்கத்தை யும் பிரபஞ்சனும் எழுதுகின்றார். “அதைச் சீனப்பெட்டி என்று அழைப்பாள். சீன அரசர்களும், அரசிகளும், சோடிகளுமாக அதன் முகப்பை அலங்கரித்தார்கள். சில விசேசமான தினங்களில் மாத்திரம் அந்தப் பெட்டியை அம்மா திறப்பாள். அந்த சமயத்தில் காத்திருந்து நான் போய் முன்னால் குந்துவேன். “வெளிச்சத்தை மறைக் காதே” என்றபடி அம்மா அந்தப் பெட்டியை ஆராய்வாள். அவள் கொண்டுவந்த திரவியம் எல்லாம் அதற்குள்தான். முன்பு திறந்த நாளிலிருந்து பாதுகாக்கப்பட்ட நகை களையும், உத்தரீயத்தையும், வெள்ளிக் கொலுசையும் பல மணிநேரம் கைகளில் எடுத்துப் பார்த்தபடியே இருப்பாள். உத்தரீயத்தை நான் தொடவும், கழுத்திலே போட்டுப் பார்க்கவும் அனுமதிப்பாள். பெட்டி நகைகள் வரவரக் குறைந்துகொண்டு வந்தது அப்பட்டமாகத் தெரியும். அதன்முன் இருக்கும் நேரங்களில் அம்மாவின் முகத்தை ஒரு மேகம் வந்து மறைத்துவிடும்” என்று முத்துலிங்கம் எழுதும்போது வெளிப்படும் ஊக்கம், ஏக்கம், ஏமாற்றம் காட்சியாக மனதில் விரியும். பிரபஞ்சன் அப்பாவின் வேட்டி வைக்கும் அலுமாரி பற்றி இரண்டு சந்தர்ப்பங்களில் சொல்கிறார். ஒன்று களிப்புடன் கூடிய வியப்பூக்கமான தருணம், இன்னொன்று அப்பாவின் மரணத்தின் பின் வந்த ஒரு விநாயக சதுர்த்தி நாளின் போது. அது தரும் களிப்பும், கனதியும் அபாரமானது. “அந்த வேஷ்டி சாதாரணமாகக் கண்களில் காணக் கிடைப்பதில்லை. அப்பா, அதை அவருடைய ஆளுயர மிக அகலமான அலுமாரியில் வைத்திருப்பார். அது மாதிரி அலுமாரிகள் எல்லாம் இப்போது கிடைப்ப தில்லை. ஒற்றை ஆள் அகலம் தானே இப்போதுள்ள அலுமாரிகள், அதுவோ மூன்று அலுமாரிகளைப் பக்கம் பக்கமாக நிறுத்தி வைத்தது போல் இருக்கும். அப்பா அலுமாரியிலிருந்து அதை எடுக்கப் போகும் நேரம் எங்களுக்குத் தெரியும்” என்று முன்னர் வரும் அலுமாரி பற்றிய விவரணம் பின்னர், “மனசுக்குள் ஒரு படபடப்பே எனக்கு ஏற்பட்டு விட்டது. அந்தப் பெட்டிக்குள் இருக்கும் வேஷ்டியை நினைத்துத் தான். சுயநினைவின்றித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்தேன். ஈரம் போகாமல் துவட்டிக் கொண்டு, அப்பாவின் அலுமாரியைத் திறந்தேன். அந்தப் பச்சைக் கற்பூர வாசனை இன்னும் இருந்தது. வாசனை போகாது போலும்! அனுபவித்தேன். உடன் ராஜி இல்லையே என்று வருத்தமாய் இருந்தது. ஜாக்கிரதையாகப் பெட்டியைத் திறந்தேன். அப்பாவின் மோதிரங்களைத் தவிர மற்றவை அனைத்தும் அங்கு இருந்தன. மோதிரங்கள் என் கல்லூரிக் கட்டணமாகவும் சாப்பாட்டுச் செலவாகவும் ஏற்கனவே மாற்றம் அடைந் திருந்தன" என்று பிரபஞ்சன் எழுதுகின்றார். இந்த இரண்டு விவரணங்களும் மிக நுட்பமானவை. அந்த அந்தக் குடும்பங்களின் வாழ்வு முறை, அந்தஸ்து, இலட்சியங்கள், எதிர்பார்ப்புகள், அபிலாசைகள் என்ப வற்றை வீட்டிலுள்ள ஒரு புழங்கு பொருளுடன் மனிதர் களுக்கு உண்டான உணர்வு சார்ந்த பிணைப்பை முன்னிறுத்தி காட்டுகின்றது. முத்துலிங்கத்தின் சீனப் பெட்டியிலும் சரி, பிரபஞ்சனின் பெரிய அலுமாரியிலும் சரி, கால ஓட்டத்துடன் நகைகள் குறைந்து போவது சொல்லப்படுகிறது. அம்மாவின் வீட்டில் இது பசியைப் போக்க, அப்பாவின் வீட்டில் இது கல்வியைப் பெற. கதைகளின் இந்த சூசகம் பட்டுவேட்டியை இழப்பதும் பழுத்த பாவடையை இழப்பதும் தரும் வலியின் சுமையை ஒரே தன்மையதாக நுட்பமாக ஆக்கிவிடுகின்றது.

பிரபஞ்சனின் அப்பா பட்டு வேட்டியையும் முத்து லிங்கத்தின் அம்மா பாவாடையையும் பராமரிப்பதை இருவரும் விளக்கும் பாங்கு இணைவைத்து பார்க்கக் கூடியது. அவை அனுபவச் சமதைகளாக உள்ளன. "அந்த வேஷ்டியை அப்பா துவைத்து நான் இரண்டு முறை பார்த்திருக்கிறேன். குழந்தைப் பாப்பாவைக் குளிப் பாட்டுவது மாதிரி இருக்குமே! அதற்குச் சுடுதண்ணீர் ஆகாது. பச்சைத் தண்ணீரில்தான் அதைக் குளிப் பாட்டுவார். சவுக்காரம் அதற்கு ஆகாதாம். ஆகவே சந்தன சோப்பைத்தான் அப்பா உபயோகிப்பார். அப்பா குளித்தது மைசூர் சந்தன சோப்பில். அதற்கும் முந்தி கதம்ப சோப்பில். பிரான்சிலிருந்து வந்த கதம்ப சோப். நாங்கள் கதம்ப சோப் என்போம். இறக்குமதி நின்று போனவுடன் மைசூர் சந்தன சோப். அதைத்தான் அதற்குப் போடுவார். சோப் போடுவது தடவிக் கொடுப்பது மாதிரி இருக்கும். அம்மா எங்களுக்கு எண்ணெய் தேய்த்து விடுகிற முரட்டுத்தனம் இருக்காது. அவ்வளவு மெது. கசக்கிப் பிழியமாட்டார். மெதுவாக நீரில், அகலவாக்கில் வேஷ்டியின் முனைகளைப் பிடித்துக்கொண்டு அலசுவார். பிறகு, தண்ணீர்த் துளி எங்கள்மேல் தெறிக்க, உதறுவார். ரொம்பவும் உதறக் கூடாது. நாள்பட்ட துணி, கிழிந்துவிடக்கூடும். உதறும் போது மழைச்சாரலில் நிற்பதுபோல இருக்கும் எங்களுக்கு. அப்புறம் நிழலில் காயப் போடுவார். வெயில் பட்டால், நிறம் வெழுக்கக்கூடும்" என்று பிரபஞ்சன் எழுதுகின்றார். முத்துலிங்கமோ "சூரியனால் பழுப் பேறிப்போய், கீழ்க்கரையோரம் கிழிந்து, நுரைவராத சோப்பினால் கழுவித் துவைத்து உலர்த்தப்பட்டு, நாவுக்குத் தோதான உஷ்ணத்தில், மொரமொரவென்று ஆசை காட்டிக்கொண்டு, நாடாவில்லாமல் கிடந்தது அம்மாவின் பாவாடை" என்று எழுதுகின்றார். அம்மாவின் பாவாடை சமூகத்தில் அந்தஸ்து நிலையில் மிகக் குறைந்த அம்மாவையும், அப்பாவின் வேஷ்டி ஒரு நடுத்தர அந்தஸ்துள்ள அப்பாவையும் காட்டுகின்றன. இரண்டு கதைகளையும் இணைவைத்துப் படிக்கும்போது அந்தஸ்து வேறுபாட்டால் அப்பா, அம்மா பற்றிய பிள்ளைகளின் உணர்வு மாறுவதில்லை என்பது தத்ரூபமான சித்திரமாகின்றது. மாடு தின்றுவிட்ட பாவாடையால் கலகலப்பு இழந்துபோன அம்மாவின் கண்ணீர் அந்த மகனுக்கு வருத்தம் தருகின்றது. உடுத்திக்கொண்டபோது கிழிந்து பேய்விட்ட அப்பாவின் வேட்டியால் இந்த மகனுக்கு வருத்தமும். இரண்டு கதைகளையும் ஒருங்கே வைத்துப் படிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவை தரும் பரிமாணம் இன்னொன்று.

**கதைகளில் மொழியின் இலாவகம்:**

பொதுவாகவே பிரபஞ்சனின் கதைகளிலும், முத்துலிங்கத்தின் கதைகளிலும் மொழியின் இலாவகம் அற்புதமான அநுபவங்களைத் தரும் வகையில் அமைந்திருக்கும். மொழி பற்றிய கரிசனை எதுவும் இல்லாமல், மொழி வெறும் சம்பவக் குவியல்களைச் சொல்வதற்கான கருவி என்று மட்டுமே கருதுகின்ற இன்றைய எழுத்துக் குவியல்களின் மத்தியில், இந்த இரண்டு கதைகளின் வழி மாத்திரமே கிடைக்கும் மொழி யின் வருடல் நினைத்து நினைத்து இன்புறத்தக்கது. அதனை வார்த்தைகளில் விளக்குவது கடினம், அது ஒரு பூவின் வாசனையை அனுபவிப்பது போன்றது. அப்பா வின் வேட்டியை உடுத்திக் கொள்வது பற்றி சொல்லும் பிரபஞ்சன், "அப்பா வேஷ்டியைக் கட்டிக் கொண்டு வெளியே வருவார்... **நெருப்பைச் சுற்றிக் கொண்டு வருவதுபோல்** அல்லவா இருக்கும்", "வேஷ்டியை வெளியே எடுத்தேன். அதன் மேல் சுற்றிய துண்டை நீக்கினேன். **அதே குழந்தையின் மென்மை. அதே கத்தியின் பளபளப்பு**. அதே வாசனை, கொஞ்சம்கூட நிறம் மங்கல் இல்லை. இடுப்பில் சுற்றிக்கொண்டேன். மனசு அப்பாவை நினைத்துக் கொண்டது. மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன. **வாழை இலையைச் சுற்றிக்கொண்டது போல் இருந்தது**. அவ்வளவு மழமழப்பு", "என் பின்பக்கத்து மடிப்புகள் தோறும் நீளம் நீளமாகக் கிழிந்திருந்தது. எழுந்து நின்று கொண்டேன். **இருட்டில் கைக்குழந்தையின் கையை மிதித்து விட்டாற்போல் இருந்தது**" என்று ஒரு பட்டுவேட்டி தரும் அனுபவங்களின் வேறுபட்ட பரிமாணங்களை மொழியால் செதுக்குகின்றார். கள்ளுச் சீவுகின்ற தொழிலாளியின் பாளை சீவுகின்ற கத்தியின் பளபளப்பை பட்டுவேட்டியின் பழபழப்பில் காணும் படைப்பு மனம் பிரபஞ்சனுடையது! பட்டுவேட்டி கிழிந்த போது வரும் மனஉணர்வு இருட்டில் கைக்குழந்தையின் கையை மிதித்துவிட்டது போல என்று நவமாய் சொல்லும் மொழி பிரபஞ்சனது! இவ்வாறுதான் முத்துலிங்கமும் நயக்கத்தக்க மொழியை நளினம் வெளிப்படுமாறு கையாள்வார். அந்த மொழி உவமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வது மட்டுமல்ல உறைக்கச் சொல்வது, உள்ளதைச் சொல்ல அதை விடுத்து வேறு மொழி யில்லை எனும் மனப்பதிவை தருவது. "அம்மா போட்ட கீரைப் பாத்தியை, சூரனுடைய தலைபோல முளைக்க முளைக்க, அந்த மாடுதான் சாப்பிட்டுக்கொண்டு வந்தது", "அந்த அகப்பையும் எனக்கு முன்னால் தலை கீழாக படம் விரித்து பாம்புபோல ஆடிக்கொண்டி ருக்கும்" என்று உவமை சொல்வதற்கு அப்பால் சென்று, "பகல் முழுக்கக் காய்ந்த பாவாடையிலும் சேவையிலும் சூரியன் கொஞ்சம் மீதம் இருந்தது", "உயிரை விடுவதுபோல இலையான் மூத்திரம் அளவுக்கு ஒரு சொட்டு பானத்தை நான் கிளாஸில் மிச்சம் விடுவேன்", "எங்கள் வீட்டில் நாங்களும் எலிகளுமாகக் குடியிருந் தோம். எங்கள் உணவு முடிந்த பிறகு எலிகளின் சாப்பாட்டு நேரம் ஆரம்பமாகும்", "அவளுடைய சிரிப்பு தனியாக எடுத்துவைத்த சாமிப் படையல்போல சந்தோஷம் பொங்க வெளிப்படும்" ஒருவித நையாண்டி வெளிப்பட மொழியைக் கையாளும் அழகை முத்துலிங்கத்திடம் இரசிக்க முடியும்.



மொழியை செம்மையாக கையாளும் கலை ஓர் ஆக்க இலக்கிய கர்த்தாவின் மிக முதன்மையான பண்பு. மொழின் அழகை இரசிப்பதே இலக்கிய இரசனையின் முதற்கூறு. அதைச் சரிவரப் புரிந்துகொண்டு நயமிக்க மொழியைக் கண்டடைவதையும் பிரயோகிப்பதையும் தேர்ந்த எழுத்தாளர்கள் செய்கின்றனர். "கோவணத்தை உருவி, பிழிந்து, பத்துத் தடவை **ஈரத்தூசி** பறக்க உதறி வாசலில் கட்டியிருக்கும் கொடியில் காயப்போடுவார்.... தெறிக்கும் நீர்த்தூசுகள், சின்னஞ் சிறு கொசுக் கூட்டம் மாதிரி இருக்கும்" என்று பிரபஞ்சன் மொழியை அழகுற கையாழ்வார். **'நீர்த்தூசு'**. **'ஈரத்தூசி'** என்பன நயத்தினால் மனதை நிறைக்கும். ஒரு படைப்பாளி கையாழும் மொழியின் செழிப்புக்கான உட்கூறாக அவனது மொழித் தேர்ச்சி மட்டும் அமைவதில்லை. அவன் வாழ்ந்த சமூக வாழ்வின் வனப்பான அனுபவங்கள், அவன் பழகிய மனிதர்களின் சீர்மைகள், அவனது பண்பாட்டு வாழ்வின் புலப்படும் மற்றும் புலப்படாத புழங்கு வெளிகளும் மூத்தோர் மரபுகளும், நாட்டார் மற்றும் செவ்வியல் இலக்கியப் பயில்வு என்று பல்வேறு காரணிகள் அவனது மொழிக் கையாட்சியின் இலாவகத்தை தீர்மானிக் கின்றன. பிரபஞ்சனிடத்திலும் முத்துலிங்கத்திடமும் இந்தப் பின்னணிகளின் விளைவாக வந்த மொழிச் சேகரங்கள் மிகுதியானவை என்பதை அவர்களது படைப்புகள் பலவும் தெளிவாக காட்டுகின்றன. இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டுக்களாக இந்த இரண்டு கதை களும் அமைந்துள்ளன.

**புதிய புனைவுக்கான அருட்டுணர்வு:**

பிரபஞ்சன் முத்துலிங்கத்தைப் போலவோ, முத்துலிங்கம் பிரபஞ்சனைப் போலவோ எப்படி சிந்திக்க முடிகின்றது? எப்படி சமதைகளோடு கதை சொல்ல முடிகிறது? வெவ்வேறான வாழ்க்கைச் சூழல்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் சமதை யான உணர்வை எப்படி தரமுடிகின்றது? இந்த வினாக் கள் ஒருவரிடத்தில் எழும்போது. மேலோட்டமாக "போலச் செய்தல்", "பிரதியெடுத்தல்", "தழுவல்" என்று குரோத மன எண்ணத்தை வெளிப்படுத்திவிடுவதே வழக்கம். ஆனால், அதனைக் கடந்து சிந்திப்பது அவசியம். உலக இலக்கியங்களின் பரிச்சயமும், அந்த இலக்கியங்கள் தரும் அனுபவ தரிசனங்களை வைத்துக் கொண்டு தங்கள் தங்கள் வாழ்க்கை வெளிகளின் அனுபவங்களை புனைவு களாக கொண்டுவர முயற்சிப்பதும் உன்னதமான படைப்புகள் சாத்தியமாகின்றன. தமக்கான வாழ்வியல் வெளிக்குள் இறுகிப்போன விடயங்களைக்கூட, உலகப் பொதுவான தரிசனமாக மாற்றும் வல்லமைமிக்க படைப்பாளர்கள் பலர் உள்ளனர். அவர்களில் பிர பஞ்சனும், முத்துலிங்கமும் தவிர்த்துவிட முடியாதவர் கள் என்பதை அவர்களின் இந்த இரு கதைகள் மட்டு மல்ல இன்னும் பல கதைகளும் புலப்படுத்துகின்றன.

இவ்வாறான புனைவுகள் படைப்புலகில் ஏனையவர்களுக்கும் அருட்டுணர்வைக் கொடுப்பவை. அந்த அருட்டுணர்வால் பின்னாளில் சிலர் அதுபோன்ற புனைவுகளைத் தங்கள் அனுபவங்களில் தோய்ந்து சொல்ல முயற்சித்துள்ளனர். தங்கள் முயற்சிகளை முன்னைய புனைவுகளின் அருட்டுணர்வால் எழுதப் பட்டவை என்று அவர்களே வெளிப்படையாக சொல்லும் துணிவுடனும் இருந்தனர். த.கலாமணி அவர்கள் "நாட்கள், கணங்கள், நமது வாழ்க்கை", "பாட்டுத் திறத்தாலே", "அம்மாவின் உலகம்", "அரண்" ஆகிய சிறுகதை நூல்களை தந்துள்ளார். அவற்றில் "அரண்"(2022) எனும் தொகுப்பில் "அம்மாவின் பட்டுச்சேலை" எனும் கதை வெளிவந்துள்ளது. அந்தக் கதை பிரபஞ்சனின் "அப்பாவின் வேஷ்டி" தந்த அருட்டு ணர்வால் எழுதப்பட்டதாக கலாமணி வெளிப்படையாக சொல்பவராக இருந்தார். மூத்த, ஆற்றல் மிக்க படைப்பாளிகளின் படைப்பாக்க வீச்சு பின்னர் வந்த படைப்பாளிகளிடத்தில் அருட்டுணர்வை உண்டாக்கி, எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை புரிந்து கொள்ள அந்தக் கதையை எடுத்துக்காட்டாக கொள்ளலாம்.

த.கலாமணியின் "அம்மாவின் பட்டுச்சேலை" அவர் பிறந்து, வளர்ந்த குடும்பத்தின் வாழ்க்கைச் சூழலின் அனுபவங்களை மையப்படுத்தியதுதான். எனினும் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிறுத்தப்படும் அம்மாவுக்கு அப்பா(ஐயா) முதன் முதல் வாங்கிவந்த பட்டுச்சேலையும், அம்மாவின் வாழ்க்கைக் காலத்திலும் மறைவின் பின்னரும் அது மகனின் வாழ்வோடு உணர்வினால் பிணைக்கப்பட்ட விதமும், பின்னர் அம்மாவின் பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகள் காலம் வரை அந்த உணர்வு கடத்தப் படும் வகையும், அம்மாவின் பட்டுச்சேலை பூட்டப் பிள்ளைகளுக்கு அழகிய ஆடைகளாக வடிவமாற்றம் பெறும் போது அந்தப் பிள்ளைகளில் வடிவில் தன் அம்மாவைக் காணுகின்ற மகனது உணர்வும் வெளிப் படுத்தப்படும் கதை. அந்தப் பட்டுச்சேலையின் கதை, ஒரு சாதாரண குடும்பத்தின் வாழ்க்கை முன் னேற்றத்தின் கதையாகவும் அமைந்துவிடுகிறது.

கலாமணியின் கதை "அம்மாவின் பட்டுச்சேலையைக் காணோம்" என்ற ஏக்கத்துடன் தொடங்குகின்றது. அந்தப் பட்டுச்சேலையை இழந்துவிடக் கூடாது எனும் ஏக்கம் கதை முழுவதும் தொடர்ந்து வருகிறது. பிரபஞ்சனின் கதையில் அப்பாவின் வேட்டி வைக்கப்பட்டிருந்த அலுமாரியி லிருந்து வெளிவரும் "கற்பூர வாசனை" போல இங்கு "பூச்சிமுட்டை" வாசனை வருகிறது. முத்து லிங்கத்தின் கதையில் வரும் சின்னம்மாவின் குடும்பத் தைப் போல இங்கும் அம்மாவின் இளைய சகோதரி களின் கதை வந்துபோகிறது. அம்மாவின் பட்டுச் சேலை யோடு சேர்த்தே தையல் போட்டு பயன்படுத்தப்படும் அம்மாவின் பழைய குடை ஒன்று வருகின்றது. முத்துலிங்கத்தின் அம்மா பற்றிச் சொல்லும் மகன் தனது அப்பாவைப் பற்றிச் சொல்வதைப்போல, இங்கும் குடும்பத்தை அழகுறப் பரிபாலிக்கும் அப்பாவின் (ஐயாவின்) கதை ஒன்றும் சொல்லப்படுகின்றது. அப்பாவின் வேட்டியின் அழகையும் அம்மாவின் பாவாடையின் பெறுமானத்தையும் எப்படி பிரபஞ்சனும், முத்துலிங்கமும் ஆழ்ந்தனுபவித்துச் சொன்னார்களோ, அவ்வாறே இங்கும் அம்மாவின் பட்டுச்சேலை பற்றிய விவரணமும் வருகிறது. "அம்மாவின் பட்டுச்சேலையில் அடக்கமான ஓர் அழகு இருந்தது. இன்றைய பட்டுச் சேலைகள் போல பல வர்ணங்களை இழைத்து கவர்ச்சி காட்டும் தன்மை அதில் இல்லை. மெல்லிய பொன் நிறம் இழையோடிய வெண்மையான சேலை. அசல் பட்டு. ரவிவர்மாவின் ஓவியத்தில் கலைமகள் உடுத்தியிருக்கும் சேலைபோல இருக்கும். அம்மாவின் பட்டுச்சேலையின் கரைதான் அழகின் உச்சம். அப்படியொரு வண்ணமான கரையை இன்று வரை நான் கண்டதேயில்லை" என்று சித்திரிக்கும் பாங்கு முன்னைய சிறுகதைகளோடு பொருத்திப் பார்க்கத் தக்கது.

வசதிகள் மட்டுப்பாடாக இருந்த வீட்டில், கலாமணியின் அம்மாவின் பட்டுச்சேலையை பராமரிப்பதற்கு எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள், முத்துலிங்கத்தின் அம்மா பாவாடையை பராமரிப்பதற் கும், பிரபஞ்சனின் அப்பா பட்டு வேட்டியைப் பராமரிப்ப தற்கும் எடுத்த பிரயத்தனங்களோடு ஒப்பிடத்தக்கது. "வீட்டின் முகட்டிலிருந்து தொங்கவிட்டிருந்த ஒரு கயிற்றில்தான் முன்பு ஐயா புடவைப் பெட்டியைத் தொங்கவிட்டிருந்தார். புடவைப் பெட்டி என்பது ஓலையால் இழைக்கப்பட்ட பெரிய மூடுபெட்டி. அந்தப் பெட்டியிலே நல்ல உடுப்புகளை நாம் வைத்திருப்போம்" என்று குறிப்பிடுவது ஒரு பாரம்பரிய பராமரிப்பு முறை யாகத் தெரிகிறது. "ஐயாவுக்கு பெரிய உழைப்பில்லை" என்று அப்பாவின் நிலையை கலாமணி சொல்வது போல, முத்துலிங்கமும் "வேலைக்குப் போகும் பழக்கம் கிடையாத" அப்பா பற்றிச் சொல்கிறார். "கைரேகை பார்ப்பதில் நிபுணரான" அப்பாவைப் பற்றி முத்துலிங்கம் குறிப்பிடுவதைப் போல "மனையடிச் சாத்திரத்திலும் சிறந்து விளங்கிய ஐயா" பற்றி கலாமணி குறிப்பிடுகிறார்.

**புனைவுகளின் தரிசனப் பொதுமை:**

புனைவுகளை அவ்வாறு ஒப்பியல் நோக்கில் பார்க்கத்தான் வேண்டுமா? எனும் கேள்வி இதனைப் படிப்பவர்களிடம் எழலாம். அப்படிப் பார்ப்பது "அவர் இவரைப்போல, இவர் அவரைப்போல" என்று வலிந்து இழுத்துக் கட்டும் வேலையல்லவோ? அவரவர் அனுபவங்களும் அவர்களுக்கான படைப்பு மனமும் அவர்களின் படைப்பாக்க வெளியும் அவரவருக்கு உரி யதே. அதை இன்னொருவரோடு ஏன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்? என்ற வினாக்கள் தவிர்க்கவியலாதவை. சமதைகளை ஒப்பியல் நோக்கில் பார்ப்பது படைப்பியல் நோக்கில் சில பொதுவான தரிசனங்களை படிப்பவனி டத்திலும் படைப்பவனிடத்திலும் ஏற்படுத்துகின்றது. இது பலதரப்பட்ட வேறுபாடுகளால் நிறைந்த மனிதர்களின் வாழ்வு முறையில் நம்பிக்கை, விருப்பங்கள், எதிர் பார்ப்புகள், அபிலாசைகள், இலக்குகள், வழக்காறுகள், தேர்வுகள் போன்ற விடயங்களில் எத்தகைய அடிப் படையான சமதைகள் உள்ளன என்பதை புரிந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமைகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்ட மூன்று கதைகளும் தமிழ்ச் சூழலில் வெளிவந்தவை என்பதால் கதைக்கான களங்கள் வேறுபட்டிருந்தாலும் அவற்றின் உணர்வு வெளிப்பாடுகள் ஒத்த தன்மையுடையனவே. இதுவே பண்பாட்டாலும் வாழ்வு முறையாலும் வேறுபட்ட சமூகங்களின் நம்பிக்கை, விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், அபிலாசைகள், இலக்குகள், வழக்காறுகள், தேர்வுகள் போன்ற விடயங்களின் ஒப்பியல் நோக்குக்கான வாய்ப்பாக அமைந்துவிட்டால் அவற்றின் பரிமாணம் இன்னொரு தளத்தைச் சென்று சேரும். அது உலகப் பொதுமைகளை புனைவுகளின் வழியாக கண்டறியும் வழியாக அமையும்.

சிறுகதைகளில் அது சமதையான உணர்வின் வெளிப்பாடுகளின் கண்டறிதலாக அமைய, நாவல்களாயின் அது ஒரு குறித்த மக்களின் வாழ்வியல் கூறுகளின் மானிடவியல் வரைபடத்தின் சமதைகளை கண்டுகொள்ளும் பரந்ததொரு முயற்சியாகிவிடும். இது படைப்பாக்கங்களின் தரிசனப் பொதுமை மற்றும் தரிசன முழுமையை ஒப்பியல் நோக்கில் புரிந்துகொள்வதற்கு அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரா - வவுனியா



# செல்லம்மா

இரண்டு வருடங்களாக செல்லம்மாவை ஒருமுறையேனும் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இன்றுதான் அந்தநாள் அமைந்தது. என் கைகளை தனது இரண்டு கைகளாலும் இறுக்கிப் பிடித்தபடி "வயசும் நூறுக்கு மேல வந்திட்டு. ஒருக்கா ஊருக்கு போய் நானும் அவரும் வாழ்ந்த வீட்டையும் அயலட்டை சனங்களையும் பாக்கவேணும் போல கிடக்கு. கொஞ்சம் மங்கலா இருந்த கண்ணும் இப்ப துப்பரவா ஒண்டும் தெரியேல்ல. சொந்த பந்தம் எண்டு ஒரு சனமும் எட்டி கூடப் பாக்குதுகளில்ல. என்னை எடுக்கச் சொல்லி கர்த்தரிட்ட செபிச்சுக் கொண்டுதான் இருக்கிறன். என்னைத் தேடி நீயெண்டாலும் இவ்வளவு தூரம் வந்திருக்கிறியே!" என தனது தளதளத்த குரலினால் சொல்லிக் கொண்டிருக்கிறார் செல்லம்மா.

என்னிடமிருந்து வரும் பதில் எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை. தனது நீண்ட நாள் மன வோட்டங்களை இடையிடையே பெருத்த இருமலுடனும் நீண்ட பெருமூச்சுகளுடனும் ஏற்ற இறக்கமாகச் சொல்லிக் கொண்டே போகிறார். "சிந்து பாவம் அவளுக்கு ரண்டு பிள்ளையள் பிறந்தும் செத்தெல்லோ போச்சுதுகள்" என்று கவலையாகச் சொல்கிறார். "உவன் ஆரோகனாலதான் எங்களுக்கு மரியாதை கேடு" என்று மெல்ல ரகசியமாகச் சொல்கிறார். "குட்டான்ர பெட்டையள் பவானி, வவா எல்லாம் என்ன செய்யிறாளவை? கலியாணம் கட்டிட்டாளவையோ?" என்று நெற்றியைச் சுருக்கி கேள்வி கேட்கிறார். "மணியும் செல்வியும் ஒற்றுமையா இருக்கினமோ? அம்மணி என்னவாம்?. ராஜ்குமார் எப்பிடி இருக்கிறான்? ரவியன் எப்பிடி இருக்கிறான்......" என அடுக்கடுக்காக கேட்டுக்கொண்டே இருக்கிறார்.

"எல்லாரும் நல்லா இருக்கினம். நீங்கள் ஏன் கனக்க வெல்லாம் யோசிக்கிறீங்கள்? காலம் ஓடிக்கொண்டே இருக்கு. எல்லாரும் தங்கட தங்கடபாட்டில வாழினம். உங்களுக்கு ஒரு நல்ல குடும்பம் கிடைச்சிருக்கு. நீங்கள் சந்தோசமா இருங்கோ" என்று பதிலை சுருங்கச் சொல்லும் நான் எனது சிறுவயதில் பார்த்த செல்லம்மாவையும் அவரின் தற்போதைய நிலையையும் எண்ணிப் பார்க்கிறேன். அப்போது என் கண்கள் கலங்கியதை செல்லம்மாவால்தான் பார்க்கமுடியாதே! செல்லம்மா அந்தக் காலத்திலேயே தாதியாகப் பணி புரிந்தவர். வைத்தியசாலையில் மட்டுமல்ல ஊரிலேயும் அவர் நன்கு அறியப்பட்டவர். பலருடைய வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பிரசவம் பார்த்தவர். கோபாலருக்கு செல்லம்மா இரண்டாம் தாரம். கோபாலரின் முதல் மனைவி இறந்ததனால் செல்லம்மா கோபாலரை மணந்து கொண்டார். எல்லோருக்கும் பிரசவம் பார்த்த செல்லம்மாவுக்கு ஏனோ கர்த்தர் குழந்தை வரம் தரவில்லை. அவரின் உதவி செய்யும் மனப்பாங்கும் அன்பான அமைதியான பேச்சும் அவரின் தாதியாகிய தாய்மைக்கு அடையாளம் எனலாம்.

நான் தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் போது செல்லம்மாதான் எனக்கு ஒரு புலமைப்பரிசில் பயிற்சிப் புத்தகம் வாங்கித்தந்திருந்தார். பெறுபேறு வந்ததும் நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து விட்டேன் என்று அவரிடம்தான் ஓடிச்சென்று சொன்னேன். அச் சம்பவம் என் மனதில் இன்னமும் நிழலாடுகின்றது. அம்மாவும் செல்லம்மாவிடம் காசு மாறி வாங்குவது நகை நட்டு கைமாறுவது என்று கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார். அப்படி அந்தக்காலத்தில் எங்களூரில் சாதி, சமயம், ஏழை, எளியவர் என்ற எந்தவிதப் பாகுபாடுமில்லாமல் பழகிய ஒருவர் என்றால் அது செல்லம்மா மட்டும் தான். கோபாலர் இறக்கும் வரை அவருக்கான கடமைகளை அருகிலிருந்து கவனமாகச் செய்து முடித்தார் செல்லம்மா. பின்னர் பல வருடங்களாக அந்த மிகப் பழைமையான ஓட்டு வீட்டுக்குள் செல்லம்மா தனித்துப் போய் விட்டார். துணைக்கென வந்த உறவுகளும் செல்லம்மாவின் சொத்துப் பத்துக்குத்தான் ஆசைபட்டன. கொடுத்த வாக்கு மீறாமல் தன் சொத்துக்களை எல்லாம் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு வயது முதிர்ச்சியால் படுக்கையாகிப் போய் விட்டார். நோய்க்கொடுமையும் தனிமையும் அவை தந்த வலிகளும் எனப் பல நாட்களாக போராடிக் கொண்டிருந்ததனால் கோபாலரின் முதற் தாரத்து மகனின் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டவருக்கு இப்போதெல்லாம் ஒரு பணிப்பெண்தான் துணை.

"நான் குடுத்து வச்சவளடி பிள்ளை. நல்ல தங்கமான மகனும் மருமகளும் எண்டபடியா என்னைக் கவனமாப் பாக்குதுகள். என்ர பாடுபயன் எல்லாம் பாத்து எப்பவும் என்னோடயே கூட இருக்கிறதுக்கு இந்தப் பிள்ளையை ஒழுங்குபடுத்தியிருக்கினம். பாவம் அதுகளும் வேலை வில்லட்டி போகத்தானே வேணும் நெடுக என்னோடயே இருக்க ஏலாதெல்லோ" என்றவாறே என்கையை பிடித்திருந்த தனது கைகளில் ஒன்றை எடுத்துப் பணிப் பெண்ணின் கன்னத்தைத் தொட்டுத் தடவுகிறார். உடனே போய்விடாதே என்ற எதிர்பார்ப்போடு "பிள்ளை நீ அவசரமாப் போகவேணுமே" என்ற செல்லம்மாவின் கேள்வி என்னை நோக்கி வர என் அவசரத்தை மறைத்து "இல்லை...இல்லை... நான் இருக்கிறன்" என்கிறேன். நான் வந்தவுடன் ஒரு பிஸ்கட் பையை அவரின் கைக்குள் திணித்ததை நினைவில் வைத்து "பிள்ளை இவவுக்கு டீ போட்டுகொண்டு வாங்கோ... இவா தந்த பிஸ்கட் எங்க? அதில ஒண்டு எனக்குத் தாங்கோ, இவாக்கும் குடுங்கோ, நீங்களும் சாப்பிடுங்கோ, தம்பியாக்களுக்கும் குடுங்கோ என்று பணிபெண்ணைக் கனிவாகப் பணிக்கிறார். "ஓம் அம்மா" என்றபடி புன்னகைத்தவாறே பிஸ்கட் பையை உடைத்து இரண்டு பிஸ்கட்களை செல்லம்மாவின் கைக்குள் வைத்துவிட்டு டீ போடச்செல்கிறாள் அப்பெண்.

செல்லம்மா சக்கர நாற்காலியில் இருத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தமையும் சுருங்கிய அவரின் வெள்ளைத் தோலும் நடக்கமுடியாத கால்களும் பார்வையிழந்த மண்ணிறக் கண்களும் ஒட்ட வெட்டப்பட்ட செம்படைத் தலைமுடியும் ஊரைப்பற்றியும் தன் வீடு வளவைப் பற்றியும் சனங்கள் தொடர்பாகவும் செல்லம்மா கொண்டுள்ள ஏக்கமும் அங்கிருந்து விடைபெற்றும் இரண்டு வாரங்களாக எனக்குள் ஆழமாக பேசிக்கொண்டே இருக்கின்றன. நானும் ஊரை விட்டுத் தள்ளி வந்திருக்கிறேன். என்னால் இந்த இளமைக் காலத்திலே கூட ஊரையும் உறவுகளையும் மறந்து வாழமுடியவில்லை. மாதமொருமுறையேனும் அம்மா வீட்டை எட்டிப் பார்த்துவிட்டு வந்து விட வேண்டும் என்று துடிக்கிறேன். நான் அப்படியிருப்பதாலோ என்னவோ செல்லம்மாவின் ஏக்கம் எனக்கு நன்றாகவே புரிகிறது. அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணை இறப்பதற்குள் ஒருமுறையேனும் மிதித்துவிட வேண்டும் என்ற அவரின் வேட்கை அவரிடமிருந்து என்னிடம் தாவிக்கொண்டதாய் உணர்ந்தேன். எப்படியேனும் ஒருமுறையாவது செல்லம்மாவை ஊருக்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்றே என் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் மூன்று மாதங்கள் வெறும் சிந்தனைகளோடே கழிந்துவிட்டது.

மீண்டும் ஒருமுறை செல்லம்மாவை பார்த்துவிட்டு வரலாம் என்று போனேன். அதே கோலத்தில் அவரை சந்திக்கிறேன். ஆனால் இம்முறை கோலம் மாறவில்லையே தவிர பேச்சு மாறிவிட்டது. எனக்குத்தான் வெறும் மூன்று மாதங்கள் கடந்திருக்கின்றன. செல்லம்மாவுக்கோ மூன்று யுகங்கள் கடந்துள்ளன. அவர் தன்னிலை மறந்து எதை எதையோ பேசிக்கொண்டிருக்கிறார். என்னை அறிமுகப் படுத்தியபோது முதல்முறைபோன்றே என் கைகளைப் பற்றிக்கொள்கிறார். ஆனால் என்னை அவர் மறந்து விட்டார். யாரென்றே தெரியாமல் எதை எதையோ வெல்லாம் சொல்லவிளைந்து களைத்துவிடுகிறார். திடீரென அழுகிறார். பின் எதையோ பேசுகிறார். தொடர்ந்து சிரிக்கிறார். நான் மனச்சங்கடத்தோடு அப்படியே நிற்கிறேன். "அம்மாவால இப்ப நல்லா ஏலாமப் போச்சு. முந்தநாளும் முட்டு இழுத்து மூச்சு எடுக்கேலாம சரியாக கஷ்டப்பட்டுப்போனா பாவம். யார் அந்த ஆரோகன்? அந்தாள் ஒருக்கா வந்துபாத்தா அம்மா நிம்மதியாப் போய்ச்சேர்ந்திடுவா" என்கிறாள் பணிப்பெண்.

சற்றும் யோசிக்காமல் பின்னேரம் யாழ்ப்பாணம் போவம், எல்லாரையும் பாப்பம் வெளிக்கிட்டு நில்லுங்கோ என்று நான் செல்லம்மாவிடம் சொல்ல அவரின் பார்வையிழந்த மண்ணிறக் கண்கள் இரண்டும் பட்டாம்பூச்சிகளாக சிறகடிக்கின்றன. செல்லம்மாவின் உலகத்தில் அடுத்த கணமே பின்னேரமாகிவிட்டது. போவம் ...போவம்... வெளிக்கிட்டன் என சக்கர நாற்காலியிலிருந்து உன்னி எழும்பினார். அவரை அமர்த்தி இருக்கச் செய்த பணிப்பெண் மின்னல் வேகத்தில் செயற்படத் தொடங்கினாள். சக்கர நாற்காலியைத் தள்ளியபடியே முற்றத்திற்கு கொண்டு செல்கிறாள். அப்படியே வீதிக்குக் கொண்டுசெல்கிறாள். குளங்கள் காடுகள் எல்லாம் கடந்து செல்கிறது.

மாடுகள் தெருவிலே நிற்பதாக வண்டி நிறுத்தப்பட்டு மெதுவாக நகர்த்தப்படுகிறது. வாகன இரைச்சல்கள் செல்லம்மாவின் காதுகளில் நன்றாகவே கேட்கிறது. புகையிரதக் கடவை வருகிறது. "ஆரியகுளம் ரயில் கடவை..." என்று செல்லம்மாவின் வாய் முணுமுணுத்தது. கோயில் மணி தூரமாய் கேட்கிறது. "இசிதோர் பள்ளிக்கூடத்தில மணி அடிக்குது, அங்கதான் நான் படிச்சனான்" என்று சொல்லிப் புன்னகைக்கிறார் செல்லம்மா. அப்படியே நூறு மீற்றர் தூரம் வரை நகர்த்திச் சென்றவள் நூறு கிலோமீற்றர் தூரத்துக்கான கதைகளைச் சொல்லிவிட்டு சக்கர நாற்காலியை வீட்டைநோக்கித் திருப்புகிறாள். வண்டி திரும்பியதும் "எங்கட கட்டையப்பா வீட்டடி முடக்கு" என்கிறார் செல்லம்மா. வண்டி மீண்டும் மெல்ல மெல்ல நகர்ந்து வருகிறது. செல்லம்மாவின் பல வருட கனவுலகும் மெல்ல மெல்ல சாத்தியமாகிறது. மீண்டும் வீட்டை அடைந்ததும் "உங்கட வீடு வந்திட்டு" என்று சொன்ன பணிப்பெண்ணிடம் "முன் படி சரியான உயரம், இப்ப பெய்த மழைக்குப் பாசியும் பிடிச்சுக் கிடக்கும். என்னைக் கவனமாப் பிடி, நீயும் கவனம்" என்கிறார் செல்லம்மா.

"ஓம்... ஓம்... நீங்கள் இறுக்கிப் பிடியுங்கோ" என்றவள் வண்டியின் ஒருபக்க சில்லை உயர்த்தி படியை உயரமாக உணரச்செய்து வீட்டுக்குள் கொண்டு செல்கிறாள். "என்ர வீட்டைப் பாத்தியே! இதுதான் நானும் கோபாலரும் வாழ்ந்த வீடு" என்று ஆர்ப்பரிக்கிறார் செல்லம்மா. "நான் வந்ததெண்டு ஒருத்தருக்கும் தெரியாதோ? ஏன் ஒருதரும் வரேல்ல! றதி எண்டாலும் வந்திருக்கலாமே" என்ற செல்லம்மாவிடம் ஐந்தாறு வருடங்களின் முன் புற்றுநோயால் இறந்து போன றதியாகப் பேசுகிறேன் நான். "கொஞ்சம் தண்ணி வை பிள்ளை டீ குடிப்பம்." தன் வலப்பக்கம் காட்டி "இதால போ கிணறு இருக்கு. துலாவில கவனமா அள்ளு" என்கிறார். "இவ்வளவு தூரம் வந்தது களைப்பா இருக்கு எப்பன் நேரம் படுக்கட்டே?" என்று குழந்தைபோல கேட்ட செல்லம்மாவை படுக்கையறைக்குள் கொண்டுசென்று கட்டிலுக்கு மாற்றுகிறாள் அப்பெண்.

சக்கர நாற்காலியிலிருந்து கட்டிலுக்கு மாற்றும் போது செல்லம்மாவின் கால்கள் லேசாக நிலத்தில் உரசிவிடவே "இதென்ன மாபிள் பதிச்சுக்கிடக்கு! இது என்ர வீடு இல்லை" என்கிறார் ஏக்கத்தோடு. "அடக் கடவுளே" என்று உதட்டைக் கடித்துக் கொண்டு என்னைப் பார்க்கிறாள் அப்பணிப்பெண். "நீங்கள் வவுனியாக்குப் போய் கனகாலம் எல்லோ. நிலம் பழுதாப்போச்சு எண்டு திருத்தி வேல செய்து மாபிள் பதிச்சது" என்று சடுதியாகப் பதில் சொல்கிறேன் நான். சிரித்தபடியே "ஆர் ஆரோகன்ர வேலையே இது? ம்.... அவனுக்குத்தானே வீடு அவன் என்னண்டாலும் தனக்கு விரும்பினதச் செய்யட்டுமன். உதில பக்கத்திலதான் அவன் இருக்கிறான். இப்ப வேலைக்குப் போயிருப்பான். வேலை யால வந்ததும் நான் இஞ்ச நிக்கிறத அறிஞ்சானெண்டா திகைச்சுப் போய் ஓடி வருவான்" என்று சொல்லிப் பெரு மூச்சொன்றை விட்டபடி கட்டிலில் நிமிர்ந்துபடுத்து கண்களை மெதுவாக மூடி நீண்ட நாட்களின் பின் ஆழ்ந்து உறங்குகிறார்..

செல்லம்மாவின் முகம் சூரியனைக் கண்ட தாமரைபோல் நன்றாக விரிந்து மகிழ்ச்சியாக மலர்ந் திருந்தது.

சூரியன் கீழிறங்க சந்திரன் வராது நட்சத்திரங்கள் எதுவுமில்லாது வானம் இருண்டே கிடப்பதை சாளர மூடாகப் பார்த்துவிட்டு ஏன் இப்படி இருண்டுகிடக்கிறது என்று எண்ணியவாறே சுவரில் தொங்கிய நாட்காட்டியைப் பார்த்தேன்.

அன்று அமாவாசை என்று கறுப்பு நிறத்தில் வட்டமிடப்பட்டிருந்தது....

ஆம்! அது செல்லம்மாவின் வாழ்வின் கடைசி அமாவாசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

# 12 முடிவைத் தொடுவாய் முயன்று

நாங்கள் ஒரு புதிய, ஒருங்கிணைந்த, அர்ப்பணிப்பு மிக்க தெரிவைச் செய்கின்ற அந்தக் கணத்தில் எமது வாழ்வு நேரான திசையில் திரும்புகிறது.

எங்கள் சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுத்த எங்களால் முடியாவிடினும், அந்தச் சூழ்நிலைக்கு எப்படி எதிர்த்தாக்கம் காட்டுவது என்பதையும், எமது வாழ்வை அந்தச் சூழலில் எப்படி வாழ்வது என்பதையும் தீர்மானிக்க முடியும் நிச்சயமாய்!

தூண்டலுக்கும், துலங்கலுக்கும் இடையில் ஓர் இடைவெளி - அது கணநேரமாயினும் -இருக்கிறது. அந்த இடைவெளியில் எமது மறுதாக்கத்தைத் தெரிவு செய்யும் சுதந்திரம் எம்மிடந்தான் இருக்கிறது. மறு தாக்கம் எப்படிப்பட்டது என்பதில்தான் மகிழ்ச்சியும் சந்தோஷமும் இருக்கின்றன. மறு தாக்கத்திற்கான போதிய அவகாசத்தை நாம் எடுத்துக்கொள்ளும்போது - ஒருகணம் என்பது பல சமயங்களில் நீடிக்கப்படலாம் - எமது தெரிவுகள் சிறப்பாகும். அந்த நிலைமை எமக்கு மட்டுமல்ல, அந்தச் சூழலில் சம்பந்தப்படும் மற்றவர்களுக்கும் நன்மையே பயக்கும்.

எங்களுடைய "தடக்குப் புள்ளிகளை" அடையாளம் காணவேண்டும். அவைதான் எம்மைச் செயற்படவிடாமல் தடுப்பவை. அடையாளம் கண்டால்தான் அவற்றை நீக்குவதற்கான சிறிய மாற்றங்களையாவது உடனே தொடங்கமுடியும்.

பொதுவாக மனித வாழ்விலே தடக்குப் புள்ளிகளாக இருக்கும் ஐந்து விடயங்களை உளவியலாளர்கள் இனம் கண்டுள்ளனர். முக்கியமானதும், முதலாவதுமான விடயம் பயம். "அச்சம் தவிர்" என்ற பாரதியின் புதிய ஆத்திசூடியின் முதலாம் வரி முதல், "அச்சம் என்பது மடமையடா" என்ற சினமாப் பாடல் வரை எல்லாந்தான் படிக்கிறோம். ஆயினும் பயம் எங்கோ மூலையில் இருந்து தலைகாட்டி எம்மைத் தடுத்துவிடுகிறதுதானே.!

இரண்டாவது தடைக்கல் "நியாயப்படுத்தல் தேவை". யாரும் என்னைப் பிழை சொல்லிவிடக்கூடாது, யாரும் என்னைக் குறைவாக நினைத்துவிடக் கூடாது, யாரும் என்னைக் குற்றம் கண்டு எங்காவது எழுதிவிடக்கூடாது என்கிற நியாயப்படுத்தும் அவசியம். "யாரும் ஏதாவது நினைக்கட்டும், சொல்லட்டும். எனது மனசாட்சிக்குச் சரியானதைச் செய்வோம்" என்று தொடரமுடியாத ஒரு தடக்குப் புள்ளி.

மூன்றாவது "பலியாளாக்கிவிடுவார்கள்" என்ற நினைப்பு. எங்கே என்ன தவறு, குற்றம் நடந்தாலும் பழியை என்மீது போட்டுவிட்டு மற்றவர்கள் தப்பிக் கொள்வார்கள் என்ற எண்ணம். இதையும் தாண்ட வேண்டும்.

அடுத்த பெரிய தடை, "தன்னிச்சைச் செயற்பாடு. உலகில் உள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் என்னிடம் தீர்வும் விடையும் இருக்கிறது என்ற கருத்து. இது மனித உறவுகளுக்குப் பெருந்தடையாக அமையும். இங்கே எண்ணம் மாறவேண்டும்.

ஐந்தாவது விடயம் "உரிமை". எனது தகுதிக்கு, எனது பணத்திற்கு, அல்லது எனது பட்டங்களுக்கு எவ்விடத்திலும் முன்னுரிமை தரப்பட வேண்டுமென்ற கோரல். ஒப்பீட்டளவில் குறைந்த சக்திச் செலவோடு பெரிய விடயங்களைச் செய்து முடிக்க எமக்கு உரிமை இருக்கிறதென்ற எண்ணம்.

மேலே சொல்லப்பட்டவை பொதுவான தடைகள். தனிப்பட்ட ஒவ்வொரு மனிதருக்கும், தனித்துவமான அகத்தடைகள், புறத்தடைகள் இருக்கலாம். அவரவர் அவற்றைச் சரியாக இனம்காண வேண்டியது அவசியம்.

வாழ்வில் எப்போதுமே தெரிவுகள் இருக்கும் போது, அது சிறிதாக இருந்தாலும், "எனக்கு ஒரு தெரிவு இருக்கிறது" என்ற மந்திரத்தை மறந்திடாமல் சொல்லிக்கொள்ள வேண்டும்.

புதிய ஆய்வுகள் என்ன கூறுகின்றன என்றால், நாங்கள் தெரிவு செய்யாது விட்ட தெரிவுகள் கூடச் சிலவேளை பிற்காலத்தில் எமக்குப் பெரிய துன்பத்தைத் தரலாம். "அட, இந்தச் சந்தர்ப்பம் எனக்கு வந்ததே! நான் அப்போது அதை ஏற்றுக்கொள்ளவில்லையே!" என்ற எண்ணம். கடந்துபோன அந்தத் தெரிவின் கவர்ச்சிக்குச் சிலவேளை நாங்கள் அதீத முக்கியத்துவம் கொடுக்கலாம்.

எங்களுடைய பிள்ளைகள் தொடர்பான சில விடயங்களிலே, பெற்றோராகிய நாம், அல்லது ஆசிரியராகிய நாம் என்ன முடிவு அல்லது என்ன தெரிவு செய்யப்போகிறோம்?

எங்கள் பிள்ளை இப்போதுதான் தரம் ஒன்றுக்குப் போகிறாள். வீட்டிலே மிக நன்றாகக் கதைக்கிற பிள்ளை, வித்தியாசாலையிலே யாருடனும் எதுவும் பேசுவதில்லை என்று ஆசிரியர் கூறுகிறார். வகுப்பிலே மிக மென்மையான, அமைதியான செயற்பாடுகளே காணப்படுகின்றனவாம். மூன்று, நாலு வயதிலே முன் பள்ளிக்குப் போன போதும் இப்படித்தான் இருந்தாள். புதியவர்களைக் கண்டு பயப்படுகிறாள் போலும். காலப்போக்கில் சரியாகிவிடும் என்று நினைத்திருந்தோம்.

ஒருவயதிலே மூன்று நாலு சொற்களும், இரண்டு வயதிலே முன்னூறு நானூறு சொற்களும் சிறு வாக்கியங்களுமென இயல்பாகப் பேச்சு வந்த பிள்ளைதான் இவள். வேறு வீடுகளில் தன் நண்பர்களோடு விளையாடும்போது பேசுகிறாள். கோயிலிலே எம்மோடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கையில் பேசுகிறாள். இது என்ன பிரச்சினை? என்ன செய்யலாம் இதற்கு?" என்று பெற்றோர் அங்கலாய்க்கிறார்கள்.

கதைக்கத் தொடங்கிய பிள்ளை கதைக்காமல் விட்டுவிடுவதற்கு இரண்டு பெரிய காரணங்களைக் கூறலாம். ஒன்று பிள்ளைக்கு ஏதாவது மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவம் நடந்திருத்தல். அப்படி ஏதும் நடந்திருந்தால் பிள்ளை அநேகமாக எங்கேயுமே பேசாது. வீட்டிலும் பேசுவதை நிறுத்தியிருக்கும்.

1980 முதல் உலகிலே பேசப்பட்டவராக இருந்த ஓர் ஆபிரிக்க, அமெரிக்கப் பெண்மணி மாயா ஏஞ்சலோ. சிதறிப்போன குடும்பம் காரணமாகச் சிறுவயது முதல் பாரிய நெருக்கீடுகளைச் சந்தித்தவர். ஏழு வயதில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான நிலையில், துஷ்பிரயோகம் செய்தவரோ தாயாரின் நண்பர் என்பது இன்னும் கஷ்டமாயிருந்த அவலம். அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது கொலை செய்யப்பட்டு விட்டார். அந்தக் கொலையின் பின்னணியில் தனது உண்மையின் வாக்குமூலமே இருந்தது என்பதை உணர்ந்த அவரது ஆழ்மனம் அடுத்த ஆறு வருடங்களுக்கு அவரைப் பேசாமலே வைத்திருந்தது. அப்படியான பிள்ளைப் பருவத்தைக் கொண்டிருந்தும் பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளராக, கவிஞராகப் பிரபலமான இவரது ஏழு சுயசரிதை நூல்கள் அவை எழுதப்பட்ட விசேட பாணிக்காகப் பெரு வரவேற்புப் பெற்றவை. முப்பதுக்கு மேற்பட்ட கௌரவப் பட்டங்களைப் பெற்ற இவர் அமெரிக்க அதிபர்கள் கிளிங்டன், பராக் ஒபாமா ஆகியோரால் உயர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவரது "அசாதாரணமான பெண்" என்ற கவிதை (phenomenal woman) எம் நாட்டில், க.பொ.த உயர்தர ஆங்கில இலக்கியப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே பிள்ளை ஒன்று சிலகாலம் பேசவில்லை என்றால் அதன் வாழ்வே முடிந்துவிட்டது என்று அர்த்தமில்லை.

மேலே கூறப்பட்ட பிள்ளை குறிப்பிட்ட ஒரு சூழலில் மட்டும் கதைக்காதிருக்கிறது. இது "தெரிவு செய்யப்பட்ட மௌனம்"(selective mutism ).

பதகளிப்புச் சார்ந்த ஒரு பிரச்சினை இது. பெற்றோரும் ஆசிரியரும் இணைந்து, பதகளிப்பைக் குறைக்கும் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தவேண்டும். பிள்ளை பேசவேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுக்கக் கூடாது. ஒருவேளை பாடசாலைச் சூழலில் ஒரு சொல், இருசொல் வந்தால், அது பெருமளவு பாராட்டப்படவேண்டும். உடனே சிறு பரிசு கொடுத்து மீள வலியுறுத்தல் செய்யலாம். எந்த இடத்திலும் கேள்வி ஒன்றைக் கேட்டுப் பதில் சொல்லுமாறு அவசரப் படுத்தாதிருக்கலாம். ஆறுதலாகப் பதில் சொல்வதற்கு அவகாசம் வழங்கலாம்.

பிள்ளை பேசுகின்ற இடங்களின் பண்புகளை, மெல்ல மெல்ல(வீடு, கோயில், பூங்கா)ப் பாடசாலை போலத் தோற்றமளிக்கச் செய்து பார்க்கலாம். சம வயதுப் பிள்ளைகளை அந்த இடத்தில் சீருடையில் கூடச் செய்தல், சிறு கதிரை மேசைகளில் அமரச் செய்தல் போன்ற சூழ்நிலை மாற்றங்களில் இணைந்து பிள்ளை பேசுமாயின் உற்சாகப் படுத்தலாம். தெரியாத ஒரு வளர்ந்தவரை ஆசிரியர் போல் நடிக்க வைத்துப் பார்க்கலாம். மெதுவாகப் பிள்ளை தன் பதகளிப்பை வெல்லத் துணை புரியலாம். பரிசோதனை முயற்சிகளின்போது பிள்ளை பதகளிப்பு அடைவதற்கான அறிகுறிகள் தென்படுமாயின், ஆழ்ந்த சுவாசத்தில் ஈடுபடச்செய்து ஆற்றுப்படுத்தலாம். இவ்வாறு நெருங்க நெருங்கப் பிள்ளை பெரும்பாலும் கதைக்கத் தொடங்கிவிடும். இவற்றைச் செய்வதற்குப் பெற்றோருக்கு மிகுந்த அவதானமும் பொறுமையும் தேவை.

இன்னொரு குடும்பத்தில் ஒரு பிள்ளை. ஏழு, எட்டு வயதிருக்கலாம். எந்த ஒரு இடத்திலும் சிறிதுநேரம் இருக்க முடியாதுள்ளது பிள்ளைக்கு! குறிப்பாக அமைதியான சூழலில் பிள்ளை அமர்ந்துகொள்ளக் கஷ்டப்படுகிறது. அதீத உடல் அசைவுகளைக் காட்டும் பிள்ளையால் பாடசாலையில் எந்த ஒரு விடயத்திலும் கவனத்தைச் செலுத்த முடியவில்லை என்று ஆசிரியர் குற்றம் சாட்டுகிறார். அளவுக்கு அதிகமாகவே கதைக்கும் பிள்ளை ஆசிரியர் கேள்வி கேட்டால், மிக விரைவாக எழுந்து தவறான விடையைச் சொல்லிவிட்டு அமர்ந்துவிடுகிறதாம். இதனால் மற்றைய பிள்ளைகளின் கேலிக்கு ஆளாகிறது என்ற முறைப்பாடு வேறு. வரிசையில் நிற்க வேண்டிய சந்தர்ப்பங்களில் ஒருபோதும் தன் முறை வரும்வரை காத்திருக்கும் பொறுமை இருப்பதில்லையாம். (இலங்கை மக்களில் எத்தனை பேருக்கு A.D.H.D இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்) மற்றவர்களுடன் கதைக்கும்போது சிந்திக்காது அவசரப்பட்டுப் பேசுவதும் ,மற்றவர்கள் பேசும்போது இடைமறித்துப் பேசுவதும் மிக இயல்பாகி விட்டன.

வேறொரு குடும்பத்தின் மற்றோரு பிள்ளை மேற்குறிப்பிட்ட இயல்புகளில் ஒருபகுதியை மட்டும் கொண்டிருக்கலாம். கவனக் குறைவு இருக்கிறது. ஆனால் அதீத செயற்பாடு இல்லை. (A.D.D) இந்தப் பிள்ளையும் ஒரு விடயத்தைக் கவனிக்கும் நேரம் குறைவாக இருக்கிறது. கவனக் கலைப்பான்களில் இலகுவில் மனம் சென்று விடுகிறது. கவலையீனமான செயற்பாடுகள் மிக அதிகமாக இருப்பதால், அதிகளவு மறதியும் பொருள்களை இழந்துவிடுவதும் வெகு சாதாரணமாகிவிடும். பாடசாலையில் ஒருநாள் ஒரு குடை, மறுநாள் ஒரு பேனை, அடுத்தநாள் ஒரு புத்தகம் என்று ஏதோ ஒன்றை விட்டுவிட்டு வந்துவிடும். நீண்ட நேரம் பொறுமையாக இருந்து செய்யவேண்டிய விடயங்களை ஒருபோதும் பிள்ளையால் செய்ய முடிவதில்லை. ஆசிரியரது அறிவுறுத்தல்களைக் கேட்டுச் செய்வதும் குறைவாக இருக்கும். ஏனெனில் பிள்ளை அவற்றைக் கவனித்திருக்காது. "தான் சொல்வதைக் கேட்பதில்லை" என்ற படிமமே ஆசிரியருக்கு வரும் என்பதால் ஆசிரியரால் விரும்பப் படாத பிள்ளையாகவே இருக்கும். விடயங்களை ஒழுங்குபடுத்திச் செய்வது, ஒரு குறிப்பிட்ட நேர ஒழுங்கைப் பின்பற்றுவது ஆகியனவும் பிள்ளைக்குக் கடினமாக இருக்கும்.

இத்தகு பிள்ளைகள் பற்றி வகுப்பாசிரியர் என்ன தெரிவுகளைப் பின்பற்றலாம் ?

வகுப்பில் முன் வரிசையில் இருத்திவிடலாம். .கவனக் கலைப்பான்களால் பாதிக்கப்படுதல் சற்றுக் குறையும். மூச்சுப் பயிற்சிகளிலும் தியானப் பயிற்சிகளிலும் ஈடுபடுத்தலாம். தன்னைப் பற்றிய நேரான விடயங்கள் எல்லாவற்றையும் நினைவுபடுத்தி எழுத வழிப்படுத்துவதன் மூலம் பிள்ளையின் சுய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பையும் சுய அன்பையும் குறையவிடாது பாதுகாக்கலாம்.

ஓர் இடத்தில் இருந்து ஐந்து நிமிடம் கணக்குச் செய்ய முடியாத பிள்ளையை இவ்வாறு கையாண்டு பார்க்கலாம் .முதல் நாள் நாங்கள் பிள்ளை மேசையில் இருக்கும் நேரத்தைக் கணித்துக் கொள்கிறோம். அது ஐந்து நிமிடங்கள் என வைப்போம். அடுத்தநாள் அதே செயற்பாட்டுக்காகப் பிள்ளை ஏழு நிமிடம் இருந்தால் ஒரு சிறிய விருப்பமான பரிசு வழங்கப்படும் என ஊக்குவித்து அதைச் செய்ய வைக்கலாம். செய்தால் பரிசை வழங்கலாம். செய்யாவிட்டால் விமர்சனம் ஏதும் கூறாமல் அடுத்தநாளும் அதே வழியை முயலலாம். இப்படியே மெதுவாக ஒரு இடத்தில் அமர்ந்து செயற்படும் நேரத்தைக் கூட்டிவரலாம்.

இந்தப்பிள்ளைகளின் பெற்றோர் என்ன தெரிவு களுக்கு வரலாம்? ஆசிரியர், அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடிச் சில செயற்பாடுகளை வீட்டிலும் தொடரலாம். இவ்வளவும் செய்தும் முன்னேற்றத்தைக் காண முடியவில்லையெனில் சீர்மியர் ஒருவர் அல்லது மருத்துவர் ஒருவரின் உதவியைக் கோரலாம்.

அதிபர், ஆசிரியர்கள் பெற்றோரைக் கூப்பிட்டு வெறுமனே குற்றச்சாட்டுகளை அடுக்காமல் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அவரவருக்குக் குறிப்பாகக் கூறலாம். சொல்லிக்கொடுக்கலாம்.

இத்தகு பிள்ளைகளைச் சமூகச் செயற்பாடு களில் அதிகம் ஈடுபட வைப்பதும் நல்லது. பிள்ளை களுக்கும் பெற்றோருக்கும் உளநலம் சார்ந்த விழிப் புணர்வையும், அறிவையும் கொடுப்பதும் நல்லதுதான்.

"பில்கேட்ஸ்" என்ற பெயர் அநேகமாக எல்லாருக்கும் தெரியும். "மைக்கிரோ சொப்ட்" (Microsoft) நிறுவன ஸ்தாபகர்.மிகப் பெரிய தொழிலதிபர். மிக மிகப் பெரிய பணக்காரர் .அதைவிடப் பெரிய பரோபகாரி. தர்ம காரியங்களுக்காகத் தனது நிதியிலிருந்து இதுவரை 35.8 பில்லியன் டொலர்களை வழங்கியிருப்பவர். அவருக்கும் A.D.H.D என்றால் நம்ப முடிகிறதா ?

இது மற்றோர் வீட்டுப் பிள்ளை. அடிக்கடி வேக வேகமாய்ச் சுவாசிக்கிறது. சுவாசிப்பது கடினமாய் இருப்பதாகச் சொல்கிறது. நீங்கள் உடனே வைத்தி யரிடம் கொண்டு செல்கிறீர்கள். அவர்கள் இது தொய்வு (asthma)இல்லை என்று கூறியதோடு மட்டுமன்றிப் பெரிதாக ஒரு பிரச்சினையும் இல்லை என்று வேறு சொல்லிவிட்டார்கள். பிள்ளைக்கோ அடிக்கடி இப்படி வருகிறது .பெரிதாக ஒரு பிரச்சினையும் இல்லாத அந்தப் பிரச்சினைதான் என்ன?" இந்தப் பிரச்சினை வருகிறபோது தலைச் சுற்று, வாய் உலர்தல், உப்புதல் ,களைப்பு என்று பல முறைப்பாடுகளைப் பிள்ளை சொல்கிறது. அவையெல்லாம் கற்பனையா?" என்று வைத்தியரிடம் கேட்டால், "இல்லை. அவை உண்மை தான்" என்று வேறு சொல்கிறார்கள். "அப்படியானால் ஏன் மருந்து ஏதும் தரவில்லை?" என்று கேட்டால் "பார்த்துச் செய்வோம். பிள்ளையைச் சந்தோசமாய் வைத்திருங்கள்" என்கிறார்கள். அப்படியானால் இது என்னதான் வருத்தம்? உடலுக்கும் மனதுக்கும் இவ்வளவு தொடர்பு இருக்கிறதா ?

இருக்கிறதுதான். இதுவும் பெரும்பாலும் பதகளிப்புடன் தொடர்புடைய ஒரு பிரச்சினையாகவே இருக்கும். அல்லது பீதி நிலையினால் வருவதாக இருக்கலாம். "மிகைக் காற்றூட்டம்" எனக் குறிக்கலாம். (hyper ventilation). சிலவேளை குருதி இழப்பினாலோ அல்லது வேறு தொற்று நோய்களாலோ ஏற்பட்டிருக்க லாம். அப்படி ஏதும் ஏற்பட்டிருந்தால் (விபத்தில் ஏற்பட்ட குருதி இழப்பு) அந்த நிலை மாற இது குறையும். பல சமயங்களில் அப்படி ஏதும் இல்லாமல் சூழல் நெருக்கீடு கள் தந்த பதகளிப்பாக இருக்கும். ஒருவேளை பிள்ளை, கை கால் மரத்த உணர்வு, கை கால்களில் ஊசி குத்தும் உணர்வு, நெஞ்சுவலி, இதயத்துடிப்பு வேகம் அதிகரிப்ப தான உணர்வு தசைவலிப்புப் போன்றவற்றால் கூடப் பாதிக்கப் படலாம். இரவிலே பிள்ளையின் நித்திரை நேரம் குறையலாம். சிலவேளை சிறு தடுமாற்றங்கள் கூட ஏற்படலாம். ஆயினும் பெரியளவு பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்பது உண்மைதான். அப்படியானால் பெற்றோர் என்ன தெரிவுகளைச் செய்யலாம் ?

ஒரு நாசித்துவாரம் ஊடாகக் காற்றை உள்ளிழுத்து, நுரையீரலை நன்கு நிரப்பி, மிக மெதுவாக மறு நாசித்துவாரம் ஊடாக வெளிவிடக் கற்றுத் தரலாம் .பிராணாயாமப் பயிற்சி இவ்வாறுதான் எமது கலாசாரத் தில் பரம்பரை பரம்பரையாகச் செய்யப்பட்டு வருகிறது. இன்னொரு முறையிலும் ஆழ்ந்த சுவாசம் மேற் கொள்ளக் கற்றுத்தரலாம்.கையை வயிற்றுத் தசையில் வைத்துக்கொண்டு, காற்றை ஆறுதலாக நன்கு உள் எடுத்து, வயிற்றுத் தசையின் அசைவை உணர்ந்தபடி, சொண்டைக் குவித்து ஊதுவது போன்ற நிலையில் காற்றை ஆறுதலாக வெளிவிடலாம். இவற்றை ஏழு அல்லது ஒன்பது முறை காலை, மாலை வேளையில் சாப்பிட முன் செய்துவர வழிப்படுத்தலாம். குணங் குறிகள் வருகின்ற வேளைகளிலும் செய்யலாம்.

ஆறுதலாக வேகம் குறைவாக ஒலிக்கின்ற சங்கீதப் பாடல்களை நிறையவே கேட்க வைக்கலாம். அல்லது பாட வைக்கலாம்.

நல்ல நூல்களை வாசிப்பதும் எழுதுவதும், நடப்பதும் எப்போதுமே உதவும். குறிப்பிட்ட ஒரு இடத்திற்குச் சென்று திரும்பும்போது எத்தனை அடி வைத்து நடந்தார் என்பதை எண்ணி நடக்க வைக்கலாம். காலை, மாலையில் ஒழுங்கான சில உடற்பயிற்சிகளை அல்லது யோகப் பயிற்சிகளைச் செய்வதும் நல்லது. .செய்யத் தொடங்கும் விடயங்களை ஒழுங்காகச் செய்து வருவது முக்கியம்.

கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களை அடிக்கடி நினைத்துக் கவலைப்படுவதையும் பதற்றப் படுவதையும் விடுத்து, எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறதோ என்ற பயத்திலிருந்தும் விடுபட்டு அந்தக் கணத்தில் வாழப் பிள்ளையை வழிப்படுத்தவேண்டும். குணங்குறிகள் பாடசாலையில்தான் அதிகம் வருகிற தாயின், ஆசிரியர்களும் சரியான தெரிவுகளை நடை முறைப்படுத்த வேண்டும். பெற்றோர் ஆசிரியர் உறவு சுமுகமானதாக அமைய வேண்டும்.

இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு இந்தப் பிள்ளை, ஏராளமான சக்தியைச் செலவிடுகிறது என்பது அநேகமாக யாருக்கும் புரிவதில்லை. இப்பிரச்சினையை நிறுத்தும் ஆளி ஒன்று இல்லை. இருக்குமாயின் அதை நிறுத்திவிடவே யாரும் விரும்புவர்.

"அச்சம் உடையோர்க்கு அரணில்லை". எங்களை நாங்கள் காதலிக்கத் தொடங்குவோம்.

(தொடருவோம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆருக்குச் சேட்டை விடப் பாக்கினம்

ஊரின் மத்தியிலுள்ள வாசிகசாலைக்கு காலையில் சேவையின் அடிப்படையில் மூன்று பத்திரிகைகள் எடுத்துக்கொண்டு வந்து போடுவது சுமார் எழுபது வருஷங்களாக நடைபெற்றுக்கொண்டு வந்தது. இப்போது அதற்குப் பொருத்தமான ஆட்களுக்குத் தட்டுப்பாடு. அநேகம்பேர் வெளிநாடு போய்விட்டார்கள். மீதியுள்ளோருக்கு உத்தியோகக் கடமைகள். பழையவர்களுக்கு இயலாமை.

முருகேசண்ணைக்கு என்னைப்போல இயல்பாகவே கொஞ்சம் புத்திக் குறைவு. இதுவரை உருப்படியாக ஒரு தொழிலுமில்லை. ஆனால் நாற்பத்தெட்டு வயதாகியும் இப்பவும் கல்யாண ஆசை இருக்கு.

ஒரு நாளைக்கு நூறு ருபா வீதம் மாதம் மூவாயிரம் பேசி முருகேசண்ணையை ஏற்பாடு செய்து விட்டோம். அதன் பின்னர் மூன்று பத்திரிகைகளும் ஒழுங்காக வாசிகசாலைக்கு வந்து கொண்டிருந்தன.

இடையிடையே பத்திரிகைகளின் சில பக்கங்கள் (வாராந்த தேசியப் பத்திரிகைகள் என்றால் நடுப்பக்கம்) காணாமற் போவது நடைபெறும்.

இப்போது கொஞ்சக்காலமாக ஓரிரு பத்திரிகைகள் முழுமையாகக் காணாமற்போகத் தொடங்கிவிட்டன. வழிப்போக்கர்களும் இருந்து பத்திரிகைகள் பார்ப்பதால் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

கடந்த ஐந்து நாட்களாக வாசிகசாலையில் ஒரு பத்திரிகைகளும் வந்ததாக இல்லை. முருகேசண்ணைக்கு ஏதும் சுகமில்லையோ தெரியவில்லை என்று யோசித்தேன். அவருடைய வீட்டை விடவும் சந்தியிலிருக்கும் பத்திரிகைக் கடை எனக்கு கிட்ட. இன்றைக்கு எல்லாப் பத்திரிகைகளையும் சேர்த்து எடுத்துப் போடுவம் என்ற எண்ணத்தில் கடைக்குப் போனால் ஒரு நாளும் தவறாமல் கிரமமாக முருகேசண்ணை பத்திரிகைகளை எடுத்துச் சென்றதாக தெரியவந்தது.

ஆச்சரியத்துடன் முருகேசண்ணையைத் தேடிச் சென்றேன். தனது தமக்கையாருடன் முருகேசண்ணை வசிக்கிறார். வெளியில் நின்று கூப்பிட்டு விசாரித்தேன் முருகேசண்ணை சொன்னார்

“தம்பி ... நெடுகலும் பேப்பரைக் களவெடுத்துக்கொண்டு போறாங்கள். இதை இனியும் பார்த்துக்கொண்டு இருக்கேலுமே. இப்ப நான் ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொண்டு வந்து உடனேயே பழைய பேப்பர் போடுகிற யன்னலுக்காலை அறைக்குள்ள போட்டு விடுறனான். இனி எப்படிக் களவெடுப்பினம்.



“தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட “தாயகம்“ ஆசிரியர் தலையங்கங்கள் 1974-1999“ நூல் வெளியீடு 27.11.2024 அன்று கே.எஸ்.சுப்பிரமணியம் அவர்களின் 35 ஆவது நினைவு தினத்தில் கே.எஸ்.சுப்பிரமணியம் நூலகத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.



சங்கரி சிவகணேசனின் “அலையோடு நீராடு“ கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா புத்தூர் சோமாஸ் கந்த கல்லூரியில் 23.11.2024 அன்று நடைபெற்றது. அறிமுகவுரையை திருமதி ந. செல்வஅம்பிகையும் வெளியீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா அவர்களும் நயப்புரையை திரு இ.இராஜேஸ்கண்ணன் அவர்களும் நிகழ்த்தினார்கள்.

**ஜீவநதியின் 250 ஆவது இதழ் “ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் சிறுகதைச் சிறப்பிதழாக” வெளிவரவுள்ளது. (பெண்கள் பிரச்சினைகளை முன்வைத்த கருப்பொருட்களை உள்ளடக்கிய கதைகள்) அதன் விலை 1000.00. தேவைப்படுவோர் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுங்கள்.**

**பலருடைய சந்தா மார்கழி 2024 இதழுடன் முடிவடைகின்றது. அதனைப் புதுப்பித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.ந.கிரிதரன்

# குடிவரவாளன்



அத்தியாயம் இருபத்தியாறு:

நடுவழியில்...

ஸ்பானிஷ்கார முகவனான பப்லோவுடனான அனுபவத்தின் பின்னர் இளங்கோ முகவர்களின் மூலம் வேலை தேடும் படலத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தான். நேரடியாகவே நகரில் அலைந்து திரிந்து வேலை தேடும் படலத்தை ஆரம்பித்தான். சட்டவிரோதக் குடிகள் மில்லியன் கணக்கில் வசிக்குமொரு மாநகரில் தனக்கேன் வேலையொன்றை எடுப்பது சிரமமாகவிருக்கிறதென்று எண்ணியெண்ணி மனம் சலித்தான். இருந்தாலும் சோர்ந்து விடாமல் முயன்று கொண்டிருந்தான். இத்தகையதொரு சந்தர்ப்பத்தில்தான் அவன் ஜெயரட்ணத்தை மான்ஹட்டன் நகரத்துத் தெருக்களிலொன்றில் தற்செயலாகச் சந்தித்தான். ஈழத்தின் வன்னி மாவட்டத்தின் முக்கிய நகர்களிலொன்றான வவுனியாவைச் சேர்ந்தவனவன். நாற்பத்தியாறாவது தெருவிலுள்ள இத்தாலியனின் உணவகமொன்றில் பகல் நேரத்தில் உணவக உதவியாளனாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். இளங்கோ அன்றாட வாழ்வுக்கே திண்டாடுவதைப் பார்த்த அவன் இளங்கோவுக்குப் பின்வருமாறு புத்திமதியொன்றைக் கூறினான்: "இளங்கோ உனக்கு விருப்பமென்றால், பகல் நேரத்தில் ஓரிரு மணித்தியாலங்கள் செய்யக் கூடியதொரு சிறு வேலையொன்றுள்ளது, அதனை உனக்கு எடுத்துத் தரலாம். ஆனால் உன்னால் அதனைச் செய்ய முடியுமோ தெரியாது.." இவ்விதம் ஜெயரட்ணம் இழுக்கவே இளங்கோ "பரவாயில்லை ஜெயம். சொல்லு. முடிந்தால் செய்யிறேன். பார்ப்பம்" என்றான்.

அதற்கு ஜெயரட்ணம் "வேலையொன்றும் பெரிதாகக் கஷ்டமான வேலையில்லை. மத்தியான நேரத்தில் பதினொரு மணியிலிருந்து இரண்டு மணிவரையிலை எங்கட ரெஸ்ட்ரோரன்றிற்கு வருகிற ஓர்டர்களுக்குரிய சாப்பாட்டைக் கொண்டு சென்று குடுப்பதுதான். "டெலிவரி" வேலை. சில நேரத்திலை கிட்டடியிலையும் இருக்கும். சில நேரத்திலை ஹை ரைஸ் பில்டிங்கிலை ஐம்பது அறுபது புளோரென்று ஏறி இறங்கவேண்டியும் வரும். பெரிதாகச் சம்பளமெதுவும் தரமாட்டான்கள். மினிமத்திற்கும் குறைச்சுத்தான் தருவான்கள். ஆனா சாப்பாட்டை ஓடர் பண்ணுறவங்கள் நல்லா டிப்ஸ் தருவாங்கள். அதெல்லாம் உனக்குத்தான். மற்றது..."

"மற்றது.. என்ன" என்றான் இளங்கோ.

அதற்கு ஜெயரட்ணம் தொடர்ந்து விளக்கமளித்தான்: "மத்தியானச் சாப்பாடும் தருவாங்கள். எங்கடை ரெஸ்டாரண்டிலிருந்து என்னத்தை வேண்டுமென்றாலும் எடுத்துத் தின்னலாம். அந்த விதத்திலை பார்க்கேக்கை பரவாயில்லையென்று சொல்லலாம். இன்னொரு நல்ல வேலை கிடைக்கிற வரையிலை கொஞ்ச நேரம் செய்யிறதாலை உனக்குத்தான் நல்லது. நல்லா யோசித்துச் சொல்லு. இன்றைக்கு முழுக்க நல்லா யோசி. விருப்பமென்றால் நாளைக்கே எங்கட ரெஸ்டாரண்டிற்கு பத்து மணி போலை வா. முதலாளிக்கு உன்னை அறிமுகம் செய்து வைக்கிறன்."

இதற்கு அடுத்த நாள் மறுமொழி கூறுவதாகக் கூறிவிட்டு இளங்கோ ஜெயரட்ணத்திடமிருந்து விடைபெற்றான். அன்று தன்னிருப்பிடம் திரும்பும்போது பாதாள இரயிலில் அதுபற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஒரு விதத்தில் ஜெயரட்ணம் கூறுவதும் சரியாகவே பட்டது. பகற்பொழுதில் மூன்று மணித்தியாலங்கள்தான் வேலை. மணிக்கு மூன்று டாலர்கள் தருவார்கள். ஐந்து நாட்கள் வேலை செய்தால் நாற்பத்தியைந்து டாலர்கள் சம்பளமாகக் கிடைக்கும். அது அறை வாடகைக்கும், ஒரு போத்தலுக்கும் போதும். மூன்று மணித்தியாலத்திலும் பத்திலிருந்து இருபது டாலர்கள் வரையில் டிப்ஸ் கிடைக்குமென்று ஜெயம் கூறியிருந்தான். அந்த வழியில் பதினைந்து டாலர்களென்று பார்த்தாலும் வாரத்திற்கு எழுபத்தைந்து டாலர்கள் வரையில் வரும். எழுபத்தைந்தும் நாற்பத்தைந்தும் நூற்றியிருபது டாலர்கள் வரையில் வருமானம் வரும். அதே சமயம் மத்தியானச் சாப்பாடு இலவசமாக் கிடைக்கும். அதற்குரிய செல்வாகப் பத்து டாலர்களைப் போடலம். அந்த வகையில் வாரத்திற்கு ஐம்பது டாலர்கள் வரையில் வரும். ஆக மொத்தம் வாரம் நூற்றியெழுபது டாலர்கள் வரையில் வருமொரு தொழிலாக அதனைக் கருதலாம். அதுவும் மூன்றே மூன்று மணித்தியாலங்கள்தான் வேலை. செய்து பார்ப்பதில் தவறெதுவுமில்லை. கிழமைக்கு ஐம்பது டாலர்களையாவது சேமிக்க வேண்டும். அவ்விதம் சேமித்தால் ஒரு மாதத்திலை இருநூறு டாலர்கள் வரையில் சேமிக்கலாம். ஆறு மாதங்கள் இவ்விதம் செய்தாலும் குறைந்தது ஆயிரத்தி இருநூறு டாலர்கள் வரையிலாவது சேர்க்கலாம். குறைந்தது கையில ஆயிரம் டாலர்கள் சேரும் வரையிலாவது இவ்விதம் வேலை செய்து பார்ப்பதில் தவறெதுவுமில்லை. இன்னுமொரு நியூயார்க் மாநகரத்து அனுபவமாக இதுவும் இருந்து விட்டுப் போகட்டும். இதற்குப் பிறகு கோஷிடமும் அவனுடைய தொழிற்சாலையிலேதாவது வேலை கிடைக்குமாவென்று முயன்று பார்க்க வேண்டும். அதுவே அவன் நியுயார்க் மாநகரத்தில் இவ்விதமாகச் சட்டவிரோதமாகச் செய்யும் இறுதி வேலையாகவிருக்க வேண்டும். அதுவும் பிழைத்தால் இந்த நகருக்குப் பிரியாவிடை கூறிவிட வேண்டியதுதான். எந்த நாட்டுக்குப் போகவென்று ஆரம்பத்தில் பயணத்தைத் தொடங்கினானோ அந்த நாட்டுக்குக், கனடாவுக்குச் சென்று விட வேண்டியதுதான். உலகத்தின் சொர்க்கபுரியான அமெரிக்காவின் பிரதான நகரான நியுயார்க் மாநகரில் இதுவரையில் உணவகத்தில் "கிட்டார்" அடித்துப் பார்த்தாகி விட்டது. மழைக்குக் குடை பிசினஸ் செய்து பார்த்தாயிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபாதை வியாபாரமும் செய்தாயிற்று போதாதற்கு விளம்பரங்களும் விநியோகித்துப் பார்த்தாயிற்று. இனி மத்தியான உணவினை விநியோகித்துப் பார்ப்போம் அதுவும் சரியில்லாவிட்டால் கொஷின் தொழிற்சாலையிலும் ஏதாவது வேலை கிடைக்கிறதாவென்று பார்ப்போம். ஒரு சமயம் அனிஸ்மானிடம் தொடுப்பதாகக் கையெழுத்திட்டுக் கொடுத்துள்ள அமெரிக்க அரசுக்கெதிரான மானநஷ்ட வழக்கில் அதிருஷ்ட்டமடித்தால் இங்கேயே இருந்து விட வேண்டியது தான். இவ்விதமாகச் சிந்தனை பல்வேறு வழிகளிலும் கிளைவிட்டோடும் நதியாகவோடியது. இளங்கோ பெரிதும் சிந்தனைவயப்பட்டிருந்தான்.

அன்று அவன் நகர் முழுவதும் அலைந்து அறைக்குத் திரும்பும்பொழுது இரவு மணி பத்தைத் தாண்டி விட்டது. பாதாள இரயிலில் சிந்தனையில் மூழ்கிக் கிடந்தவனை ஒரு குரல் நனவுலகுக்கு மீட்டு வந்தது.

"உனக்கு ஆட்சேபனையேதுமில்லையென்றால் உன்னுடன் கொஞ்சம் கதைக்கலாமா?"

அவனது இருக்கைக்கெதிரிலிருந்த பெண்ணொருத்தியின் குரல்தானது. பார்ப்பதற்கு "பாப்" பாட்டுக்காரி "சிந்தி லோப்பர்" அவளது புகழ்பெற்ற பாடலான "Time After Time" இல் வருவதைப் போல் பல்வேறு வர்ணங்களிலான ஆடைகளுடனும், கூந்தலுடனுமிருந்தாள். அவனது அமெரிக்கத் தடுப்பு முகாம் வாழ்க்கையில் அறிமுகமான பாப் பாடகி சிந்தி லோப்பர். அவளது "நேரத்திற்கு நேரம்" என்ற மேற்படி பாடலை அவன் இரசித்துக் கேட்பதுண்டு பார்ப்பதுண்டு. அவளது உணர்ச்சி பூர்வமான குரலில் அந்தப் பாடலைக் கேட்பது அவனுக்குப் பிடிக்கும்..நள்ளிரவில் படுக்கையில் படுத்திருந்தபடி, கடிகாரத்தின் "டிக்" "டிக்" ஒலியினைக் கேட்டபடி பிரிந்த காதலனைப் பற்றிய நினைவுகளில், நினைவுகளுடன் மல்லாடியபடி பாடும் பாடல் சிந்தி லோப்பரின் அற்புதமான குரலிலும், நடிப்பிலும் சிறந்து விளங்கும். எண்பதுகளில் ஒரு கலக்குக் கலக்கிய பாடலது.

If youre lost you can look and you will find me
Time after time.
If you fall I will catch you Ill be waiting
Time after time.

After my picture fades and darkness has
Turned to gray
Watching through windows youre wondering
If Im ok
Secrets stolen from deep inside
The drum beats out of time

என்று அவள் பாடும்பொழுது உணர்வு பூர்வமாக உருகியுருகிப் பாடுவாள். அவனுக்குப் பிடித்த வரிகள். பார்வைக்கு சிந்தி லோப்பரைப் போலவேயிருந்த அந்த வெள்ளைக்காரப் பெண் தன்னுடன் எதைப் பற்றிக் கதைக்கப் போகின்றாளோவென்று வியந்தபடி, தனது சிந்தனையைக் கலைத்த அவளையே நோக்கினான் இளங்கோ. அத்துடன் "எனக்கேதும் ஆட்சேபனையில்லை. தாராளமாகவே நீ கதைக்கலாம்" என்றும் கூறினான்.

"நானும் அப்பொழுதிருந்து பார்த்துக் கொண்டே வருகிறேன். அப்படியென்ன பலமான ஆழ்ந்த யோசனை?" என்றாள்.

அதற்கவன் "சிந்திப்பதென் பொழுது போக்குகளிலொன்று. சிந்திக்கும்பொழுது நான் என்னையே மறந்து விடுவதுண்டு." என்றான்.

அதற்கவள் தன் அகன்ற விழிகளை மேலும் விரித்தபடி "சிந்திப்பதுன் பொழுது போக்கா? ஆச்சரியமாகவிருக்கிறதே! எத்தனையோ பொழுதுபோக்குகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். இந்தவிதமான பொழுதுபோக்கு பற்றி இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன்" என்றுவியந்தாள்.

அதை விட்டால் ஒவ்வொரு கணமும் இருப்புக்காகப் போராடுமவன் வாழ்க்கையில் வேறென்ன பொழுது போக்கிருக்க முடியும்? கனவுகள், கற்பனைகள், திட்டங்களெனச் சிந்திப்பதையும், இழந்தவற்றை இரை மீட்டு மகிழ்வதையும் விட்டால் வேறென்ன பெரிய பொழுது போக்கிருக்க முடியும்? செலவில்லாத பொழுது போக்குகளிலொன்று இவ்விதம் சிந்திப்பது. அவனது தற்போதைய பொருளியல் நிலைக்கேற்ற நல்லதொரு பொழுதுபோக்கு.

அவன்: "செலவில்லாத பொழுது போக்கு இதுபோல் வேறென்னவிருக்க முடியும்?"

அவள்: "ஒரு விதத்தில் நீ கூறுவதும் சரிதான்"

அவன்: "ஒன்று சொல்வேன் தவறாக நினைத்துக் கொள்ளமாட்டாயே?"

அவள்: "நிச்சயமாக நினைக்க மாட்டேன். நீ தாராளமாகக் கூறலாம்."

அவன்: "இரவின் மடியில் இழந்த நாட்களின் நினைவுகளை இரை மீட்டபடி சிந்தி லோப்பர் பாடும் "நேரத்துக்கு நேரம்" பாடல்கேட்டிருக்கிறாயா?"

அவள்: (ஆச்சரியத்துடன்)"உனக்கு அவளைத் தெரியுமா? சிந்தி எனக்கு மிகவும் பிடித்த பாடகி. அவளது இந்தப் பாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். உனக்கும் பிடிக்குமா?"

அவன்: "எனக்கும் கேட்பதற்குப் பிடித்த பாடல்களிலொன்று இந்தப் பாடல். நான் சொல்ல வந்தது..."

அவள்: "ஆம். ஆம். நீ ஏதோ சொல்ல வந்தாய். இடையில் குறுக்கிட்டு விட்டேன். அப்படியென்ன சொல்ல வந்தாய்?"

அவன்: "உன்னைப் பார்த்தால் அந்தப் பாடகியைப் போலவே தோற்றத்திலிருக்கிறாய். அவளைப் போலவே கூந்தலை பல்வர்ணங்களில் அலங்கரித்திருக்கிறாய். ஆடைகளையும்தான். குறிப்பாக உன் அகன்ற கண்களும், வட்ட முகமும், சிரிப்பும் கூட அவளையே எனக்கு ஞாபகப் படுத்துகிறது"

அதைக் கேட்டதும் அவள் பலமாகச் சிரித்தாள். அத்துடன் கூறினாள்: "இதையா கூற வந்தாய்? உனது பாராட்டுதல்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. என் சிநேகிதிகள் கூட அவ்விதம்தான் கூறுவார்கள். பல சமயங்களில் நானும் அவளைப் போலவே ஆடைகள் அணிந்து கொள்வதும், தலையலங்காரம் செய்து கொள்வதும் வழக்கம். உண்மையில் நீ இவ்விதம் கூறுவது எனக்கு மகிழ்ச்சியைத்தான் தருகிறது. என் அபிமானப் பாடகிகளொருத்திபோல் நானிருக்கிறேனென்று நீ கூறுகிறாய். எவ்வளவு பெருமையாகவிருக்கிறது தெரியுமா? நன்றி. நன்றி. மிகவும் பற்பல நன்றி.."

இவ்விதமாக அவர்களது உரையாடல் பல்வேறு விடயங்களைத் தொட்டுத் தொடர்ந்தது.

"உன்னுடன் இதுவரையில் இவ்விதம் கதைத்துக் கொண்டு வந்தது மகிழ்சியாகவிருந்தது. இந்த இரவினை ஒருபோதுமே மறக்க மாட்டேன். உனக்கு விருப்பமென்றால் இந்த இரவினை உன்னுடன் கழிப்பதில்கூட எனக்கு ஆட்சேபனையேதுமில்லை. எங்காவது உணவகத்துக்கோ அல்லது கிளப்புக்கோ செல்லலாம். என்ன சொல்லுகிறாய்?"

அவனுக்கு அவளது வெளிப்படையான பேச்சு வியப்பினைத் தந்தது. அவளது வெளிப்படையான பேச்சும், நடத்தையும் அவளது நல்லுள்ளத்தை வெளிப்படுத்தின.

அத்துடன் அவன் கூறினான்: "உன் அழைப்புக்கு நன்றி. ஆனால் தற்போது நான் முக்கியமானதொரு விடயமாக ஒருவரை சந்திக்க வேண்டியிருக்கிறது. மன்னித்துக் கொள். நடுவழியில் என் பிரயாணத்தை உன் சந்திப்பு மூலம் சிறப்பித்ததற்கு என் நன்றி பல. இந்த இரவையும், உன்னுடனான இந்தச் சந்திப்பையும் ஒருபோதும் மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டேன். சிந்தி லோப்பரின் பாடலைக் கேட்கும் ஒவ்வொரு சமயமும் நீயும் என் நினைவுக்கு வருவாய்" என்றான். மூஞ்சூறு தான் போக வழியைக் காணவில்லை. விளக்குமாறைத் தூக்கச் சொல்கிறாள். ஒருவேளை சாப்பாட்டுக்கே "ததிங்கிணதோம்" போடவேண்டிய நிலையில் கிளப்புக்கு அழைக்கிறாள்?

அவள் இறங்குவதற்கான தரிப்பிடம் வந்ததும் சிறிது வாடிய வதனத்துடன் சிறிய காகிதத்துண்டொன்றில் தனது தொலைபேசி இலக்கத்தையெழுதி அவனிடம் தந்தபடி "எப்பொழுதுதாவது நீ என்னச் சந்திக்க விரும்பினால் இந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு அழை. நல்லதொரு சந்திப் பினைத் தந்ததற்காக இந்த இரவுக்கு நன்றி.. இந்தப் பயணத்தில் நல்லதொரு துணையாகவிருந்ததற்கு உனக்கும் நன்றி" என்றவள் சிந்தி லோப்பரின் Time After Time பாடலில் வரும் 'If youre lost you can look and you will find me Time after time; If you fall I will catch you Ill be waiting Time after time" என்ற வரிகளைப் பாடி அவனை நோக்கிக் கண்களைச் சிமிட்டியபடி விடைபெற்றாள்.

அவனது தனித்த பயணம் அந்த நள்ளிரவில் தொடர்ந்தது.

## அத்தியாயம் இருபத்தேழு:
## இன்று புதிதாய்ப் பிறந்தேன்!

*1.*

நாளை மறுநாள் அவன் அமெரிக்க மண்ணில் காலடி வைத்துச் சரியாக ஒருவருடமாகப் போகின்றது. இளங்கோவுக் குக் காலத்தின் கடுகதிப் பயணம் ஆச்சரியத்தைத் தந்தது. பால்யகாலத்தில் காலம் ஆறுதலாக விரைந்ததுபோல் இப் பொழுது நினைத்துப் பார்க்கும் போதிருக்கிறது. எந்தவித வாழ்க்கைப் போராட்டங்களையும் சுமக்க வேண்டிய பொறுப்புகளின்றி, சுதந்திரச் சிட்டுக்களாகப் பெற்றோரின் அரவணைப்பில் பொழுது எவ்வளவு ஆறுதலாக, இனிமை யாகக் கழிந்தது? இரவுகளில் கொட்டிக் கிடக்கும் சுடர்களை, மின்மினிகளை, முழுநிலவை, பெருவிழி ஆந்தைகளை, நத்துக் களை, அணில்களை, விண்ணில் கோடிழுக்கும் நீர்க்காகங் களை, குக்குறுப்பான், கொண்டைக் குருவி, மாம்பழத்திக் குருவி, ஆலா, ஆட்காட்டி, ஊருலாத்தி, கிளி, மைனா, மணிப்புறாவெனப் புள்ளினங்களையெல்லாம் இரசிப்பதற்கு நிறையவே பொழுதுகளிருந்தன. ஆனால் இன்று... இருத்தற் போராட்டத்தின் சுமைகளையெல்லாம் தாங்கவேண்டிய சூழலில், இரசிப்பதற்குக் கூடப் பொழுதுகளில்லை? அவ்வளவு விரைவாக அவற்றின் பயணம்! இருந்தாலும் இவ்வளவு இடர்களுக்கிடையிலும் ஒரு சில நூல்களையாவது படிப்ப தற்கு அவனால் முடிந்தது. சிந்திப்பதற்கு முடிந்தது. இந்த ஒரு வருடத்தில் அவன் வாழ்வு ஏதாவது பயன்களைப் பெற்றிருக் கிறதா? பொருளியல்ரீதியில் பலவகை அனுபவங்களைத்தவிர எந்தவிதக் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுமில்லை. ஆனால் ஒன்று... இந்த அனுபவங்கள் மிகுந்த பயனுள்ளவை. இருப்பின் பல்முனைத் தாக்குதல்களையும் உறுதியுடன் உள்வாங்கி, நம்பிக்கையுடன் எதிர்த்து நடை பயிலும் பண்பினை அவனுக்கு அளித்துள்ளவை இந்த அனுபவங்கள்தான். "அச்சமில்லை, அமுங்கதலில்லை. நடுங்குதலில்லை நாணுத லில்லை. பாவமில்லை, பதுங்குதலில்லை. ஏது நேரிடினு மிடர்ப்பட மாட்டோம். கடல்பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம். யார்க்கு மஞ்சோம். எதற்கு மஞ்சோம். .எங்கு மஞ்சோம். எப்பொழுது மஞ்சோம். வான் முண்டு. மாரி யுண்டு. ஞாயிறுங் காற்றும் நல்ல நீரும், தீயு மண்ணும், திங்களு மீன்களும் உடலுமறிவு முயிரு முளவே" என்னும் உறுதியான மனப்பாங்கினை அவை அவனுக்களித்துள்ளன.

வவுனியா நண்பன் ஜெயரட்ணத்தின் உணவகத்திலும் சிறிது காலம் நண்பகற் பொழுதில் உணவு விநியோகிக்கும் பணியாளாகப் பணி புரிந்து பார்த்து விட்டான். அதற்குப் பின் சிறிது காலம் வங்க நண்பன் கோஷின் தொழிற்சாலையிலும் தொழிலாளியாக வேலை பார்த்தான். அதுவும் ஓரிரு மாதங்களே நீடித்தது. அதன் பின் வழக்கம்போல் மீண்டும் இருப்புடனான போராட்டம் தொடங்கி விட்டது. ஏற்கனவே முடிவு செய்திருந்ததன்படி மேலும் இந்த மண்ணில் தொடர்ந் திருப்பதை நினைத்துப் பார்க்கவே அவனால் முடியாததாக விருந்தது. எந்தவிதச் சட்டபூர்வமான ஆவணங்களுமின்றி , பொருளியல்ரீதியில் ஒருவித உறுதியான நிலையினை அடைந்து, ஆழமாக வேரூன்றுவதற்கு முடியாமலிருந்தது. இந்த நிலையில் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். நாளை மறுநாள் இந்த மண்ணில் காலடிவைத்துச் சரியாக ஒருவருட மாகிறது. அடுத்த வருடத்தின் முதல் நாளன்று அவனால் இந்த மண்ணில் ஒரு கணம்கூட இருக்க முடியாது. நாளை மறு நாளிரவு அவனது வாழ்வின் அடுத்த கட்டம் ஆரம்பமாக வேண்டும். மீண்டும் முதலிலிருந்து, அடிமட்டத்திலிருந்து, நம்பிக்கைகளுடன், கனவுகளுடன், எதிர்பார்ப்புகளுடன், உற்சாகத்துடன் அவனது இருத்தலுக்கான பயணம் தொடங்க வேண்டும். இதற்கு ஒரே வழி.. எந்த மண்ணை நோக்கிக் கடந்த ஆவணி மாதத்தில், ஈழத்தில் வெடித்த இனக்கலவரத்தைத் தொடர்ந்து அவன் புறப்பட்டானோ, எந்த மண்ணை நோக்கிய அவனது பயணம் இடையில் இந்த மண்ணில் தடைபட்டதோ, அந்த மண்ணை நோக்கி, கனடாவை நோக்கி, அவனது பயணம் மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டும். கையிலுள்ள இருநூறு டாலர்களுடன், அவன் மீண்டும் தன் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இவ்விதமாக இறுதித் தீர்மானமெடுத்தவுடன் அன்றிரவு அவன் தன் அறை நண்பர் களுக்குத் தன் எதிர்காலத்திட்டங்களை எடுத்துரைத்துப் பிரிவதற்கு முன்னர் அவர்களுடன் இறுதிப் பொழுதினை மகிழ்ச்சியுடன் கழிக்க வேண்டுமென்றும் எண்ணிக் கொண்டான். இவ்விதமாக உறுதியானதொரு முடிவினைத் தன் எதிர்காலம் பற்றியெடுத்ததும், அவனது நெஞ்சின் பாரம் சிறிதளவு குறைந்தது. அந்தவிடத்தை களியுடன் கூடியதொரு உற்சாகம் கலந்த உணர்வுகள் ஆக்கிரமித்துக் கொண்டன. அன்றிரவு அறை நண்பர்களுடன் ஆனந்தமாகக் கூடிக் கதைத்தான்.

அவனது முடிவுக்கு கோஷ் ஆதரவளிக்கவில்லை. அவனது நிலைப்பாடு இளங்கோ இன்னும் சிறிது காலமாவது இருந்து முயன்று பார்க்கலாமென்பதாகவிருந்தது. ஆனால் அருள்ராசா அவ்விதமே சிறிது காலம் மேலுமிருந்து முயன்று பார்ப்பதற்கு முடிவு செய்திருந்தாலும், இளங்கோவின் திட்டங் களுக்குத் தடைபோட அவன் விரும்பவில்லை. இவ்விதமாக அவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபொழுது கோஷ் இவ்வித மொரு கேள்வியினைத் தொடுத்தான்:

"உங்களுக்கு இழைத்த மனித உரிமை மீறல்களுக்காக உங்களது வழக்கறிஞரின் ஆலோசனையில் அமெரிக்க அரசுக் கெதிராக வழக்கு போட்டீர்களே? அதன் நிலை என்னவாச்சு?"

இதற்கு அருள்ராசாவே இடைமறித்துப் பதிலளித் தான்: "அண்மையில் எங்கள் சட்டத்தரணியைச் சந்தித்த பொழுது இதுபற்றி நாங்களும் அவரிடம் கேட்டிருந்தோம்?"

கோஷ்: "அதற்கவனென்ன சொன்னான்?"

அருள்ராசா: "அவனது பதில் புதிராகவிருந்தது. அவன் கூறினான் நாங்கள் அந்த வழக்கினைத் தொடர்ந்து நடத்தி னால் அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தினால் ஊரிலுள்ள எங்களது உறவினர்களுக்குப் பிரச்சினைகள் வருமாம்? அதனால் அவ்வழக்கை அப்படியே போட்டுவிடுவதே நல்ல தாம். எனக்கென்றால் அவனது கதை விளங்கவேயில்லை. அப்படியென்றால் எதற்காக அவனாகவே எங்களைத் தூண்டி அவ்விதமாக வழக்குப் போடும்படி செய்தான்?"

இதற்கு கோஷ் இவ்விதமானதொரு காரணத்தை முன்வைத்தான்: "எனக்கென்றால் இந்த விடயத்தில் அவனை நம்பமுடியாமலிருக்கிறது .... என்னைப் பொறுத்தவரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்ன நினைக்கிறேனென்றால்...."

இவ்விதம் கோஷ் இடை நிறுத்தவே இளங்கோவும் அந்த உரைடாடலில் கலந்து கொண்டான்: "கோஷ். உன்னைப் போல்தான் எனக்குமிந்த விடயத்திலொரு சந்தேகம். முதலில் உன்னுடையதைக் கூறு.".

கோஷ்: "நான் என்ன நினைக்கிறேனென்றால்... அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அவனுடன் சேர்ந்தொரு இணக்கத்துக்கு வந்திருக்கலாம். இந்த வழக்கை எடுக்காமல் அப்படியே விடுவதற்கு உங்களது வழக்கறிஞருக்கு அமெரிக்க அரசால் ஏதாவது கடுமையான அழுத்தம் கொடுக்கப்பட்டு, பணமேதாவது கைமாறியிருக்கலாம். யார் கண்டது? நீங்களோ சட்டவிரோதக் குடிகள். இந்த வழக்கை அவன் தொடர்ந்து நடத்தி, ஒரு சமயம் வெற்றியடைந்திருந்தால், உங்கள் நிலையிலுள்ள பலர் மேலும் இதுபோன்ற வழக்குகள் தொடர்வதற்கு அதுவொரு முன்மாதிரியாகவந்துவிடக்கூடிய சாத்தியமுமிருக்கிறது. அவ்விதமானதொரு சூழல் அமெரிக்க அரசுக்கு அரசியல்ரீதியிலும், பொருளியல் ரீதியிலும் பலத்த பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகளிருப்பதையும் மறுப்பதற்கில்லை. இவற்றைப் பார்த்தால் "மேசைக்கடியால்" பணம் கைமாறப்பட்டு முளையிலேயே இந்த வழக்கு கிள்ளியெறியப்பட்டுவிட்டதுபோல்தான் எனக்குத் தோன்றுகிறது."

அருள்ராசா: "என்னைப் பொறுத்தவரையில் நான் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவனாகவே ஆரம்பித்தான். அவனாகவே முடித்துக் கொண்டான்."

இளங்கோ: "என் நிலையும் அதுதான். நாங்கள் ஆரம்பிக்காதவொன்று. சமயம் வந்தால் ஒருகாலத்தில் உண்மையினை அறிய முயற்சிக்கலாம். அவ்வளவுதான்."

கோஷ்: "என்றாலும் உங்களது வழக்கறிஞன் சரியான கெட்டிக்காரன்தான். அவன் காரியம் முடிந்து விட்டது. பணம் அவனது கைக்கு வந்திருக்கும் பட்சத்தில் அவன் கவலை முடிந்தது."

அத்துடன் அவர்கள் அந்த விடயம் பற்றிய உரையாடலினை நிறுத்திவிட்டு வேறு விடயங்களில் கவனத்தைச் செலுத்தினார்கள். இந்தச் சமயத்தில் திருமதி பத்மா அஜீத் அவர்களது அறைக்கு அவ்வாரத்துக்குரிய வாடகைப் பணத்தை வாங்கும்பொருட்டு வந்தாள். வந்தவள் அவர்களது உரையாடலிலும் பங்கெடுத்துக் கொண்டாள். "என்ன பலமானதொரு விடயத்தைப் பற்றி உரையாடுவதைப் போலொரு தோற்றம் தெரிகிறதே.." என்றாள்.

அதற்கு கோஷ் "நீங்கள் கூறுவது சரிதான். உங்களுக்குத் தான் பெருத்த நட்டம்?" என்றான்.

அதற்கு திருமதி அஜீத் "என்ன எனக்குப் பெருத்த நட்டமா? என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒன்றுமே விளங்கவேயில்லையே?"என்றாள்.

அதற்கு கோஷ் "பின்னே! இளங்கோ மாதிரி நல்லவனொருவனை வாடகைக்கு இந்த மண்ணில் தேடிப்பிடிப்பதென்பது அவ்வளவு இலகுவான வேலையா என்ன." என்றான்.

அப்பொழுதுதான் திருமதி அஜீத்துக்கு விடயம் ஓரளவுக்கு விளங்கியது. அவள் இளங்கோ பக்கம் திரும்பியவளாக "என்ன இளங்கோ? கோஷ் சொல்லுவது உண்மையா? நீ இந்தவிடத்தை விட்டு வேறெங்காவது போகப் போகிறாயா? " என்றாள்.

இதற்கு அருள்ராசா பதிலளித்தான்: "அவன் இந்த இடத்தை விட்டுமல்ல, இந்த மண்ணையும் விட்டுப் போகப் போகின்றான்.

அதுபற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்."

திருமதி பத்மா அஹித் இளங்கோவைப் பார்த்து "எங்கு போவதாக உத்தேசம்?" என்றாள்.

இதற்கு இளங்கோ வழக்கம்போலவே அவளை "திருமதி பத்மா அஜித்" என்று விளித்துப் பின்வருமாறு தொடர்ந்தான்: இந்த மண்ணில் காலடியெடுத்து வைத்து ஒரு வருடமாகப் போகிறது. இதுவரையில் பொருளியல் ரீதியிலும் சரி, குடியுரிமை ரீதியிலும் சரி ஒருவித முன்னேற்றங்களுமில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் என்னால் இங்கிருக்க முடியாது. அதுதான் கனடா போவதாக முடிவு செய்திருக்கிறேன்."

திருமதி அஜித்: "அதுசரி. நீயோ சட்டவிரோதக் குடி. எந்தவிதச் சட்டரீதியான ஆவணங்களும் உன்னிடமில்லை. இந்த நிலையில் கனடாவுக்குள் எவ்விதம் நுழைவாய்? அங்கு இதைவிடப் பெரிதாகப் பிரச்சினைகளேதும் வந்துவிடாதா?"

கோஷ்: "அதைத்தான் நானும் சிந்திக்கிறேன். திருமதி பத்மா அஜித் கூறுவதிலும் நியாயமிருப்பதாகத்தான் படுகிறது. இளங்கோ இதுபற்றி இந்தக் கோணத்தில் நீ சிந்தித்துப் பார்த்திருக்கிறாயா?"

இளங்கோ: "நீங்கள் சொல்வதும் ஒருவிதத்தில் சரிதான். ஆனால் நானறிந்த வரையில் கனடா அகதிகள் விடயத்தில் மிகவும் நெகிழ்ச்சியான போக்குள்ள நாடு. இங்கிருந்து என்நாட்டைச் சேர்ந்த பலர் இதுவரையில் எல்லையைக் கடந்து சென்றிருக்கிறார்கள். பலருக்கு அந்நாட்டு நிரந்தரவசிப்பிட உரிமைகூட கிடைத்திருக்கிறது. அங்கு உள் நுழைந்து விட்டால் எல்லாமே நல்லதாக முடிந்து விடும்.

"ஆனால்..."

கோஷ்: "ஆனால்.. என்ன?"

இளங்கோ: "எல்லையைக் கடக்கும்போது கனடியக் குடிவரவு அதிகாரிகளின் கணினியில் என் பெயரைக் கொண்ட இன்னொருவரின் பெயரில் யாராவது பயங்கரக் குற்றங்கள் செய்திருக்கிற ஒருவரின், "இண்டர்போல்" போன்ற சர்வதேசப் பொலிசாரால் தேடப்படுகின்ற ஒருவரின் பெயர் இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அத்தகையதொரு சூழலில் நிலைமை மோசம்தான். உள்ளேயே வைத்துவிட்டாலும் வைத்து விடுவார்கள். ஆனால் அதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவே."

திருமதி பத்மா அஜித் (ஒருவிதப் பெருமூச்சுடன்): "இளங்கோ. எந்தவிதப் பிரச்சினைகளுமில்லாமல் நீ அங்கு போய்ச் சேர்ந்து நல்வாழ்க்கையொன்றை ஆரம்பித்து விட்டாயென்றால் எனக்கது போதும். போனால் எங்களை மறந்து விடாதே. அவ்வப்போது அழைத்து விசாரித்துக் கொள்."

அருள்ராசா: "இளங்கோ. நீ முதலிலை போ. உன்ர நிலையைப் பார்த்துப் பிறகு நான் வாறன்."

கோஷ்: "இளங்கோ. நீ போவதென்று முடிவு செய்துவிட்டாய். உன் எதிர்காலம் சிறப்பானதாக அமைய நல் வாழ்த்துக்கள். போவதென்றால் எப்பொழுது செல்வதாகத் திட்டம்?"

இளங்கோ: "நாளை இரவே செல்வதாகத் திட்டம்."

கோஷ்: "இளங்கோ. நீ ஒரு வித்தியாசமான பேர்வழி. முடிவு செய்து விட்டாயானால் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்க மாட்டாய். அப்படியா?"

இளங்கோ: "கோஷ். அப்படியில்லை. இந்த மண்ணில் ஒரு வருடம் வரையில்தான் தங்குவதென்பது ஆரம்பத்திலேயே நான் உறுதியாக முடிவு செய்திருந்த விடயம். இந்த ஒரு வருடம் முடியப் போகிறது. இந்த நிலையில் தொடர்ந்திருப்பது என்னைப் பொறுத்தவரையில் சிரமமானது."

இச்சமயம் திரு.அஜித்தும் வந்து அவர்களது கலந்துரையாடலில் கலந்து கொண்டார். அவரும் இளங்கோ கனடா செல்லவிருக்கிற விடயம் பற்றி அறிந்ததும் சிறிது கவலைப்பட்டார். அத்துடன் கூறினார்: "நண்பர்களே. இளங்கோவின் பிரியாவிடையினையிட்டு நாம் இன்றொரு சிறியதொரு விருந்து வைத்தாலென்ன?"

இச்சமயம் இடையில் புகுந்த திருமதி பத்மா அஜித் "இன்றைய சமையல் என்னுடையது. நல்லதொரு சிக்கன் பிரியாணி செய்யப் போகின்றேன். என்ன சொல்லுகிறீர்கள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் திருமதி பத்மா அஜித்தின் ஆலோசனைக்குச் சம்மதித்தார்கள். வளைக்கரத்தால் உணவுண்டு எத்தனை நாட்களாகி விட்டன? கசக்குமா அவர்களுக்கு.

2.

அன்றிரவு அறை நண்பர்களுடனும், அஜித் தம்பதியினருடனும் பொழுது கழிந்தது. திருமதி பத்மா அஜித்தின் கைவண்ணத்தை பிரியாணியின் சுவையில் காணக்கூடியதாக விருந்தது. அதன்பின்னர் அனைவரும் இளங்கோவின் எதிர்காலச் சிறப்பிற்காக வாழ்த்திவிட்டுப் படுக்கைக்குத் திரும்பினார்கள். சிறிது நேரம் இளங்கோவும், அருள்ராசாவும் வீட்டின் முற்புறத்தில் வந்தமர்ந்து கொண்டு உரையாடினார்கள். அறையினுள் தூக்கத்திலாழ்ந்து கிடந்தவர்களைத் தங்களது உரையாடல் குழப்பி விடக்கூடாதேயென்ற எண்ணத்தில் வெளியிலிருந்து உரையாடுவதே சரியாகப் பட்டது.

இளங்கோவின் உள்ளத்தில் உற்சாகம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. தற்போது அவன் வாழ்வில் நிலவும் சூழலுக்கொரு முடிவு வரப் போவதையிட்டுண்டான களிப்பு. மீண்டுமொருமுறை அவன் முதலிலிருந்து இருத்தலுக்கான போராட்டத்தை ஆரம்பிக்கப் போகின்றான். மீண்டும் முதலிலிருந்தது ஆரம்பிக்கப் போவதையிட்டு அவன் கவலைப் படவில்லை. வாழ்க்கையின் சவால்களை எப்பொழுதுமே உற்சாகத்துடன் எதிர்கொள்பவனவன். இந்த மண்ணில் எந்தவித முன்னேற்றங்களுமின்றி நிச்சயமற்றதொரு இருப்பில் தொங்குவதைவிட அது எவ்வளவோ மேல்.

அருள்ராசாவுக்கு இளங்கோ கனடா போவதையிட்டு ஒருவிதத்தில் சிறியதொரு கவலை. இனி அவன் தனித்துப் போகப்போகின்றானே. இது அவனது கவலைக்குக் காரணம். ஆயினும் இளங்கோ எடுத்த முடிவையிட்டு அவன் கவலைப் படவில்லை. முடிவுகளையெடுப்பதில் இளங்கோவுக்கிருக்கும் துணிச்சல் அவனுக்கில்லை. அவனது கடவுச்சீட்டு இன்னும் அமெரிக்கக் குடிவரவுத் திணைக்களத்திடம்தானிருக்கிறது. இந்நிலையில் நடந்த உண்மைகளைக் கூறித்தான் இளங்கோ கனடாவிற்குள் நுழையத் தீர்மானித்திருக்கிறான். அவ்விதம் நுழையும்போது "அமெரிக்காவில் ஏற்கனவே அகதிக்காக விண்ணப்பித்திருக்கிறாயே அதற்கான பதிலைப் பெற்றபின் வா"வென்றால், அங்கிருந்து மீண்டும் திருப்பியனுப்பினால் என்ன செய்வது? இளங்கோ இந்த விடயம் பற்றியும் சிந்தித்துப் பார்த்திருக்கின்றான். அதற்கும் அவனொரு காத்திரமான பதிலை வைத்திருக்கிறான். முதலாவது கடந்த ஒருவருடமாக இங்கு அவனுக்கு வேலை செய்வதற்குரிய எந்தவிதச் சட்டரீதியான ஆவணங்களுமில்லை. எந்தவித அரச உதவிகளுமில்லாமல், சட்டரீதியாக வேலை செய்து வயிற்றை நிரப்புவதற்கு முடியாமலிருக்கிறது. அடுத்தது வேலை வழங்கலுக்கான கடிதம் பெற்று சட்டத்தரணியூடு விண்ணப்பித்தும்கூட இதுவரையில் அதற்கான பதிலேதும் வரவில்லை. இதுவரையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஒருவாறு காலத்தைத் தள்ளியாகி விட்டது. இனியும் அவனால் இத்தகையதொரு நிலையினைத் தொடர்ந்தும் தாங்க முடியாது? இதுதான் அவனது பதில். இதனையும் மீறி அங்கிருந்து மீண்டும் திருப்பியனுப்பினால் வேறென்ன செய்வது? மீண்டும் இங்கு வந்து மட்டையடிக்க வேண்டியதுதான். வேறு வழியில்லை. ஆயினும் அதற்காக இவ்விதம் முயன்று பார்க்காமலிருக்க முடியாது.

அருள்ராசா கூறினான்: "இளங்கோ! உனக்கிருக்கிற துணிச்சல் எனக்கில்லை. நீ அங்கு போனதும் விரிவாக அங்குள்ள நிலைமையையெல்லாம் அறிவி. அதுக்குப் பிறகுதான் நான் முடிவு செய்ய வேண்டும்"

அதற்கு இளங்கோ "கட்டாயம் எல்லாவற்றையும் விசாரிச்சு, எனக்கு ஏற்படுகிற நிலைமைகளெல்லாவற்றையும் அறிவிக்கிறன். அதுக்குப் பிறகு ஆறுதலாக நீ வரலாம். அவசரமில்லை" என்றான்.

அதற்கு அருள்ராசா "எல்லாம் நல்லதுக்குத்தான். இங்கை மட்டும் "சோசல் கார்ட்"டெல்லாம் கிடைச்சிருக்குமென்றால் இங்கையே போவென்று கலைக்கும் மட்டும் இருந்திருக்கலாம். பார்ப்பம் எனக்காவது கெதியிலை கிடைக்குதாவென்று. அது மட்டும் கிடைச்சுட்டுதென்றால் நான் கடைசிவரை அகதிக்கோரிக்கைக்குப் பதில் கிடைக்கிறவரை இங்கேயே தங்கி விடுவன்." என்றான்.

இவ்விதமாக உரையாடிக் கொண்டிருந்துவிட்டு திரும்பினார்கள். அருள்ராசா சிறிது நேரத்திலேயே தூங்கி விட்டான். இளங்கோவுக்கோ வழக்கம்போல் இத்தகைய சந்தர்பங்களிலேற்படுவதுபோல் தூக்கம் வருவதற்குத் தயங்கியது. சிறிதுநேரம் தூங்குவதற்கு முயன்றான் முடியாமல் போகவே உணவறைக்கு வந்து சிறிது நேரம் பாரதியின் கவிதைகளைப் புரட்டினான். சிறிது நேரம் குறிப்பேட்டினில் பார்வையை ஓட்டினான். வழக்கம்போல் பாரதியின் கவிதைகளும், குறிப்பேடும் அவனது ஓரளவு சோர்ந்திருந்த உணர்வுகளைத் தட்டியெழுப்பின. "மண்ணில் தெரியுது வானம் அதுநம் கைவசப்படலாகாதோ? எண்ணி யெண்ணிப்பல நாளு முயன்றிங்கிறுதியிற் சோர்வோமோ?". குறிப்பேட்டினைத் திறந்தவன் அன்றைய இரவுப் பொழுதின் தன் உள்ளத்துணர்வுகளையதில் கொட்டத் தொடங்கினான்.

3...

இளங்கோவின் குறிப்பேட்டிலிருந்து...

"கடந்த ஒருவருடம்தான் எவ்வளவு விரைவாகக் கழிந்து விட்டது! இந்த மண் மீதிலான என்னனுபவங்கள் பல்வேறு உண்மைகளை எனக்குப் புரிய வைத்துள்ளன. உலகின் சொர்க்கபுரியாக விளங்கும் இந்த மண்ணின் மறுபக்கத்தை எனக்கு இந்த அனுபவங்களே உணர்த்தி வைத்தன. தனியுடமையின் கூடாரமாக விளங்குமிந்த மண்ணில் எத்தனை தனி மனிதர்கள் தடுப்பு முகாம்களுக்குள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். வறுமையின் பிடிக்குள் சிக்கி எத்தனை ஆயிரக்கணக்கில் மக்கள் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு புறம் வாழ்வதற்கு எவ்வளவோ வழி வகைகள். மறுபுறத்திலோ வாழுவதற்கான உரிமைகளே மறுக்கப்பட்ட நிலையில் மாயும் மக்கள் கூட்டம். மில்லியன் கணக்கில் இந்த மண்ணில் வாழும் சட்டவிரோதக் குடிகளின் உழைப்பில் சுகித்து வாழுவதற்கு யாருமே தயங்குவதில்லை. ஆனால் அதே சமயம் அவர்களுக்குரிய உரிமைகளைக் கொடுத்து அவர்களது கடின உழைப்புக்கு அங்கீகாரம் கொடுப்பதில் மட்டுமென்ன தயக்கம்? இவ்விதம் தயங்குபவர்கள் அவ்வளவு சட்டவிரோதக் குடிகளையும் ஒட்டு மொத்தமாக நாட்டை விட்டு அனுப்பி வைக்கலாமே? ஆனால் அதுமட்டும் முடியாது? அவ்விதம் அனுப்பினால் அதனாலேற்படும் இடைவெளியை ஈடுகட்டுவதற்குரிய தொழிலாளர்களின்றி உணவகங்கள், தொழிற்சாலைகளெல்லாம் முடங்கிக் கிடக்க வேண்டியதுதான். சொந்த மண்ணில் தலை விரித்தாடும் அடக்குமுறைகளைத் தாங்க முடியாமல் நுழையும் அகதிகளைச் சட்டவிரோதக் குடிகளாக்கித் தடுப்பு முகாமில் வைத்திருக்கிறது. ஆனால் ஒரு காலத்தில் செல்வம் நாடி இந்த மண்ணுக்குச் சட்டவிரோதமாகப் படையெடுத்த, இந்த மண்ணின் பூர்வீக குடிகளை நிர்மூலமாக்கிய, ஐரோப்பியர்களின் வழித்தோன்றல்கள்தானே இன்றைய மக்களில் பெரும்பான்மையினர். உலகின் பல்வேறு திக்குகளுளிருந்தும் அரசியல், பொருளியல் காரணங்களுக்காக இம்மண்ணை நோக்கிப் படையெடுக்கும் மக்களைச் சட்டவிரோதக் குடிகளாக்கி சிறுமைப்படுத்துவதற்கு நவ அமெரிக்கர்களுக்கென்ன தார்மீக உரிமை இருக்க முடியும்? தங்களது தேசிய பாதுகாப்பு நலன்களுக்காக உலகெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களால் அரசியல்ரீதியில், இராணுவரீதியில் புகுந்து விளையாட முடியும். ஆனால் அதன் விளைவாகப் பாதிக்கப் பட்ட மக்கள் அகதிகளாகவந்தால் ஏற்பதில் மட்டும் தயக்கமேன்? இந்த மண்ணின் அமைப்பிலுள்ள பல நல்ல அம்சங்களுள்ளன. முக்கியமாக அறிவியற் தொழில் நுட்ப வளர்ச்சி. மிகவும் கடினமாகத் தொலைநோக்குடன் உழைக்கின்றார்கள். ஒருபுறம் அரசின் தேசிய பாதுகாப்பு, அபிவிருத்திக் கொள்கைகளால் உலகம் பற்றியெரிகிறது. இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டுச் சமநிலை குலைக்கப் படுகின்றது. மறு புறம் இந்த மண்ணில் வாழும் மக்களால் தொலை நோக்கில் சிந்தனை முன்னெடுக்கப்படுகிறது. அரசின் நடவடிக்கை களையிட்டுக் கண்டனம் பலமாக முன்வைக்கப் படுகின்றது. சூழல் பாதுகாப்புக்காக, மூன்றாம் உலகத்து முன்னேற்றத்துக்காக இலாபநோக்கற்ற ரீதியில் முயற்சிகள் முன்னெடுக்கப்படு கின்றன. அமெரிக்காவைப் பொறுத்த வரையில் ஆரோக்கிய மான, நம்பிக்கை மிகுந்த, ஆற்றல்மிக்க தொரு பக்கமிருக்கிறது. அதே சமயம் இன்னுமொரு இருண்ட பக்கமும் அதற்கிருக் கிறது. நம்பிக்கையிழந்த, சந்தேகத்துடன் கூடிய, சுயநலம் மிகுந்த, எதிர்மறையானதொரு பக்கமது. அறிவியற் தொழில் நுட்ப வளர்ச்சிகள், கலை இலக்கியங்களில் காணப்படும் முன்னேற்றகரமான போக்குகள், பொருளியற் வளர்ச்சி இவையெல்லாம் அதன் நல்ல பக்கங்களென்றால் அதன் இருண்ட பக்கங்களாக வலிமை குன்றிய உலக நாடுகள்மீது அது தொடுக்கும் ஈவிரக்கமற்ற யுத்தங்கள் (பிஞ்சுக் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், நோயாளி களென எத்தனை அப்பாவி உயிர்களை அது காவு கொள்கிறது), சமுதாயத்தில் உலாவும் பலவேறு மனநோய் பீடித்த சமூக விரோதிகள், இனவாதச் சேற்றில் புதைந்துள்ள அமைப்புகள், அகதிகளை அடைத்து வைக்கும் தடுப்பு முகாம்கள்.. இவையெல்லாம் விளங்குகின்றன."

இவ்விதமாக இளங்கோ குறிப்பேட்டில் தன் உள்ளத் துணர்வுகளைக் கொட்டித்தீர்த்தான். எழுதவெழுத மனத்தி லொரு தெளிவு, அமைதி பிறந்தது. அந்தத் தெளிவுடனும், அமைதியுடனும், அதன் விளைவாக கிளர்ந்தெழுந்த ஒருவிதப் பரவசத்துடனும் மேலும் எழுதத்தொடங்கினான்:

"சிறியதொரு நீலவண்ணக் கோளின் மீது வாழும் மனிதர் எதற்காக இவ்விதம் பல்வேறு பிரிவுகளுக்குள் சிக்கி வாழ வேண்டும்? "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்று வாழுவதற்குரிய பக்குவத்தைத் தடுப்பதெது? எத்தனை வித மான ஏற்றத்தாழ்வுகளால் இந்த உலகு நிறைந்து கிடக்கிறது? வெளியினூடு பிரமாண்டமானதொரு வேகத்தில் விரையும் கோளிது. இதன் விரைதலை உணரமுடியவில்லை. பரந்த இந்தப் பிரபஞ்சத்தில் இதன் அற்பத்தன்மையினை அறிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அறிவின் பல்நிலை களில் நிற்கும் மாந்தர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள் கிறார்கள். போர்களால், ஏற்றத்தாழ்வுகளால் இந்த அழகிய கோள் ஒவ்வொரு கணமும் சீரழிந்து கொண்டிருக்கிறது. பெருகும் இரத்த ஆற்றில் அடிபட்டுச் செல்லும் உயிரினங்கள் தானெத்தனை? சகமனிதரை, உயிர்களைக் கொன்றொழிப் பதில்தான் எத்தனையெத்தனை வழிமுறைகள்! போர்கள், அவற்றின் அழிவுகளெல்லாம் இன்று திரையில் நடைபெறும் கூத்துக்களாகிவிட்டன. அழிவுகளுக்குப் பின்னால் உறைந்து கிடக்கும் இரத்த ஆறுகளை, துயர்மிக்க உணர்வுகளை யாரறிவார்? யாருணர்வார்? அறிந்தால், உணர்ந்தால் இவ்விதம் கொல்வதில் நாட்டம் செல்லுமோ? ஒரு குழந்தையின் பிஞ்சு உடல் சிதறடிக்கப்படும்போது அதன் பெற்றோரின் உள்ளங் கள் என்ன பாடுபடும்? யாரோ ஒருபிள்ளையென்று பேசாமல் போய்விட முடிகிறதா? மனிதரால் உருவாக்கிய மதம், மொழிக்காக எத்தனை ஆயிரக்கணக்கில் யுத்தங்கள்! இரத்தக் களரிகள்! இந்தச் சிறிய கோள் எத்துணை அற்புதமானது! இதனற்புதத்தினை உணராமலிதையிவ்விதம் சிதைப்பதெதற் காக? "உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்! என்று வாழ ஏன் முடியவில்லை?"

இவ்விதமாக மேலும் மேலும் தூக்கம் கண்களைத் தழுவும் வரையில் எழுதித்தீர்த்தான். ஒரு கட்டத்தில் நித்திராதேவியின் அரவணைப்பின் கனம் அதிகமாகிவிடவே அவளுடன் தன்னை மறந்து சங்கமமானான் இளங்கோ.

4.

மறுநாள் பகல்முழுவதும் இளங்கோ மான்ஹட்டன் முழுவதும் அலைந்து திரிந்தான். கடந்த ஒரு வருடமாக அந்த மண்ணில் அலைந்து திரிந்த வீதிகள், இடங்களையெல்லாம் மீண்டுமொருமுறை பார்வையிட்டான். ஹரிபாபு, அவன் மனைவி இந்திரா, ஹென்றி இவர்களிடமெல்லாம் கூறி விடை பெற்றான். அன்றிரவு நியூயார்க் பஸ் நிலையத்துக்கு அவன் அருள்ராசாவுடன் புறப்பட்டபோது கோஷ், அஜித் தம்பதிகள் எல்லோரும் வழியனுப்ப வந்தனர். இளங்கோ இதனைக் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் இதை விட மிகப்பெரிய ஆச்சரியமென்னவென்றால் ஹரிபாபுவும், இந்திராவும் அவனை வழியனுப்ப வந்திருந்ததுதான். எல்லோரும் அவனது எதிர்கால வாழ்வு நன்கமைய வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

அவன் புறப்படும் நேரம் வந்தது. சோகம் கவிந்த முகங்களுடன் நின்ற அவர்களனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு இளங்கோ பஸ்ஸிலேறி மூலையிலிருந்த இருக்கை யொன்றில் சென்றமர்ந்தான். அந்த நள்ளிரவில் அவனையும், சக பயணிகளையும் ஏற்றிக் கொண்டு அந்த பஸ் "தொராண்டோ" மாநகரை நோக்கிப் புறப்பட்டது. தொலை வில் விரிந்திருந்த இரவுவானில் சுடர்க் கன்னிகள் அவனது புதிய பயணத்தையெண்ணிக் கெக்கலி கொட்டி நகைத்துக் கொண்டிருந்தார்கள். "நட்சத்திரக் கன்னியரே! நகைக்கவா செய்கிறீர்கள். நல்லாக நகையுங்கள். நகையுங்கள். உங்கள் நகைப்பில் நானொருபோதும் துவண்டு விடப்போவதில்லை. ஆனால் உங்கள் நகைப்பில் நானறியும் அர்த்தமே வேறு. மோனித்துக் கிடக்கும் வெறுமை படர்ந்த வெளிகளை ஊடுருவி நீங்கள் அனுப்பும் ஒளிக்கதிர்களின் தொலைதூரப் பயணங்கள் என்னைப் பிரமிக்க வைக்கின்றன. வெற்றிடங் களைத் துளைத்து, பல்வேறு காலகட்டங்களிலிருந்தும் எத்தனை துணிச்சலுடனவை தம் பயணத்தை ஆரம்பித்திருக் கின்றன. தனிமைகளைக் கண்டு, தொலைவுகளைக் கண்டு பயமற்ற அவற்றின் பயணங்களுடனொப்பிடுகையில் என் பயணத்துக்கொரு அர்த்தம்கூட இருந்திட முடியுமா?"

நள்யாமத்துப் பொழுதினில் புறப்பட்ட பஸ் அதிகாலையில் கனடாவை நெருங்கிக் கொண்டிருந்தது. அடிவானில் விடிவெள்ளி முளைக்கத் தொடங்கி விட்டது. "அதிகாலை மெல்லிருட் போதுகளில் அடிவானில் நீ மௌனித்துக் கிடக்கின்றாய்! படர்ந்திருக்கும் பனிப்போர்வை யினூடு ஊடுருவுமுந்தன் நலிந்த ஒளிக்கீற்றில் ஆதரவற்றதொரு சுடராய் நீ ஆழ்ந்திருப்பாய் விடிவு நாடிப் போர் தொடுக்கும் என் நாட்டு மக்களைப் போல. விடிவின் சின்னமென்று கவி வடிப்போர் மயங்கிக் கிடப்பார். ஆயின் சிறுபோதில் மங்கலிற் காய் வாடிநிற்கும் உந்தன் சோகம் புரிகின்றது. அதிகாலைப் போதுகளில் சோகித்த உந்தன் பார்வை படுகையிலே, என் நெஞ்சகத்தே கொடுமிருட் காட்டில் தத்தளிக்கும் என் நாட்டின், என்மக்களின் பனித்த பார்வைகளில் படர்ந்திருக்கும் வேதனைதான் புரிகின்றது. விடிவினை வழிமொழியும் சுடர்ப்பெண்ணே! வழி மொழிந்திடுவாய்!"

இளங்கோ தன் புதிய பயணத்தைத் துணிச்சலுடனும், நம்பிக்கைகளுடனும் எதிர்பார்த்து ஆரம்பித்திருக்கின்றான்." இயற்கைத்தாயே! போதுமென்றே திருப்தியுறும் பக்குவத் தைத் தந்துவிடு! தாயே! இயற்கைத்தாயே! உந்தன் தாள் பணிந்து கேட்பதெல்லாம் இதனைத்தான்! இதனைத் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியென்று வீணாக்கும் போக்குதனை விலக்கி விடு! மதி கொண்டு விதியறியும் மனத்திடத்தை மலர்த்தி விடு! வளர்த்து விடு! கோள்கள், சுடர்களெல்லாம் குறித்தபடி செல்வதைப்போல் வாழும் வாழ்வுதனை என் வாழ்நாளில் வளர்த்து விடு! தாயே! இயற்கைத்தாயே! உந்தன் தாள் பணிந்து கேட்பதெல்லாம் இதனைத்தான்! இதனைத்தான்!"

கனடா எல்லையினை அடையும் பொழுது எது நடந்தாலும் அதனை ஏற்கும் பக்குவத்தை அவன் பெற்றிருந்தான். விரிந்திருக்கும் ஆகாயமும், பூமியும் இருக்கும் வரை, இங்குள்ள உயிரினங்களொவ்வொன்றுமே தான் வாழும் சூழலுடன் தப்பிப்பிழைத்தலுக்காகப் போராடிக் கொண்டு தானிருக்கிறது. தப்பிப்பிழைத்தலில்தானே உயிரினம் ஒவ்வொன்றினதும் இருப்பின் தொடர்ச்சியே தங்கியுள்ளது. எத்தகைய சூழலையும் துணிச்சலுடன், உறுதியுடன், நம்பிக்கையுடன் உள்வாங்கித் தொடர்ந்து நடைபயில்வதற் குரிய பக்குவத்தை அவனது அமெரிக்க மண்மீதான அனுவங்கள் மேலும் அதிகமாக்கி விட்டுள்ளன. அந்த அனுபவங்களின் துணையுடன் அவன் அடுத்த கட்டத்தில் அடி யெடுத்து வைக்கின்றான். நம்பிக்கையுடன் வாழ்க்கை அற்புதமாக விரிந்து கிடக்கின்றது.

இப்பூமிப்பந்தின் நாலா திக்குகளிலும் போர்களினா லும், அடக்குமுறைகளினாலும் ஏதிலிகளாக மக்கள் கூட்டம் உறவுகளைப் பிரிந்து இருத்தலுக்கானதொரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. சொந்தமண் பற்றிய கனவுகளுடன் அவர்களின் பயணம் பலவேறு திக்குகளிலும் தொடருகின்றது. ஒட்டிஉறவாடிச் சொந்தம் கொண்டாடிய மண்ணுடன் மீண்டும் பின்னிப் பிணைந்து சுகித்திட முடியாத சுழல்கள்! போர்கள்! புகுந்த இடத்திலும் வாழ்வின் ஒவ்வொரு கணமும் தப்பிப் பிழைத்தலுக்கான போராட்டங்கள். அங்குமில்லை. இங்குமில்லை. நம்பிக்கைக் கனவுகளுடன் தொடரும் திரிசங்கு வாழ்க்கை.

வாயுக் குமிழிக்குள் வளையவரும் விரையும் வாழ்வு! உணராத உயிர்களால் குமிழி என்று உடையுமோ? குமிழியின் நிலையற்ற தன்மையினை உணராத உயிர்களோ உள்ளிருந்து கும்மாளமிடுகின்றன. குமிழியினை உடைப்பதென்றே கங்கணம் கட்டி நிற்கின்றனவா! ஆயினும் அவனது பயணம் மீண்டும் தொடங்கும் மிடுக்கெனத் தொடர்கிறது. "தீமை யெலாம் அழிந்துபோம்! திரும்பி வாரா!"வென்னும் நம்பிக்கையில் தொடரும் பயணமது! "எப்போதுஞ் சென்றதையே சிந்தை செய்து கொன்றழிக்குங் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாது தொடரும் பயணமது! "இன்று புதிதாய்ப் பிறந்தோமென்று எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு, தின்று விளையாடியின்புற்றிருந்து வாழுமொரு" பயணமது! பஸ் இருளைத் துளைத்துக் கொண்டு எல்லையினை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. இந்த இருளின்பின்னால் நிச்சயமாக விடிவொன்று மலருமென்ற நம்பிக்கையில் தொடரும் பயணமது.

முற்றும்!

---

# வெம்பி வீழ்ந்தவை



பரந்து கிடக்கின்றன
நிலமெங்கும்
வெம்பி வீழ்ந்தவை
அழுகிச் சிதைந்ததின்
முடை நாற்றம்
தேசமெங்கும் பரவியது

கூடி வாழ்ந்த குடும்பம் கலைந்தது
தம்மை விட்டால் ஆளில்லை
தலைக்கனம் ஒவ்வொருவருக்கும்
வெட்டிப் பேச்சுப் பேசி
கெட்டியற்ற மட்டக் கூடுகள்
தமக்கெனத்
தனித்தனியே கட்டிப்
பிரிந்து சென்றவை
மாரிப் பெருமழையில்
சிதறி அழிந்தன.

விட்டால் போதுமென்று
எட்டி அகன்றனர்
அருகிருந்த மாந்தர்
பெரு விருட்சப் பக்கம்

அழுகிச் சிதைந்தவற்றின்
காலம் கடந்த ஞானம்
ஒன்றிணைவோம்
என்ற முணுமுணுப்பாக
ஆங்காங்கே

வேண்டாம் சகவாசம்
மட்டப் பற்றைகள் வேண்டாம்
இனியும்
விட்டகன்றால் போதும்
விரல் அழுத்தி
பெருவெளியில் சங்கமமாயின
விழித்த மந்தைகள்.

காத்திருக்கிறது காலம்
மௌனமாக..

■ எம்.கே.முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



17

"கணபதியே வருவாய் அருள்வாய்... கணபதியே... வருவாய்" திடீரென பிள்ளையார் கோவிலின் பாட்டுப்பெட்டி வாய்திறந்தது.. "இனி மினெக்கெடக்கூடாது தண்ணிவென்னி குடிக்கில் குடிப்பம். என்னக்கா" என்றபடி அவன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு தெருவைக் கடந்தான் லெச்சிமியும் தொடர்ந்தாள்.

கடையை நெருங்க தேனிசை செல்லப்பா தன் அரிய குரலில் "என்னினமே என் சனமே". என வாய் திறந்தார். இது எதையும் காதில் போடாமல் தேநீருக்கு சொன்னான் பிளேன்ரீ பதினைந்து சதம் அவளும் குடித்தபின் அவன் ஒரு பீடியை வாங்கி பற்றவைத்துக் கொண்டு சைக்கிளில் ஏறினான். அவளும் தொடர்ந்தாள். இப்போதுதான் அவர்களுடன் வந்த வயோதிபரும் அவர் பேரனுடன் வந்து சேர்ந்தார். "இனி மெயின் ரோட்டுத் தான் அவை வருவினம் நீங்க வாங்க" என்றபடி அவன் சைக்கிளை நிறுத்தாமல் போனான் அவளும் தொடர்ந் தாள் பூநகரி கடைத்தெருவை அடைந்தபோது மஞ்சள் வெயில் மறைந்து கொண்டிருந்தது. ஆயினும் வேகம் குறைக்காமல் அவன் ஓடினான் அவளது ஓர்மமும் அவனைத் தொடர்ந்தது.

வாடியடி திரும்பியதும் மேலும் பல மிதி வண்டிகள் வேறு வேறு திசைகளிலிருந்து சேர்ந்து கொண்டன. கேரதீவு சங்குப்பிட்டி பாதையில் வளமான கடற்காற்று அவர்களது களைப்பை போக்கி இதமாக வீசியது பொழுதும் சரிந்து போனதால் மிதிவண்டியை இதமாகவும் மகிழ்வாகவும் ஓட முடிந்தது. காப்பரண்கள் கடந்து பயண எல்லைக்குள் வந்ததும். மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அவன் தனக்குப் பின்னே வரும்படி கூறிவிட்டு தனது மிதிவண்டியை மிதி வண்டிகளுக்கான வரிசையில் கொண்டு நிறுத்தினான். அவளுடைய மிதிவண்டியையும் வாங்கி அதன்பின்னே நிறுத்தினான். மளமளவென அவற்றின் பின்னேயும் மிதி வண்டிகள் நின்றன. அவர்களுக்கு முன்பாகவும் நீண்ட தூரத்திற்கு மிதிவண்டிகள் நின்றன. அவர்களுக்கு முன் பாக பல பார ஊர்திகள் நிறைந்த பொருட்களுடன் நின்றன.

ஜெட்டி செயலிழந்து பலவருடங்களாயிற்று. யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்குமான போக்கு வரவுப்பாதை இந்த களப்பு வெளிதான் அதனால் இந்த இடம் சனக்கூட்டம் நிறைந்துள்ளது. மேலும் பகலில் இந்த இடத்தில் மனித நடமாட்டம் அற்றுப் போய் விடும். இரவிலும் கூட கடற்புலிகளின் பாதுகாப்புடன் தான் இந்தப்பயணம் நடைபெற்று வந்தது. நிலைமை சீராக இல்லாமல் ராணுவ நடமாட்டம் காணப்பட் டால்.. பயணம் நிறுத்தப்படும் சில நாட்களில் போர் நடந்து கொண்டிருக்கும். அதை தவிர்த்து பயணமும் நடக்கும். ஆனையிறவிலிருந்தும், பூநகரியிலிருந்தும் எறிகணைத்தாக்குதல் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். அதுதவிர விமானத்தாக்குதலும் எதிர்பார்க்கப்படுவதுதான். இவ்வளவு ஆபத்துகளுக்கு மத்தியில்தான் இந்தப்பயணத்தை மக்கள் மேற் கொள்ள வேண்டியிருந்தது. பாரஊர்திகளுக்கு முன்னுரிமை. அவைதான் யாழ்ப்பாணத்தில் இப்போதுள்ள மக்களுக் கான உணவை அது பற்றாக்குறையானதாயினும் கொண்டு செல்கிறது. ஒருபுறத்தில் கோர்வையாக பிணைக்கப்பட்ட ஏராளமான மண்ணெய் பரல்களுடன் நீரிலும் பலர் நின்றனர் அவர்கள் மண்ணெய் பரல்களை ஆழமற்ற நீர்பரப்பினூடாக நீரில் போட்டு இழுத்துச் செல்லப் போகிறார்கள். என்று சொன்னான், அவளுடன் வந்த இளைஞன். இதுவரை அவனுடன் பயணித்தாலும், அவனுடைய ஊர் எது? பேர் என்ன? என்பதை அவள் இதுவரை கேட்கவில்லை. மெல்ல நிமிர்ந்து அவன் முகத்தையும் சரியாக பார்க்கவில்லை இன்னுமொரு தடவை எங்காவது அவன் தென்பட்டால் அவளால் அவனை இனங்காண முடியாது. இது என்ன பழக்கம் அவன் யாராயிருந்தால் எனக்கென்ன. வந்தான் வழிப் போக்கன். கூடி வந்தேன் அதற்கு மேல்... லெச்சிமிக்கு கேட்கத் தோன்றவில்லை. என்றாலும் அவன் சொன் னான்: "எப்பவாச்சும் சங்குவேலிக்கு வந்தா... மடத்தடி சின்னன் எண்டு நீங்கள் கேட்டா என்னைக்காட்டு வாங்கள்."

"சங்கு வேலியா அது எங்க கிடக்கு"

"ஓ நிங்க யாழ்ப்பாணம் எவடத்துக்கு போறீங்க"

"தின்னவேலிக்கு அங்க சந்தைக்கு அங்கால பலாலி ரோட்டெண்டு சொன்னவை போய்த்தான் விசாரிக்க வேணும்" அவன் அவளை திரும்பிப் பார்த்தான்.

"யாழ்ப்பாணத்துக்கு இப்பதான் போறீங்களா?"

"இல்ல வந்திருக்கிறன் பிரச்சனைக்குப்பிறகு இப்பதான்." பொய் சொல்லவேண்டிய கட்டாயம். அவளுக்கு எதுவும் தெரியாது என்று காட்டுவது சரியல்ல. "ச்சக் என்ன துணிவில கிளம்பி வந்தனோ அதே துணிவோட போயிற்று திரும்ப வேணும். சுக் உந்த சிங்களவர் வாழுற அன்ராசபுரத்துக்கே தனியப்போய் வந்திட்டனாம் இது தமிழர் வாழுற இடந்தானே" அவளுக்குள் அந்தத் தென்பு இருந்தது. இப்படியே இரவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமணியாகிஜவிட்டது மக்கள் ஏதோ சத்தியத்துக்கு கட்டுப்பட்டவர்களாக தமது சைக்கிளை பிடித்தபடியே அந்த மண்ணில் உட்கார்ந்திருந்தார்கள் இதில் ஏராள மான மிதிவண்டிகள் தமது குடும்பத்துக்கு தேவை யான உணவுப் பொருட்களுக்காக வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் சென்று தம்மாலியன்றளவு பொருட்களை வாங்கி தமது மிதிவண்டியிலேற்றி யிருந்தனர். அவர்களை அடுத்ததாக அனுப்பி வைக்க வேண்டியதாக கடற்புலிகளும் போக்குவரத்துபிரிவினர் செயல்பட்டனர். ஒரு ரூபா முப்பத்தைந்து சதம் மிதி வண்டியுடன் அதன் சொந்தக்காரரையும் ஏற்றி அக்கரை யில் விடுவதற்கான கட்டணம். லெச்சிமி அதைக் கொடுத்து பற்றுச்சீட்டை வாங்கிக் கொண்டு படகிலேறி னாள். சின்னனும் அதே படகில் ஏறினான். படகு சுமார் பத்து நிமிடத்தில் அக்கரை சேர்ந்தது. இறங்கியதும் தனது தண்ணீர்ப் போத்தலிருந்து கொஞ்சம் நீரைப் பருகியபின் லெச்சிமி மிதிவண்டியிலேறினாள் சின்னன் அலுக்குலைந்து பொயிருந்த தனது சுமையை சீர்படுத்திக் கட்டினான்.

இப்போது பாதையில் அவர்களுடன் பலர் கூடிப்பயணித்தனர். நீண்ட கடற்கரைச்சாலை கடந்த பின்னும் அது பின்னிலவுக் காலமாதலால் நிலத்தில் போதிய வெளிச்சம் இருந்தது. கண்டிவீதியை அண்மித்த போது சின்னவன் லெச்சிமியுடன் நெருக்கமாகவே வந்தான் "ஆரும் மறிச்சா எனக்கு அக்கா எண்டு சொல்லு வன். நீங்களும் அப்பிடியே சொல்லுங்க என்றான்." அவள் அதை ஏற்றுக் கொண்டாள் காரணம் பயணித்த வர்களில் அவள் மட்டுமே பெண். தானும் ஒரு துணை யுடன் தான் இருக்கிறேன் என்பதில் பொய்யில்லை அதுவுமல்லாமல் அதுதானே உண்மை. இதுவரை தன்னுடன் வந்தவனை தம்பியென்பதில் தவறென்ன? அவர்கள் எதிர்பார்த்தபடி இரண்டு இளைஞர்கள் அவர்களை நிறுத்தினர். அவர்களுடன் மேலும் பலர். "எங்க போறீங்க எங்கயிருந்து வாறீங்க" என்பது போன்ற கேள்விகளுடன் அனுப்பிவைத்தார்கள். இவர்களிடமும் அதே கேள்வி. "பூநகரியால வாறம். அக்காவ வீட்ட கூட்டிக்கொண்டு போறன்"

"சரிசரி போங்க" கொஞ்சமும் இங்கிதமில்லா மல் சினந்து பேசினான். சற்று தூரம் போனதும் அவன் சொன்னான் "இது இயக்கம் வச்சிருக்கிற விழிப்புக்குழு. ஒற்றன் போயிருவான் எங்களமாதிரி அப்பாவியள வெருட்டுவாங்கள்." என்று சிரித்தான். ஒரு வழியாக அதிகாலை நான்குமணிக்கு அவர்கள் நல்லூர்க்கந்தசாமி கோவிலடிக்கு வந்து விட்டனர்.

சைக்கிளை தேர்க்கொட்டகையுடன் நிறுத்தி பூட்டினார்கள். "கொஞ்சம் சரிவம் விடிஞ்சாப்பிறகு போவம்" என்றபடி தோளிலிருந்த துண்டை உதறிப் போட்டுப்படுத்துக் கொண்டான். அவளுக்கும் கண்கள் சொருகின என்றாலும் அவளால் இந்த இடத்தில் படுக்க முடியவில்லை. கால்கள் பாரமாகியிருந்தன அவள் அந்த மணல் வெளியில் நடந்து பார்த்தாள். நீண்ட நேரம் சிறுநீர்கழிக்காமல் இருந்தது மிகவும் அவதியாக இருந்தது. எனவே கோஞ்சம் தள்ளிப் போனாள் ஒரு கழிப்பறை தென்பட்டது அதற்குள் நுழைந்து தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டு திரும்ப வந்து படுத்தாள். எனினும் உறங்கவில்லை. நிலம் வெளித்துக் கொண்டி ருந்தது. அவள் தனது கைகால்களை அலம்பி முகத்தை யும் கழுவிக் கொண்டாள். இனி அவள் போக வேண்டிய இடத்திற்கு வழி தேட வேண்டும். சின்னன் எழுந்து அவளிடம் கோவிலின் பின்னுள்ள வீதியை காட்டி, "அப்பிடியே நேராப் போங்க தின்னவேலிதான் நான் வேற பாதை இனி இதெல்லாம் கடைக்கு குடுக்கோணும் போக நேரஞ்செல்லும்" என்றான். அவள் தனது மிதி வண்டியை வீதிக்கு தள்ளி அதில் ஏறிக்கொண்டாள். வழியில் தென்பட்ட ஒருவர் மதில்களுக்கு மேலாக வீதிக்கு வளைந்த பூமரங்களிலிருந்து துறட்டி போட்டு பூக்களை பறித்துக் கொண்டிருந்தார். அவரிடம் அவள் "ஐயா இதில வீரமாகாளியம்மன் கோயில் எங்க கிடக்கு" என்று கேட்டாள். சில வருடங்களுக்கு முன் அவர் களுடைய பாரம்பரிய வீட்டில் வாடகைக்கு குடியிருந்த குடும்பம் ஒன்று கோவிலின் வடக்கு வீதியில் இருந்தது அங்கே தங்கலாம் என்ற முடிவோடு வந்திருந்தாள். அவர் தன் கையை நீட்டாமல் தலையை உயர்த்தி நாடியால் காட்டி "உதிலதான்" என்றார். அவள் விரைந்தாள். வேகமாக சென்று அந்த வீட்டை அடைந்ததும், அவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

*18*

யாழ்ப்பாண நகரம் களையிழந்து போய்க் கிடந்தது. முன்னர் இருந்தது போல கலகலப்பை காண வில்லை மக்கள் நடைப்பிணங்களைப்போல உலவிக் கொண்டிருந்தார்கள். வாழ்ந்தாக வேண்டும் என்ற அவல நிலை போல அனைத்து முகங்களிலும் அப்பிக் கிடந்தது சோகம். மக்கள் தலை நிமிர்ந்து எதையும், எவரையும் பார்க்கப்பயந்தார்கள்.

லெச்சிமி எதையும் கவனிக்காமல் மிதி வண்டியை உருட்டியவாறே நடந்தாள். தான் அடைய வேண்டிய வீடு வந்ததும் நிமிர்ந்து பார்த்தாள். வீடு பூட்டியிருந்தது. அவள் பயந்து போனாள். அப்போது தான் அந்தரவழியில் நிற்பது போல உணர்ந்தாள். யாரையாவது கேட்கலாம் என்றால் எவரும் தென்பட வில்லை. யோசித்தாள். அப்போது பூட்டிய கதவின் உள்ளிருந்து ஒரு பெரியவர் வெளியே வந்தார். அவரிடம், "ஐயா, இதில சீவரத்தினமெண்டு... அவற்ற வீடு..." என அவள் ஆரம்பிக்க அவர் சுற்றுமுற்றும் பார்த்தார் பின் அவளைப்பார்க்காமலே, எங்கோ பார்த்தபடி "உதில நில்லாத... பொலிசுக்காரன் எப்பிடி இஞ்ச நிப்பான் கொழும்புக்கு போட்டாங்கள்" என்ற யாரோடோ பேசுவது போல பேசிவிட்டு அந்த இடத்தைக்கடந்தார். அவள் விக்கித்துப் போய் நின்றாள்.

மெதுவாக திரும்பி கோவிலை நோக்கி நடந்தாள். "மெய்தான் புலிகளின் முதல்தாக்குதலும் ஜேவிபியின் முதல் தாக்குதலும் பொலிசுக்கு எதிரானது தானே நானொரு அறிவு கெட்டவள் அவங்களத் தேடி வந்தனே" என நொந்து கொண்டாள். கோவிலை அடைந்த போது ஒரு நடுத்தர வயதுப்பெண் தேவாரம் பாடியவாறே கையில் ஒரு பையில் பூக்களை வைத்துக் கொண்டு அவற்றை மாலையாக கட்டிக் கொண்டிருந் தாள். அவள் கோவில் கிணற்றில் நீரள்ளி முகத்தையும் கைகால்களையும் அலம்பிவிட்டு வந்தாள். ஐயர் வந்தார் காலைப்பூசை நடந்தது. பிரசாதமாக திருநீறும் சந்தனமும் கிடைத்தது. அவளும் புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுள்ள பிரதான வீதியால் போக அங்கேயும் ஒரு கோவில். அதைக்கடந்து செல்ல ஒரு சிறிய சந்தைக்கான ஆரவாரம் தெரிந்தது. அவள் அந்தப்பக்கம் திரும்பி மிதிவண்டியை உருட்டியவாறே சென்றாள். சந்தையில் பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு பெண்ணிடம் "பலாலிரோட் எங்க கிடக்கு" என்று கேட்டாள். அவள் கையை இடப்பக்கம் விசிறி "உந்தாகிடக்கு" என்றாள்.

அவள் நடந்தாள் இப்போது வீதி விசாலமாக இருக்கவே அவள் மிதிவண்டியிலேறி உழக்க ஆரம்பித்தாள். சிறிது தூரத்திலேயே ஒரு பெரிய கல்வீட்டின் முன் நிரம்ப மக்கள் நிற்பதை கண்டாள். மிதிவண்டியை நிறுத்தி "இது ஆற்ற இடம்" என வினவினாள். இது இயக்கத்திட்ட கொடுத்த பிள்ளையளப்பற்றி விசாரிக்க வந்திருக்கிறம் இதுதான்..." அவற்ற பேஸ்" அவளும் கீழே இறங்கி அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். சிறிது நேரத்தில் ஒரு சிறுவன் வெளியே வந்து, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களிலயிருந்து வந்தவை ஆரும் இருக்கிறியளோ? என்று கேட்க நான்கைந்து பேர் முன்னே சென்றனர். அவன் அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். ஒரு அரைமணி நேரத்திற்குள், அவர்கள் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். பின்னர் அவன் "வவுனியா..." என்றான் லெச்சிமி முன்னே சென்றாள். வேறு யாரும் அவளைத் தொடரவில்லை. அவள் உள்ளே போனாள். உள்ளே ஒரு பெரிய உடலுடன் திடகாத்திரமான ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவள் வவுனியா பொறுப்பாளரிடம் பெற்ற கடிதத்தை கொடுத்தாள். அவளை உட்காரச் சொன்னான். அவன் அவள் முன்னால் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

அவன் மிக நிதானமாக கடிதத்தை படித்தான். அதில் குறித்திருந்தது போல அவளிடம் "நீங்கள் மாதர் மாநாட்டுக்கு வந்தநீங்களோ..?

"ஓம் கடைசிநாள் அறிக்கையை கவிதையில வாசிச்சது நான்தான்."

"ஓ...அப்ப தலைவரை சந்திக்க போன ஆக்களோட போன நீங்களோ?"

"ஓம் அதில முன்வரிசையில இருந்தநான் படத்தில பார்த்திருப்பியள்"

"கொண்டுவந்த பிள்ளையளில கனபேர் தாங்களும் அமைப்பில சேர விரும்பி சேர்ந்திட்டாங்கள். அதிலயும் இருக்கலாம் அல்லது வேற வேற மாவட்டத்தில கொஞ்சப்பேரை வச்சிருக்கிறாங்கள். நாங்கள் இனி தகவலனுப்பி தேடித்தான் அவர் எங்க இருக்கிறார் எண்டு சொல்ல முடியும்... நீங்க வாற பதினாலாந்திகதி முத்திரைச் சந்திக்கு பக்கத்தில ஒரு முகாம் இருக்கு. அங்க வந்து கேளுங்க. அதுக்குள்ள நாங்கள் விபரம் எடுத்திருவம்... சிரமத்திற்கு மன்னிக்கோணும்" அவள் சோர்வோடு எழுந்தாள். நேற்று முழுதுமான மிதிவண்டியோட்டம், தூக்கமில்லாத இரவு. இன்னும் வயிற்றில் எதுவும் போடவில்லை. வந்த பாதையை நினைவு வைத்து திரும்பினாள் முதலில் கண்ட காளிகோவிலின் மண்டபத்தில் சென்று தனது பையை அவிழ்த்து கோல்மன்ஸ் பக்கற்றிலிருந்து கோல்மன்சை யொக்கில் கொட்டி நீரை விட்டுக்கலந்தாள். சீனியும் கொஞ்சம் சேர்த்து பருகியபின் அந்த மண்டபத்து தூணின் பின்னதாக சுவர் ஓரத்தில் தன் முந்தானையை விரித்து சற்றே சரிந்தாள். அவளைப் பேய்த்தூக்கம் ஆட்கொண்டது..

கண் விழித்தபோது கபகபவென பெரும்பசி. பக்கத்தில் எங்காவது சாப்பாட்டுக்கடை இருக்கலாம். பார்த்துவிட்டு வரலாம் சாப்பிட்டபின் சைக்கிளோடினால் கேரதீவுக்கு போகலாம். இருட்ட முன்னர் போக வேண்டும் பசியுடன் எப்படி? அவள் இருந்த காசையெல்லாம் ஒரு சிறு பையில் வைத்திருந்தாள். பணத்தை மட்டும் கையிலெடுத்துக்கொண்டு மிதிவண்டியை காளி கோவிலின் புறச்சுவரில் சாத்தி பூட்டிவிட்டு கால்நடையாக புறப்பட்டாள். அவள் நினைத்தது போல கடை பக்கத்தில் இல்லை. பார்த்து பார்த்து ஐந்து நிமிட நடை தூரத்தில் ஒரு சாப்பாட்டுக்கடை கிடைத்தது. அவர்களிடம் சோறு கிடைக்குமா என்று கேட்டாள் மரக்கறி தான் இருக்கு என்றார்கள். பரவாயில்லை அவள் மேசையில் அமர்ந்து சாப்பிட்டாள். வயிறார சாப்பிட்டாள். அதற்காக அது தரமான உணவல்ல அவளுக்கு நாளைக்கும் மிதி வண்டி ஓடத் தென்பு வேண்டும். சாப்பிட்டு கைகழுவியபின் முதலாளியின் மேசையருகே காசு கொடுப்பதற்காக போனாள். அப்போது அவளருகே வந்த ஒருவன் "அம்மா சாப்பிட்டாச்சோ?" என்று கேட்டான். அவள் யாரென திரும்பிப் பார்த்தாள். முன்பின் அறிமுகமில்லாத ஒருவன்.

வாங்கோ உங்களோட கொஞ்சம் கதையிருக்கு" என்றான் இப்போது மேலும் இருவர் அவளருகே வந்தனர். "தம்பியவை என்ர சைக்கிள் கோவிலடியில இருக்கு எடு..."

"இல்ல வேண்டாம் நாங்கள் ஏத்திக் கொண்டு போறம் பிறகு கொண்டுவந்து விடலாம்." அவளுக்குள் சிறிது அச்சம் தோன்றியது. அவளை ஒருவன் தன் மிதி வண்டியின் பின்னால் ஏற்றி கொண்டு சென்றான். அது எந்த இடம் என்பது இப்போது கூட அவளுக்கு தெரியாது. ஒரு வீட்டிற்குள் சென்றதும் அவளை ஒரு வாங்கில் இருக்கப்பணித்தான். அதன்பிறகு அனைத்தும் கட்டளை போல வந்தது. அவளைவிட இன்னுமிரு பெண்களும் ஒரு முப்பது வயது மதிக்கதக்க ஒருவரும் அந்த நீண்ட வாங்கில் இருந்தனர். அது விடுதலைப்புலிகளின் முகாம் என்பதும் தெரிந்து போயிற்று. ஆனால் யாரும் பேசவில்லை. அரை மணி நேரமாக உள்ளே யாரோ இருப்பது போல தெரிந்தாலும் யாரும் வெளியே வரவில்லை. அதன் பின்னர் வெளியே வந்தவன் நேராக அவளிடம் வந்து "கொக்குவில்லில ஆரைப்பாக்கப் போன நீ" என்றான். அவளுக்கு சுரீரென்றது அவனது ஏக வசனம்.

"கொக்குவில்லா அந்த இடமே எனக்குத் தெரியாது" என்றாள்.

"அப்ப கொக்குவில்லுக்கு பின்னால என்ன இருக்கு" என்றான்.

"கொக்குவில்லுக்கு பின்னால பிறீவில்லிருக்கும் சைக்கிளோடுறவளுக்கு இது தெரியாதா?"

இந்த இடம் நகைச்சுவைக்குரியதல்ல இவன் இப்படியே என்னை அடைத்து வைத்தாலோ, அல்லது சுட்டுப்போட்டுத்தான் ஒரு மட்டையக் கொழுவினாலோ, என்ர பிள்ளையளுக்கோ, உறவினருக்கோ, யாருக்கும் தெரியப்போறதில்லை. பேராபத்தில மாட்டியிருக்கிறன் இதிலயிருந்த என்னைக்காப்பாத் திற சக்தி அந்த கடவுளுக்குத்தான் இருக்கு. நான் முழுசா வணங்கிற சரசுவதி என்ர நாக்கில இறங்க வேணும். தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரி நீதான் துணை உன்னை நம்பித்தான் உன்ர கோவில்ல தங்கினனான். ஏதோ செய். என்னை காப் பாத்து" லெச்சிமிக்கு உள்ளே ஏராளமான தெய்வங்கள் வந்து நின்று சந்நதம் ஆடின.

"தம்பி நான் கலியாணங்கட்டின ஏத்தரவில. யாழ்ப்பாணம் ரவுணுக்க வந்திருக்கிறன் அப்பிடியே நீர் வேலிக்கு போவன் திரும்பி போயிருவம். ஏன்ர புரியன்ர தேப்பன் செத்தபிறகு அதுகுமில்லை" அவள் அந்த யாழ்ப்பாணத்தை நினைத்துப்பார்த்தாள் ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு அறுபத்துநாலுவரை அவ்வளவுதான் எவ்வளவு வாகனம் ஒலிபெருக்கி பாட்டுகள் தியேட்டர்கள் நிறைஞ்ச சனம் பஸ்ஸுகள் பள்ளிக்கூடப்பிள்ளையள் ஒரு வாகனங்கூட இல்லாத பாட்டுச்சத்தங் கேக்காத ரோட்டே இருண்டு போய்க் கிடக்கிற இந்த யாழ்ப்பாணம் அதில்ல, தனிய மிதி வண்டிகள் மட்டும் அதுவும் எப்போதாவது தென் பட்டது.

"நீதான் கொக்குவில்ல நிண்ட ஆள் எண்டது எங்களுக்கு நல்லா தெரியும் உண்மைய சொல்லாட்டி பிறகு எங்களக்குறை சொல்லாதை." மறுபடி அந்த ஏக வசனம் அவன் தனக்குள் முணுமுணுப்பது போல அவளை தப்பானவளாக பேசினான் ஒரு விபசாரியைப் போல கவனித்தான் அவளது உடல் கூசியது பயம் அதற்கும் மேல், காட்டுமிராண்டிகளிடம் சிக்கி விட்டேனே என கலங்கினாள். எவ்வளோ கற்பனைகளை வைத்திருந்த அவள் வாழ்க்கை சிதறியதைவிட இந்த இடம் அவளை சிதைப்பதை அவளால் தாங்க முடிய வில்லை. ஆனால் எவ்வளவுதான் முயன்றாலும், அவளுக்குள் இயலாமை ஆத்திரமாக கிளர்ந்தாலும், அழுகை வர மறுத்தது.

(தொடரும்)

## நாம் மனிசர்

மாளிகை அரன்மனை மாபெரும் வீடிருந்தென்ன
கார் பலவும் வீட்டினுள் அருங்கலைச் சிற்பங்களும்
ஆரும் புகழும் பார் சிறந்த பல்லோவியங்களும்
அழகுத் தளபாடங்களும் பளிங்கும் அதன் மெத்தைவிரிப்பும்
இருந்தென்ன? சிரிப்பல்லா வீட்டிலென்ன சீவியம்!

சுத்தம் கத்தல் விவாதம் முற்றல் வீடே அதிரல்
எத்திக்கும் நானே சரியென்னும் தன்மையதிகாரம்
இத்தரையில் நீயே முழுப்பிசகெனும் முன்னிலை முற்றோதல்
பத்தரை மாற்றுத் தங்கமெனப் படர்க்கையில் கண்டு
மற்றோரைப் பார்த்தும் பிரதி மண்ணில் போலிப்பாசாங்கில்
செத்த வீடாய் ஒப்பாரி வைப்பது ஒப்புக்கழுவதும்
நித்தமென்றும் நிதானமின்றி மகிழ்ச்சியைக் கழுவேற்றி
செத்த பிணங்களாய் நாறித் தெருவில் கிடப்பதா?
நாம் மனிசர்
    கற்பழித்துக் காடைத்தனும் பண்ணும்
    காவாலிகளல்ல நாம்.
    அன்பெறிந்து பாசம் பற்றி பண்பொடு
    பணிந்தொழுகித் தோற்பதில் காதலின்
    சுவை தெரி காளையர் நாம்
    கன்னியர் நாம். ஆம்.
நாம் மனிசர்
    நாசமறுத்த கருங்காலிகளல்ல
    வேசம் போட்ட வஷக்கொல்லிகளல்ல
    ஆசுவாசமற்று அலைந்து அழியும்
    மாசுபட்ட மண்டையரல்ல நாம்.
நாம் மனிசர்
    இன் சொல் எங்கள் வாய்மொழி
    இன்முகம் எங்கள் உடல் மொழி
    இன்னா செய்வாரோடும் இணங்கியொழுகல் எங்கள் வழி
    தன்னாதிக்கத் திமிராரைத் தவிர்த்தல் நாம் காணும் ஒளி.
நாம் மனிசர்
    நன்மைகள் செய்வோம்
    நணபரைப் பெறுவோம்
    மற்றோர் மகிழ்வுக்காய் இன்பங்கள் பொழிவோம்
    உற்றோர் உறவோர் உலகினை
    ஆள்வோம். ஆம்.
நாம் மனிசர்
    எழுந்து நடப்போம்.

- செண்பகன் -



## வாழ்க்கை எனும் வேதாந்தம்

வாழ்க்கை ஒரு
பாடம்
அத்தியாயங்களின்
நீட்சி
அறிவின்
பெருக்கம்
பனுவல்களின்
பாகம்
கையேடாய்க்
காண்கையில்
பெருவழிகாட்டி
வானவில்லாய்
வரைகையில்
காலக்கண்ணாடி
பெட்டகமாய்ப்
பூட்டுகையில்
இதயங்களின்
அமிர்த சஞ்சீவி
இரகசியமாய்ப்
பூஜிக்கையில்
மனுதர்ம விதிகளின்
திறவுகோல்
நம்பிக்கையின்
காட்டுருவாகில்
வாழ்ந்தவர்களின்
அநுபந்தம்
நாடகமாய்
வேடமிடுகையில்
நடிகனின் கலை
தீபமாய்ப்
பிரகாசிக்கையில்
ஒளிசிந்தும் விளக்கு
இலக்கியமாய்
யாத்தால்
இலக்கண நெஞ்சங்களின்
மனோகர காவியம்
தர்மமாகில்
தவப்பேறு
சித்திரமாக
எழுதுகையில்
இறை ஆன்ம பேதமற்ற
அபேதவாதம்.

- செல்வகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org